DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1361 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 6, 2022


# "கடல் கடந்து வருகை தரும் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் வரவேற்று மதிப்பளிக்கும் தமிழ்க் கனடிய உள்ளங்களைப் பாராட்டுகின்றேன்."

## கவிதை நூல்கள் வெளியீட்டு விழாவில் கவிஞர் அ. தமிழரசி நன்றி தெரிவிப்பு

"தமிழகத்திலிருந்து கடல் கடந்து கனடாவிற்கு வருகை தரும் என் போன்ற எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கலைஞர்களையும் வரவேற்று மதிப்பளிக்கும் தமிழ்க் கனடிய உள்ளங்களைப் பாராட்டுகின்றேன். இந்த மண்ணில் வாழும் அனைத்து படைப்பாளிகளையும் அத்துடன் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்களையும் மற்றும் இங்கு தங்கள் நேரங்களை ஒதுக்கியும் அன்பளிப்புக்களை வழங்கியும் ஆதரவு வழங்குகின்ற அன்பான வர்த்தக உள்ளங்களையம் நான் பாராட்டுகின்றேன்."

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுரோவில் நடைபெற்ற தனது கவிதை நூல்கள் வெளியீட்டு விழாவில் நன்றி தெரிவித்து உரையாற்றியபோது தமிழகத்தைச் சேர்ந்த திருமதி அண்ணாமலை தமிழரசி தெரிவித்தார்.

*(உள்ளே 13ம் பக்கத்தில் தொடர்ச்சி)*




RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.


# Majestic City தமிழர் அங்காடியில் திறந்து வைக்கப்பெற்ற EXPRESS AIR பிரயாண முகவர் நிலையம்



கடந்த 30-04-2022 சனிக்கிழமை மதியம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள MAJESTIC CITY தமிழர் அங்காடியின் உள்ளே திறந்து வைக்கப்பெற்ற EXPRESS AIR "எக்ஸ்பிரஸ் ஏயர்" பி-ரயாண முகவர் நிலையத்தின் திறப்பு விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்

திறப்பு விழாவிற்காக அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் என அனைவரையும் அன்புடன் வரவேற்ற உரிமையாளர் ரஜீவன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் விருந்துபசாரத்தையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். வர்த்தகப் பிரமுகர்களான நண்பர்கள் பலர் அங்கு கலந்து கொண்டு தங்கள் ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ந்தனர்.

*(உள்ளே 13ம் பக்கத்தில் தொடர்ச்சி)*


தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE & FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON AD TEAM

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**


# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## யாழ்ப்பாணம் பளையில் 134 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பளையில் (ஏ9) கண்டி வீதிக்கு அருகிலும் பஸ் நிலையத்திலிருந்து சிறிது தூரத்திலும் அமைந்துள்ள 134 பரப்பு தென்னங்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. பளை மத்திய கல்லூரிக்கு மிக அருகில்.

ஒரு பரப்புக் காணி 10 இலட்சத்திலிருந்து 12 இலட்சம் வரை. முழுக்காணியும் ஒன்றாகவே விற்கப்படும். தென்னைப் பயிர்ச் செய்கைக்கும் கடைத் தொகுதிகள் கட்டுவதற்கும் ஏற்றது.

தொடர்புகளுக்கு கனடாவில் உள்ள உரிமையாளரோடு தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி 416 274 5532 அல்லது
மின்னஞ்சல் - sethukavalar@yahoo.com

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## வீடு மற்றும் Basement ஆகியன வாடகைக்கு

**Brimley & Lawrence** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல் தளம் மற்றும் **Basement** ஆகியன தனித்தனியாக வாடகைக்கு வழங்கப்படும். சமையல் அறைகள் குளியல் அறைகள் மற்றும் **Laundry** ஆகியனவும் தனித்தனியாக உள்ளன. பாடசாலைகள் தமிழர் கடைகள் ஆகியனவும் மிக அருகில் உள்ளன.

**தொடர்பு கொள்ளுங்கள்**
**647-981-1997**

## CANADA SUMMER JOB PROGRAM - JOB POSTING

### Marketing Assistant

Responsibilities
- -Undertake daily administrative tasks to ensure the functionality and coordination of the office activities
- -Support marketing manager in organizing various projects
- -Update spreadsheets, databases and inventories with statistical, financial and non-financial information
- -Assist in the organizing of promotional events and traditional or digital campaigns and attend them to facilitate their success
- -Communicate directly with clients and build trusting relationships

Requirements and skills
- -Proven experience as a marketing assistant
- -Good understanding of office management & marketing principles
- -Demonstrable ability to multi-task and adhere to deadlines
- -Well-organized with a customer-oriented approach
- -Excellent knowledge of MS Office
- -Good communication and people skills
- -High School diploma; or relevant work experience

**Salary :** Minimum wage according to the Government Summer Job Program
**Duration of engagement: 3months**

Please forward your application with your updated resume by email to:
**uthayannews@yahoo.com**

## ATSIN LAW சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்/பெண்கள் இருவரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்
**Jeya: (647) 669-2739**

## BASEMENT FOR RENT

**Available immediately. Newly renovated 2 bedroom basement in Stouffville (9th & Stouffville Rd). Spacious, super clean & modern. 3-pc bath. Separate entrance. Washer/dryer in apartment (not shared). Water softener, Filtered water system/faucet installed.**
**Easy quick access to GO Train stn. Close to numerous grocery stores, Walmart, Great for families, schools 2min walk, parks on the street.**
**Required: 1. Rental Application 2. Updated Equifax Report 3. Employment Letter 2 References. Rent: $1800 all inclusive**
**Please call/text 416-303-6931**

## கொன்வீனியன்ஸ் கடையில் வேலை வாய்ப்பு

**Parliament & Wellesley** சந்திப்புக்கு அருகில் உள்ள கொன்வீனியன்ஸ் கடை ஒன்றில் **Cashier** ஆக பணியாற்றுவதற்கு ஆண் ஒருவர் தேவை. பணி ஓய்வு பெற்றவர்கள் **(Pensioners)** விரும்பத்தக்கது.

**தொடர்பு கொள்ளுங்கள்:-**
**416-473-8520**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## உதயன் கதிரோட்டம்

# இலங்கைக்கான தமிழக அரசின் உதவிகள் மக்களுக்காகவா அன்றி?

இலங்கையில் தற்போது நிலவி வரும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இலங்கையில் வாழும் தமிழர் சிங்களவர் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் என்ற நால் வகை மக்களும் ஒரே வகையான இடர்களையே சந்தித்து வருகின்றனர்.இந்நெருக்கடி நிலைக்கு விரைவாகவும் வேகமாகவும் தீர்வு காணவென அரசாங்கத்தினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறப்பட்டாலும் அந்த நடவடிக்கையிலும் பார்க்க ஜனாதிபதியையும் பிரதமரையும் மற்றும் 'கோடரிக்காம்புகளாக' மாறிவிட்ட தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரையும் பாதுகாக்கும் முயற்சிகளே அங்கு அதிகமாக எடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கின்றோம்.

இந்த நிலையில் இந்தியா உள்ளிட்ட நேசநாடுகளும், சர்வதேச அமைப்புகளும் இந்நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கு உதவும் வகையில் உதவி ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றன. நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பி வைக்கவும் பல நாடுகள் முன்வந்துள்ளன.

இவ்வாறான சூழலில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கைக்கு இந்திய மத்திய அரசின் உதவி ஒத்துழைப்புகளுக்கு மேலதிகமாக, தமிழ்நாடு மாநில அரசு உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்கள் அடங்கலான மனிதாபிமான உதவிகளை விரைவாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இதற்கென மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக விேட தீர்மானமொன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது. பொதுவாகவே தமிழகத்திலிருந்து எந்த விண்ணப்பங்கள் மத்திய அரசிற்கோ அன்றி பிரதமர் மோடிக்கோ அனுப்பப்படுகையில் அவை நிராகரிக்கப்பட்டோ அன்றி தட்டிக்கழிக்கப்பட்டோ இருக்கும் நிலையில் இந்தியாவின் வெளியுறவு அமைச்சகம் தமிழ்நாட்டு அரசின் இந்த வேண்டுகோளை ஏற்று அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு காரணம் மக்கள் சார்ந்த நன் மதிப்பா அல்லது சார்ந்த உறவின் வெளிப்பாடா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை நாம் கவனித்து வருகின்றோம். தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள மனிதாபிமான உதவிகள் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபாய 'வாய்' திறக்காத நிலையில் அவரது சகோதரர் மகிந்தா தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளார். சில வருடங்களுக்கு முன்னர் முதலமைச்சர் அவர்களின் சகோதரி கனிமொழி கொழும்பு சென்று மகிந்தாவோடு குசலம் விசாரித்து பரிசுப் பொருட்களையும் பரஸ்பரம் பெற்றுக்கொண்டதை மக்கள் இன்னும் மறந்து விடவில்லை. அவர்கள் ஆளப்பிறந்தவர்கள் என்ற வகைக்கும் அடங்கியுள்ளார்கள். எனவே அவர்களின் சந்திப்புக்களும் அவசியமானவையே.

இந்த நிலையில், இலங்கையின் தற்போதைய நிலைமைக்கு ஊழல் அமைச்சர்களே காரணம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பகிரங்கமாக குற்றம் சுமத்தியுள்ள விடயம் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் அதிர்வலைகளைத தோற்றுவித்துள்ளது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

ஊழல் அமைச்சர்களுடன் தனக்கு பிரச்சினை இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்துக்கள் 'வெள்ளம் வரும் முன்னர் அணையைக் கட்டியிருக்கலாமே" என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கின்றது . மேலும் நாட்டைக் கட்டியெழுப்ப தமக்கு நல்ல தொலைநோக்கு பார்வைகள் மற்றும் திட்டங்கள் இருப்பதாகவும், ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்தத் தவறியதாகவும் ஜனாதிபதி கோத்தாபாய தெரிவித்துள்ளமை பலருக்கு மூக்கில் விரலை வைக்கச் செய்துள்ளது என்றும் கூறலாம்.

துனது மந்திரிகள் மீது பழியைப் போட்டுள்ள கோத்தபாய மாளிகைக்குள் பாதுகாப்புகளுக்கு மத்தியில் இருக்கின்றபோது. நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு பதிலாக ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என மக்கள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மக்கள் போராடி வருவதையும் இதுவரை காலமும் இடம்பெறாத வகையில் ஆட்சியில் உள்ளவர்கள் பதவிகளை விட்டு நீங்க வேண்டும் என்ற 'கொந்தளிப்பான' நிலை வெந்து கொண்டிருக்கும் போது தமிழ் நாட்டு மக்களின் உதவிகள் தென்னிலங்கை மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் தவறிழைத்த இலங்கை அரசின் தலைவர்கள் பதவிகளுக்குரிய நாற்காலிகளை விட்டு 'வீடு' செல்ல வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைகளையும் செவிமடுத்து அந்த 'கொதிக்கும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உலகெங்கும் உள்ள அரசியல் தலைவர்களில் சிலராவது இலங்கை அரசின் தலைவர்களாக இன்னும் வீற்றிருப்பவர்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எவ்வாறாயினும், தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான உதவியை அனுப்பி வைக்க தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் வரலாற்றில் அழியாத்தடம் பதிக்கும் என்பதையும் நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

# கனடாவின் கிங்ஸ்டன் நகரில் றோயல் இராணுவ பயிற்சிக் கல்லுரியில் பயின்ற கெடற் அதிகாரிகள் நால்வர் நள்ளிரவில் நீரில் மூழ்கி மரணம்

*(பின் பக்கத் தொடர்ச்சி)*

தேசிய பாதுகாப்புத் துறையின் அறிக்கை ஒன்றின் படி 29ம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை மோட்டார் வாகனம் சம்பந்தப்பட்ட "மோசமான விபத்துச் சம்பவத்தில்" இறந்த நான்கு ஆண்டு அதிகாரி 'கெடற்' அதிகாரிகளுக்காக அவர்களது குடும்பங்களும் அவர்களொடு நெருக்கமான இராணுவு பயிற்சிக் கல்லூரிச் சமூகமும் துக்கம் அனுசரிக்கின்றன.என்றும் அறியப்படுகின்றது இராணுவு பயிற்சிக் கல்லூரிச் சமூகமும் இந்த துயரமான இழப்பால் பேரழிவிற்கு உள்ளாகியுள்ளது" என்று கல்லூரியின் பிரதான தளபதியான கொமடோர் ஜோசி குர்ட்ஸ் வெள்ளிக்கிழமை மாலை ஒரு செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

"பெற்றோர்களாக நாமே, அவர்களின் வலியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும், மேலும் இனி வரும் நாட்கள் மற்றும் வாரங்களில் அவர்களுக்கு துன்பகரமான நாட்களாக இருந்தாலும் நாம் எமது கல்லூரியின் சார்பாகவும் படையினர் சார்பாகவும் தொடர்ந்து ஆதரவை வழங்குவோம்." என்று குறிப்பிட்டுள்ளார். ஒன்டாரியோ ஏரி செயின்ட் லாரன்ஸ் நதியை சந்திக்கும் புள்ளி பிரடெரிக் தீபகற்பத்தில் உள்ள கிங்ஸ்டனில் உள்ள வளாகத்தில் என்ன நடந்தது என்பது பற்றிய சில விவரங்கள் வெள்ளிக்கிழமை மாலை வெளியிடப்பட்டன, ஆனால் இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நிகழ்ந்ததாக கனடாவின் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

**Frontenac Paramedics** இன் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், விபத்தில் சிக்கிய நால்வருக்கும் சிகிச்சை அளிக்கப்பெற்றது, ஆனால் அனைவரும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.. நீரில் மூழ்கிய மோட்டார் வாகனம் குறித்த அழைப்புக்கு அவசர சேவைகள் பதிலளித்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எமக்குக் கிடைத்த தகவல்களின் படி சுமார் 1,200 அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கொண்ட இடைத்தர பயிற்சி வளாகத்தில் இடம்பெற்ற இந்தநான்கு பயிற்சி நிலை அதிகாரிகளின் இழப்பு ஆழமாக உணரப்படும் என்று குர்ட்ஸ் கூறினார்.

"நான் இங்கு வசிக்கின்றேன். அந்த இளைஞர்களை நான் தினமும் பார்க்கிறேன்," என்று தெரிவித்த அவர் இந்த இழப்புக்கள் தொடர்பாக நினைப்பதும் மிகவும் . கடினம்." என்றார்

இந்த கோடையில் ஹோகார்த், ஹொன்சியு மற்றும் சலேக் ஆகியோர் இராணுவத்திலும், ஹோகார்த் மற்றும் சலேக் கவச அதிகாரிகளாகவும், ஹோன்சியு ஒரு தளவாட அதிகாரியாகவும் தங்கள் பயிற்சியைத் தொடங்கியிருப்பார்கள். ராயல் கனடியன் விமானப்படையில் மர்பி ஒரு விண்வெளி சுற்றுச்சூழல் கட்டுப்பாட்டாளராக வந்திருப்பார்கள்.

ஹோகார்த் மற்றும் சலேக் இருவரும் இராணுவ மற்றும் மூலோபாயப் படிப்புகளில் இளங்கலைப் படிப்பை முடித்தனர். ஹொன்சியுவும் மர்பியும் வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் நால்வரும் உயர் அதிகாரிகளாக வரவேண்டியவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

கனேடியப் படைகளின் தேசிய புலனாய்வு சேவைக்கு உதவ அதன் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்துள்ளதாக கிங்ஸ்டன் பொலிசார் கூறியுள்ள நேரத்தில் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டனர்.





ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
இணைந்து வழங்கும்
16ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மேமாதம் 7 சனிக்கிழமை
மாலை 3 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வில்லுப்பாட்டு
நடனம்
கரகம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் கலை விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி 416.291.7900, 416.291.8500 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
Thana Manickavasagar
416.728.5772
New Dentist in Your Neighbourhood
SANDHURST FAMILY DENTAL CLINIC
Dr. Pavithra Nantheeswarar DDS
416-299-1020
Fashion World Inc
பட்டு உலகின் தனித்துவம்
905 471 2223
அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough
ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஊரில்ஸ்
647.702.2159
TECHSOURCE
Computer & Electronics Liquidator
the co-operators
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த கட்டணத்தில் பெறுவதன் மூலம் மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel
ERAA SUPER MARKET
Tel: 416.292.2622
Tel: 416.269.2622
MULTIMILLION DOLLAR PRODUCER
Abi Amalan
416.732.1810
Amal Ganeshamoorthy
416.829.9993
Great Place • Great Service • Great Food • Great Memories
SCARBOROUGH CONVENTION CENTRE
20 Torham Place, Scarborough, ON M1X 0B3
416-335-6060
கனகாம்பிகை
தங்க நகை கடன்
416.269.7198
Niru நிரு
416 750 1976
416 750 8779
பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
அனைத்து பூஜைப் பொருட்களையும் மிக மலிவாகவும், சுத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 • 905.205.0011
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags, Paper Towels
Toilet Papers, Napkins
All kind of Plastic Bags

## Ontario's NDP Pledges Free or Low-Cost Dental Care for all Low-Income families, if Elected in June 2nd Provincial Election

# மாகாணத் தேர்தலில் என்டிபி கட்சி ஆட்சிக்கு தெரிவானால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு குறைந்த கட்டண பற் சிகிச்சைத் திட்டம்

## ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் தெரிவிப்பு



"எதிர்வரும் யூன் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள ஒன்றாரியொ மாகாணத் தேர்தலில் என்டிபி கட்சி ஆட்சிக்கு தெரிவானால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு இலவச அல்லது குறைந்த கட்டண பற் சிகிச்சைத் திட்டம் அறிமுகமாகும். மாகாண பாராளுமன்றத்தில் சட்டமூலமாகக் கொண்டுவரப்படவுள்ள இந்த திட்டத்தினால் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள இலட்சக் கணக்கான குறைந்த வருமானம் பெரும் குடும்பங்கள் பயனடையவுள்ளன". இவவாறு தெரிவித்தார் ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் அன்றியா ஹாவார்த்.

இன்று பிற்பகல் ரொறன்ரோ மாநகரில் இயங்கிவரும் தமிழ் ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களோடு அவர் நடத்திய நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே அன்றியா இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி ஊடகச் ச்நதிப்பி இந்த மாகாண அரசிற்கான தேர்தலில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்களான நீதன் சண்முகராஜா மற்றும், செந்தில் மகாலிங்கம் உட்பட வேறு மொழிகள் பேசும் வேட்பாளர்கள் மூவுரும் பங்கெடுத்தனர்.



முதலில் ஸ்காபுறோ கில்வூட் தொகுதியின் வேட்பாளர் கட்சித் தலைவர் அன்றியா அவர்களை அறிமுகம் செய்த பின்னர் அவரிடம் ஒலி வாங்கியைக் கையளித்தார்.

"ஒன்றாரியோ வாழ் தமிழ் மக்களுடன் நீண்ட நாட்கள் தொடர்பு கொண்டு அவர்களின் நலன்கருதியும் மற்றும் அவர்கள் தாயகத்தில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான ஆர்ப்பாட்டங்கள் மற்றுமு் அஞ்சலி நிகழ்வுகள் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு காட்டியவள் என்ற வகையில் தமிழ் மக்களின் குரல்களாக விளங்கும் தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகளை இங்கு சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்" என்று கூறியவண்ணம் தனது உரையை ஆரம்பித்த ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் அன்றியா ஹாவார்த் அவர்கள். மாகாணத்தில் ஆட்சியில் உள்ள டக்போர்ட் தலைமயிலான கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கம் இந்த மாகாணத்தின் மக்களுக்கு பல அநியாயங்களைச் செய்துள்ளது என்று கூறி அவற்றால் மக்களுகக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றியும் எடுததுரைத்தார்.



உதாரணமாக புதிய பாடசாலகளைக் கட்டுகின்றோம் என்று கூறுகின்ற முதல்வர் டக்போர்ட மற்றும் அவரது கல்வி அமைச்சர் ஆகிய இருவரும் எத்தனையோ பாடசாலைகளை மூடுவதற்கு காரணமாக விளங்கியுள்ளார்கள்.

அத்துடன் பாடசாலை ஆசிரியர் மற்றும் தாதியர்கள் ஆகியோர் விடயத்திலும் இந்த அரசாங்கம் அவர்களுக்கு பாதகத்தையே செய்துள்ளது. அவர்கள் அர்ப்பணிப்புடன் ஆற்றும் பணிகளுக்கான சன்மானமாக சம்பள உயர்வை மாகாண அரசு அங்கீகரிக்கவில்லை. "போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். தொடர்ந்து இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டுள்ள மாகாண மக்களுக்கான இலவச அலலது குறைந்த கட்டண பற் சிகிச்சையின் சிறப்புக்கள் எவையென்றும் ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து தமிழ் பேசும் ஊடகப்பிரதிநிதிகளை வரவேற்று ஸ்காபுறோ தென் மேற்கு தொகுதியின் வேட்பாளர் நீதன் சண்முகராஜா அவர்கள் உரையாற்றினார். அவர் தனது உரையில் என்டிபி கட்சிக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து வரும் தமிழ் ஊடக நிறுவனங்களோடு கட்சியின் தலைவரும் ஏனைய ஸ்காபுறோ பிராந்திய வேட்பாளர்களும் சந்திப்பதை தமிழ் பேசும் வேட்பாளர் என்ற வகையில் உவகை கொள்வதாகக் குறிப்பிட்டார்.

பின்னர் கேள்வி நேரத்தின்போது அங்கு சமூகமளித்திருந்த சில ஊடகங்களின் பிரதிநிதிகள் நியாயபூர்வமான கேள்விகளை முன்வைத்தனர்.

கிருஸ்ணா ரெலிகாஸ்ட் ஊடகத்தின் நிறுவனர் தனது கேள்வின் போது" இதற்கு முன்னர் மாகாண ஆட்சியில் இருந்த இரண்டு கட்சிகளுமே வாக்குறுதிகள் வழங்குவதும் பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் இருந்துள்ளன என்றும் அவற்றைப் போலவே இந்த தேர்தலில் வாக்குறுதிகளை மிகவும் கவனமாகப் பேணும் விடயத்தில் தாங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் என்று தனது கேள்வியை முன்வைத்தார்.

அதற்கு பதிலளித்த கட்சித் தலைவர் அன்றியா அவர்கள் நான் மட்டுமல்ல எமது கட்சியின் வேட்பாளர்களாகத் திகழும் அனைவரும் திறமை வாய்ந்தவர்கள். எனவே வாக்குறுதிகளைப் பேணுவதில் நாம் மிகவும் கவனமாக இருப்போம் என்றார் அவர்.

தொடர்ந்து கேள்வி பதில் நேரத்தில் தற்போதைய கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசின் மக்கள் விரோத செயற்பாடுகளை விபரித்த கட்சித் தலைவர் அன்றியா அவர்கள் இந்த அரசாங்கம் விட்ட தவறுகளை திருத்தி மாகாணத்தை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரும் முயற்சிகளில் நாம் இறங்கி வேலை செய்வோம்" என்றார்.

*இங்கே காணப்படும் படங்கள் கனடா உதயன் பிரிவினரால் எடுக்கப்பட்டவையாகும்.*

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinіccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இந்திய கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்த திருகோணமலை மீனவர்கள் 6 பேர் படகுடன் கைது



இந்திய கடல் எல்லையில் அத்துமீறி மீன்பிடித்த திருகோணமலை மீனவர்கள் 6 பேர் படகுடன் ஞாயிற்றுக்கிழமை (1) கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கடல் எல்லையில் இந்திய கடற்படையினர் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் இந்திய எல்லைப் பகுதியில் படகு ஒன்று நிறுத்த பட்டிருப்பதைக் கண்டு படகில் வந்த 6 பேரிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவர்கள் இலங்கையில் திருகோணமலையை சேர்ந்தவர்கள் என்பதும், எல்லை தாண்டி மீன் பிடிக்க வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் 6 பேரையும் இந்திய கடற்படையினர் கைது செய்து காரைக்கால் துறைமுகத்தில் திங்கட்கிழமை (2) மதியம் அழைத்து வந்தனர்.


தொடர்ந்து அவர்களிடம் கடலோர காவல் குழும ஆய்வாளர் ராஜா தலைமையில் போலீசார் விசாரணை நடத்தினர்.

அதில் அவர்கள், இலங்கை திருகோணமலையை சேர்ந்த அனுரா என்பவருக்குச் சொந்தமான படகில் கடந்த 21ம் தேதி திருகோணமலையில் இருந்து மீன் பிடிக்க வந்த போது எல்லை தாண்டி மீன் பிடித்தமை தெரிய வந்தது.

இதையடுத்து மதுஷா, அமிலா மசங்கா, சுஜித் பண்டாரா, புதிகா, உஷன் மதுசன், துங்கா மகேலா ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்த நாகை கடலோர காவல் குழும போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

- மன்னார் நிருபர்

# மே தினம் அன்று கடலுக்கு சென்ற சிறுவர்கள் உட்பட 13 பேர் இந்தியா செல்வதாக கூறி கைது செய்த கடற்படையினர்




தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (1) ஓய்வை கழிப்பதற்காக தலை மன்னார் கடலுக்கு சென்ற 10 சிறுவர்கள் உட்பட 13 நபர்களை தலை மன்னார் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (1) தொழிலாளர் தின விடுமுறையை முன்னிட்டு மன்னாரில் கரையோர பகுதிகளை சேர்ந்த பல குடும்பங்கள் பொழுதை கழிப்பதற்கு கடற்கரை பகுதிக்கு சென்ற நிலையில் சிறுவர் குழு ஒன்றும் கடற்கரைக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சிறுவர்கள் இந்தியா செல்ல முயற்சிப்பதாக தெரிவித்து தலை மன்னார் கடற்படையினரால் 13 நபர்களும் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு திங்கட்கிழமை (02) மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட நபர்கள் சார்பாக சட்டத்தரணி ஏு.டினேசன் ஆஜராகிய நிலையில் கைது செய்யப்பட்ட அனைவரும் கடற்கரையை பார்வையிட சென்றதாகவும் கடற்படையினர் வேண்டும் என்று அவர்களை கைது செய்ததாகவும் சமர்பணம் மேற்கொண்டார்.

இந்த நிலையில் வழக்கை விசாரித்த மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி 13 நபர்களையும் சட்ட வைத்திய அதிகாரியிடன் ஒப்படைத்து அறிக்கை சமர்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

அதனை தொடர்ந்து அறிக்கையை பார்வையிட்ட பின்னர் குறித்த 10 சிறுவர்களும் பெற்றோர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்ட தோடு 3 நபர்களையும் பிணையில் செல்ல அனுமதி அளித்தார்.

கடந்த மாதமும் மன்னார் மாவட்டத்திற்கு சுற்றுலாவிற்கு என வருகை தந்து விடுதி ஒன்றில் தங்கியிருந்த குடும்பம் ஒன்றையும் பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கைது செய்து விசாரணை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# சிறப்பாக நிகழ்ந்தேறிய செம்பசுமை மே தினம்




தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினம், ஞாயிற்றுக்கிழமை (01.05.2022) நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறியது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இம் மேதினப் பொதுக்கூட்டத்தில் சமூகச் செயற்பாட்டாளர் திரு. ம. செல்வின் இரேனியஸ், அரசியல் ஆய்வாளர் திரு நிலாந்தன், தென்னிலங்கையைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர் திரு. றுக்கி பென்னாண்டோ ஆகியோர் உரையாற்றினார்கள்.





பெருமளவிலானோர் கலந்துகொண்டிருந்த இச் செம் பசுமை மேதினக் கூட்டத்தில் வரவேற்புரையை திரு. க. ரவிக்குமார் அவர்களும், நன்றியுரையை திரு. சண். தயாளன் அவர்களும் ஆற்றியிருந்தார்கள்.

ஒவ்வொரு தேசிய இனமும் அதன் தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருந்தாலே சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். அவ்வாறு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்போது மாத்திரமே உழைப்புக்கான உத்தரவாதமும் கிடைக்கும். என்ற கருத்தை முன்னிறுத்தித் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் சர்வதேச உழைப்பாளர் தினத்தை ஆண்டுதோறும் செம்பசுமை மேதினமாகக் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு விஜயம்

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை செவ்வாய்க்கிழமை (3) காலை 9.30 மணியளவில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்தார்.

வருகை தந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட குழுவினர் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதனைத் தொடர்ந்து இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு வரும் திருக்கேதீஸ்வர ஆலய கட்டுமாணப் பணிகளை பார்வையிட்டதோடு, திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.



இதன் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான் மற்றும், குழுவினர் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# மன்னாரில் இருந்து இந்தியா செல்ல முயன்ற திருகோணமலையைச் சேர்ந்த 12 பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது - மன்னாரை சேர்ந்த இரு படகோட்டிகளும் கைது

மன்னாரில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவிற்கு படகில் சென்ற மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் உள்ளடங்களாக 14 நபர்களை தாழ்வுபாடு கடற்பரப்பில் வைத்து புதன்கிழமை (4) அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையை 7 சிறுவர்கள், 3 பெண்கள், 2 ஆண்கள் உள்ளடங்களாக சேர்ந்த 3 குடும்பம் 12 நபர்கள் மற்றும் மன்னாரை சேர்ந்த படகோட்டிகள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.





கைது செய்யப்பட்ட 14 பேரும் புதன்கிழமை (4) காலை 5 மணியளவில் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின் இரண்டு படகோட்டிகள் உள்ளடங்களாக 14 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

இந்தியா செய்திகள்
India News

# நிலக்கரி தட்டுப்பாட்டால் மின்வெட்டில் சிக்கி இருளில் மூழ்கிக் கிடக்கும் வட மாநிலங்கள்



வெப்ப அலை காரணமாகவும், தொழில்நுட்ப கோளாறு காரணமாகவும் நிலக்கரி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், பல்வேறு மாநிலங்கள் பல மணி நேரம் மின்தடையை சந்தித்து வருகின்றன.

இந்தியா நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தியையே பெரிதும் நம்பியுள்ளது. ஆனால், தற்போதைய வெப்ப அலை காரணமாகவும், தொழில்நுட்ப கோளாறு காரணமாகவும் அதன் உற்பத்தி திறன் கடுமையாக பாதிப்படைந்துள்ளது. அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்வதில் மாநிலங்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

ஜார்க்கண்ட்

பீக் ஹவர்ஸின் போது மாநிலத்தில் 1,800-2,100 மெகாவாட் மின் தேவை உள்ளது. ஜார்க்கண்டிற்கு ஏப்ரல் மாதத்திற்கு முன்பு சுமார் 1,850 மெகாவாட் மின்சார சப்ளை வழங்கப்பட்டது. மாநில அரசாங்கம் 200-250 மெகாவாட் பற்றாக்குறையை சமாளித்து வந்தது. ஆனால் தற்போது மின்சாரத்தின் தேவை 2,500-2,600 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக, தாமோதர் பள்ளத்தாக்கு கார்ப்பரேஷன் வழக்கமாக வழங்கும் 550 மெகாவாட்டுடன் கூடுதலாக 200 மெகாவாட் வழங்க வேண்டும் என்று முதல்வர் ஹேமந்த் சோரன் வேண்டுகொள் விடுத்துள்ளார். மின் பரிமாற்றத்திற்கான ஏலத்தையும் மாநிலம் முன்னெடுத்தது. ஆனால் கிடைக்கவில்லை. நிலைமையை சமாளிக்க தனியார் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஜம்மு காஷ்மீர்

ஜம்மு காஷ்மீரின் சில பகுதிகள் 16 மணி நேரத்திற்கும் மேலான மின் தடையை எதிர்கொள்கின்றன. அங்கு 3 ஆயிரம் மெகாவாட் தேவைப்படும் நிலையில், பாதியளவிலான மின்சாரமே வழங்கப்படுகிறது. ஜம்மு காஷ்மீரின் சொந்த மின் திட்டங்களின் திறன் உற்பத்தி குறைந்தது, மாநிலத்திற்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. யூடியின் மின் திட்டங்கள் 1,211 மெகாவாட் உற்பத்தி செய்யும் நிலையில் நிர்வகிக்கப்பட்டன. ஆனால், அவை தற்போது 450 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்கிறது.

காஷ்மீரில் என்எச்பிக்கு சொந்தமான திட்டங்கள் 2000 மெகாவாட் நிறுவப்பட்ட திறனைக் கொண்டிருந்தாலும், அவை 1,400 மெகாவாட்டிற்கும் குறைவாகவே உற்பத்தி செய்கின்றன. அதிலிருந்து மாநிலத்திற்கு 150 மெகாவாட் மட்டுமே வழங்கப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரில் சுமார் 2,300 மெகாவாட்கள் பற்றாக்குறை இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால், அதிக கட்டணம் மற்றும் மின்சாரம் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் குறைவாக இருப்பதால், 800 மெகாவாட் மின்சாரம் மட்டுமே வாங்குகிறோம் என்றனர்.

ராஜஸ்தான்

ஏப்ரல் 2021 இல் தினசரி மின் தேவை சுமார் 2,131 லட்சம் யூனிட்களாக இருந்தது. ஆனால், தற்போது அதன் தேவை 2,800 லட்சம் யூனிட்களாக அதிகரித்துள்ளது. அதேபோல், அதிகபட்ச தேவை 11,570 மெகாவாட்டாக இருந்தது, தற்போது 13,700 மெகாவாட்டாக உள்ளது.

எரிசக்தி துறையின் முதன்மை செயலாளர் ஏ சாவந்த் கூறுகையில், நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள நிலக்கரி நெருக்கடி காரணமாக, உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையங்கள் முழு திறனில் செயல்படவில்லை. மாநிலத்தின் மின் ஆலைகளால் 10,110 மெகாவாட் வரை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், தற்போது 6,600 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்கின்றன.

அரியானா

அரியானாவில் 3,000 மெகாவாட் பற்றாக்குறை எதிர்கொள்கிறது. இதுகுறித்து அம்மாநில முதல்வர் மனோகர் லால் கட்டார் கூறுகையில், மின்சார தேவையை குறைக்க அரசாங்கம் பல வழிகளில் முயன்று வருகிறது. அதானி பவர் லிமிடெட் உடன் முந்த்ரா மின் நிலையத்திலிருந்து விநியோகத்தை மீட்டெடுப்பதற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. அவை நிகழ்ந்தால், எதிர்காலத்தில் 1,000 மெகாவாட் மின் விநியோகத்தை மறுசீரமைக்க முடியும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

மின்சாரத் துறை அமைச்சர் ரஞ்சித் சிங் கூறுகையில், வெப்ப அலை மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களை மேற்கோள் காட்டி தேவை அதிகரிப்பை விளக்கியுள்ளார். அதானி பவர் நிறுவனத்திடம் இருந்து 1400 மெகாவாட் மின்சாரம் இன்னும் ஒரு வாரத்தில் கிடைக்கும் என நம்புகிறேன். விரைவில் மின்சார பிரச்சினை சீராகும் என நம்புவதாக தெரிவித்தார்.

பஞ்சாப்

நிலக்கரி தட்டுப்பாடு மற்றும் தொழில்நுட்ப கோளாறுகளே தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணம் என கூறப்படுகிறது. மாநிலத்தின் தேவை 7,800 மெகாவாட்டை எட்டிய போது, மாநிலத்தின் மின்சார இருப்பு 7 ஆயிரம் மெகாவாட்டாக இருந்தது. இதன் காரணமாக, குடியிருப்பு பகுதிகளில் 2 முதல் 5 மணி நேரம் பவர் கட் செய்யப்படுகிறது. தொழில்துறை பகுதிகளில் மின்சாரம் தடை செய்யப்படவில்லை. கோதுமை அறுவடையின் காரணமாக விவசாய மின் பயன்பாடு குறைவாக உள்ளது.

பஞ்சாபில் அனல் மின் நிலையங்களில் 5,480 மெகாவாட் உற்பத்தி செய்ய முடியும். ஆனால், தற்போது ஏற்பட்ட நிலக்கரி பற்றாக்குறை காரணமாக 3,700 மெகாவாட் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

சுமார் 1,000 மெகாவாட் எ.்.ப் திறன் பராமரிப்பில் இருப்பதாகவும், மீதமுள்ள மின்தேவை இடைவெளி தொழில்நுட்ப கோளாறுகளால் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒடிசா

ஒடிசா மாநிலம் 400 மெகாவாட் மின்சார பற்றாக்குறையை எதிர்நோக்குகிறது. மாநிலத்திற்கு சரிசாரியாக 4,150 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. அதிலும், பீக் ஹவர்ஸின் அதிகபட்ச தேவை 4,450 மெகாவாட்டாக உள்ளது.



இந்த பற்றாக்குறை தற்காலிகமானது என்றும், இன்னும் ஒரு வாரத்தில் நிலைமை சீராகும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுந்தர்கர் மாவட்டத்தில் என்டிபிசியின் 441 மெகாவாட் அலகு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதால், மின்சார தேவையில் பற்றாக்குறை ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஒடிசா பவர் ஜெனரேஷன் கார்ப்பரேஷன் யூனிட் ஆண்டுதோறும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டின் நிலை என்ன?

சில நாள்களுக்கு முன்பு, தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இரவு நேரத்தில் சுமார் 3 மணி மின்சாரம் நிறுத்தப்பட்டது. இதுதொடர்பாக மக்கள் கேள்வி எழுப்புகையில், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறைக்கு மத்திய அரசே காரணம் என்று மின் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றம்சாட்டினார். மத்திய தொகுப்பில் இருந்து தென் மாநிலங்களுக்கு வழங்கப்படும் மின்சாரம் சுமார் 750 மெகாவாட் திடீரென தடைபட்டது. இதன் காரணமாக சில இடங்களில் ஏற்பட்ட மின்பற்றாக்குறையை சமாளிக்க நமது வாரியத்தின் உற்பத்தித்திறனை உடனடியாக அதிகரித்தும், தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றார்.

மேலும், சட்டப்பேரவையில் பேசிய அவர், தமிழ்நாட்டில் 2 நாட்கள் மட்டுமே மின் வெட்டு இருந்தது. அந்த மின்வெட்டும் சரி செய்யப்பட்டுவிட்டது. திமுக ஆட்சி அமைந்தவுடன் மின் வெட்டு என்று மாய தோற்றத்தை சிலர் ஏற்படுத்தி வருகின்றனர் இப்போது சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது என்றார். தற்போது தமிழ்நாட்டில் மின் விநியோகம் சீராகவே உள்ளது.



# "கோவில் அலுவலகங்களில் அசைவ உணவு"

## தமிழக சட்டசபையில் கவனத்திற்கு கொண்டு வந்த எம்.எல்.ஏ

கோவில்களில் உள்ள அலுவலங்களில் அசைவ உணவு சாப்பிடப்படுகிறது என சட்டசபையில் பா.ஜ.க எம்.எல்.ஏ சி.கே.சரஸ்வதி எழுப்பிய கேள்விக்கு "இனி அதற்கு தடை விதிக்கப்படும்" என அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று நடைபெற்ற மானிய கோரிக்கை விவாதத்தில் பேசிய பா.ஜ.க உறுப்பினர் சி.கே.சரஸ்வதி கூறியதாவது, "கோவில்களில் உள்ள அலுவலகங்களில் அசைவ உணவு சாப்பிடப்படுகிறது இதனை அறநிலையத்துறை நடவடிக்கை எடுக்கவேண்டும்" என குற்றம்சாட்டினார். அதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது, "கோவில் அலுவலகங்களில் அசைவ உணவு சாப்பிட அனுமதி இல்லை, எந்த கோவிலில் அது நடந்ததாக சொன்னால் அதற்கு தடை நடவடிக்கை எடுக்கப்படும்" எனவும் தெரிவித்தார்.

எனவே இனி கோவில் அலுவலகங்களிலும் அசைவ உணவு சாப்பிடுவது தடை செய்யப்படுகிறது அப்படி மீறி யாராவது சாப்பிட்டால் அதை அறநிலையத்துறைக்கு கவனத்தில் கொண்டு வருவதாகவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

# கச்சத்தீவை கட்டாயம் பா.ஜ.க மீட்கும் என உறுதியளித்துள்ளார் சி.பி.ராதாகிருஷ்ணன்



கச்சத்தீவை பிரதமர் மோடி கட்டாயம் மீட்டு தமிழக மீனவர்களுக்கு கொடுப்பார், இதில் பா.ஜ.க. உறுதியுடன் இருக்கிறது என்று அக்கட்சியின் மூத்த தலைவர் சி.பி.ராதாகிரு'ணன் கூறியுள்ளார்.

ஈரோட்டில் பா.ஜ.க. நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு கச்சத்தீவு, பஞ்சு விலையேற்றம், ஜி.எஸ்.டி. உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக பேசினார். பா.ஜ.க., தமிழ் மொழியை மிகவும் உயர்வாக மதிக்கிறது. பிரதமர் மோடி சமஸ்கிருதத்தைக் காட்டிலும், தமிழ்மொழி உயர்வானது என்று கூறியுள்ளார். எனவே இந்தி, சமஸ்கிருதத்தை மத்திய அரசு புகுத்துவதாகக் குற்றம்சாட்டுவது தவறானது.

மேலும், அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கூட இந்தியாவை உயர்வாக நினைக்கிறது. விரைவில் மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக இந்தியா உருமாறி வருகிறது. அது மட்டுமின்றி காங்கிரஸ், தி.மு.க. தாரை வார்த்த கச்சத்தீவை மீட்பதில் மத்தியில் உள்ள பா.ஜ.க. அரசு தீவிரமாக உள்ளது. எனவே அதுதான் எங்களின் கொள்கையும் ஆகும். விரைவில் இந்த விவகாரத்தில் மீனவர்கள் நல்ல முன்னேற்றத்தை காண்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியா செய்திகள் India News



# திருப்பூர் மாவட்டம் பல்லடம் பாடசாலையில் திடீரென மயங்கிய 7ஆம் வகுப்பு மாணவி உயிரிழப்பு

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே அரசுப் பள்ளியில் 7ஆம் வகுப்பு பயிலும் மாணவி நிதர்சனா (12) திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். இதுகுறித்து காமநாயக்கன்பாளையம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை அடுத்த பொங்கலூர் பகுதியைச் சேர்ந்தவர் மாணிக்கம். பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் நிதர்சனா (12). பொங்கலூர் காட்டூர் அரசுப் பள்ளியில் 7-ஆம் வகுப்பு பயின்று வருகிறார். வழக்கம்போல் பள்ளிக்கு சென்ற நிதர்சனா திடீரென வாந்தி எடுத்து மயக்கமடைந்து விழுந்துள்ளார். உடனடியாக பள்ளி ஆசிரியர்கள் மாணவியை பொங்கலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாணவியை பல்லடம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பல்லடம் அரசு மருத்துவமனையில் மாணவியை பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலேயே அவர் உயிரிழந்ததாக தெரிவித்தனர். தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு வந்த காமநாயக்கன் பாளையம் போலீசார் மாணவியின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணை மேர்கொண்டு வருகின்றனர்.

# சென்னை விதுர் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற தேனிசைச் செல்லப்பா அவர்களின் 81ஆவது பிறந்தநாள் விழா







21-04-2022 வியாழக்கிழமை அன்று 6 மணிக்கு சென்னை பல்லவபுரம் விதுர் மண்டபத்தில் பாசறைப் பாணர் தேனிசைச் செல்லப்பா அவர்களின் 81ஆவது பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 50ஆண்டு காலத்திற்கும் மேலாக தன்னுடைய இசைத் திறமையை தமிழ், தமிழர் எழுச்சிக்காக ஒப்படைத்துக்கொண்டு மக்களை மகிழ்ச்சிப் பெருக்கிலும், உணர்ச்சி வெள்ளத்திலும் ஆற்றிய பெருமைக்குரிய தேனிசைச் செல்லப்பாவிற்கு உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் "பாசறைப் பாணர்" என்ற விருது வழங்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் தமிழர் வாழும் நாடுகளுக்குச் சென்று தன்னுடைய இன்னிசையால் அனைவருக்கும் உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டிய பெருமை அவருக்குரியது. பாவேந்தர் பாரதிதாசனின் பாடல்கள், உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தனின் தமிழீழ விடுதலை கீதங்கள் ஆகியவற்றை மட்டுமே மேடைதோறும் பாடிய ஒரேயொரு தமிழ் இசைவாணர் இவர் மட்டுமே. இவரின் பாடல்கள் அடங்கிய ஒலிப்பேழைகளும், குறுந்தகடுகளும் உலகத் தமிழர்களின் இல்லங்களில் இன்றும் எதிரொலிக்கின்றன.

81ஆவது அகவையை எட்டியுள்ள பாசறைப் பாணர் தேனிசைச் செல்லப்பா மற்றும் அவரது துணைவியார் ஆகியோருக்கு உலகத் தமிழர்களின் சார்பில் பல்லாண்டு! பல்லாண்டு!! கூறுவதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இவ்விழாவினையொட்டி உலகத் தமிழர் பேரமைப்புக்கு அவரின் மகன் இளங்கோ செல்லப்பா மற்றும் குடும்பத்தினர் ரூ. 5,000/-நன்கொடை வழங்கினர்.


# மதுரை மருத்துவக் கல்லூரியில் சமஸ்கிருதத்தில் உறுதிமொழி மருத்துவ பீடாதிபதி அதிரடி மாற்றம்

மதுரை மருத்துவக் கல்லூரியில் சமஸ்கிருதத்தில் உறுதிமொழி எடுக்கப்பட்டதை அடுத்து கல்லூரி அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டார். மதுரை மருத்துவக் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்கள் 250 பேரை வரவேற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவரும் கல்லூரி நிர்வாகத்தின் ஏற்பாட்டின் பேரில் உறுதிமொழி ஏற்றனர்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பழனிவேல் தியாகராஜன், பி.மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆங்கில உறுதிமொழி ஏற்பில் சமஸ்கிருத வாக்கியங்கள் அடங்கிய உறுதிமொழியும் இருந்ததாக சர்ச்சை எழுந்தது. இதற்கு அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்தது.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் கல்லூரி டீன் ரத்தினவேல் காத்திருப்போர் பட்டியலுக்கு இடமாற்றம் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியின் உத்தரவிட்டுள்ளார். மேலும், சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்றதாக கூறப்படும் விவகாரத்தில் துறை ரீதியான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வழக்கமான "இப்போகிரேடிக்" உறுதிமொழிக்கு பதில் "மகரிஷி சரக் சப்த்" (சமஸ்கிருதத்தில்) உறுதிமொழி எடுத்தது கண்டிக்கத்தக்கது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மாணவர்கள் சமஸ்கிருதத்தில் உறுதிமொழி ஏற்றது குறித்து கல்லூரி முதல்வரிடம் மருத்துவ கல்வி இயக்குனரகம் விளக்கம் கேட்டுள்ளது.

கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# ஒன்றாரியோ மாகாண தேர்தலில் மீண்டும் களம் இறங்கியுள்ள அரிஸ் பாபிகியன் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார்







ஒன்றாரியோ மாகாண தேர்தலில் மீண்டும் களம் இறங்கியுள்ள மக்கள் சேவகர் அரிஸ் பாபிகியன் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார்.

300க்கும் மேற்பட்ட Scarborough-Agincourt வாக்காளர்கள், சமூகத் தலைவர்கள், வணிகத் தலைவர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள், ஆகியோர் மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளரும் MPPயுமான Aris Babikian அவர்களது மறுதேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கும் ஒரு திறந்தவெளி கூட்டத்தில் கடந்த சனிக்கிழமையன்று கலந்து கொண்டனர்.

MPPக்கள் Raymond Cho (Scarborough North), Vincent Ke (DonValley North), Billy Pang (Markham-Unionville), Vijay Thanigasalam (Scarborough - Rouge Park), மற்றும் Christina Mitas (Scarborough-Centre) ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

அவர்களின் உரைகளில், பேச்சாளர்கள் ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் குடியிருப்பாளர்களின் நலன்களுக்கு சேவை செய்வதில் பாபிகியனின் உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றைப் பாராட்டினர். அவர் தனது சமூகத்திற்கு கொண்டு வர உதவிய வரலாற்று சாதனைகளை அவர்கள் மேற்கோள் காட்டினர்.

அவர்கள் நியூ பிர்ச்மவுண்ட் மருத்துவமனைக்கான $1 பில்லியன் முதலீடு செய்தமை, டான் மில்ஸிலிருந்து மெக்கோவன் நிலையம் வரை ஷெப்பர்ட் சுரங்கப்பாதை நீட்டிப்பு, பிரிட்லெட்வோன் சமூகம் மற்றும் சுகாதார மையத்தின் கட்டிடம், டெர்ரி / பாக்ஸைப் புதுப்பிக்கவும் விரிவாக்கவும் $20 மில்லியன் ஒதுக்கீடு ஆகியவற்றைக் குறிப்பிட்டனர். மற்றும் டேவிட் லூயிஸ் பள்ளிகள், மற்றும் கடைசியாக ஸ்கார்பரோவில் ஒரு மருத்துவப் பள்ளி உருவாக்கம் ஆகியவற்றுக்காகவும் அரிஸ் பாபிகியன் உழைத்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாபிகியன் அவர்கள் அந்த திறந்த வெளிக் கூட்டத்தில் உரையாற்றும் போது பின்வருமாறு கூறினார்: "கடந்த நான்கு ஆண்டுகளாக ஸ்கார்பரோ-அஜின்கோர்ட் பிரதிநிதியாக இருந்ததில் நான் பெருமையும் பாக்கியமும் அடைகிறேன். இந்த தொகுதியில் வாழும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், முன்னெப்போதும் இல்லாத வகையில் நமது சமூகத்தில் வரலாற்று முன்னேற்றங்களைக் கொண்டுவருவதற்கும் எனக்கு நம்பிக்கை வாக்களித்த குடியிருப்பாளர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்".

அவர் மேலும் கூறியதாவது: "பல தசாப்தங்களாக மற்றவர்கள் செய்ய முடியாததை நான் நான்கு ஆண்டுகளில் சாதிக்க முடிந்தது. மற்றவர்கள் உதட்டளவில் பேசினார்கள் மற்றும் எங்கள் குடியிருப்பாளர்களுக்கு வெற்று வாக்குறுதிகளை வழங்கினார்கள். நான் முடிவுகளை வழங்குகிறேன். நான் செயலில் உள்ளவன், வார்த்தைகள் அல்ல".

அவர் தனது உரையை நிறைவு செய்யும் போது பின்வருமாறு தெரிவித்தார்: "எங்களுக்கு Scarborough-Agincourt இல் வசிக்கும் ஒரு பிரதிநிதி தேவை. கடந்த 32 ஆண்டுகளாக நான் செய்து வந்ததைப் போல, நமது சமூகத்தின் சோதனைகள் மற்றும் அதன் தேவைகளைப் புரிந்து கொண்ட ஒருவர்... நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த திரு. ஸ்டீவன் டெல் டுகாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பாராசூட் செய்யப்பட்ட ஒருவர் அல்ல. எனவே, Scarborough-Agincourt இல் வசிப்பவர்களே, மீண்டும் ஒருமுறை என்மீது நம்பிக்கை வைத்து, இரண்டாவது தவணைக்கான நம்பிக்கை வாக்கெடுப்பை எனக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மற்றும் வணிகங்கள் மற்றும் Scarborough-Agincourt ஐ உலகின் பொறாமையாக ஆக்குகிறது".

**அரிஸ் பாபிகியன் அவர்களின் பிரச்சாரம் தொடர்பான விபரங்களுக்கு: பெட்டி அல்லது அனிதா ஆகியோரை அழைக்கவும் - (416) 979-9880**

**பிரச்சார அலுவலக முகவரி: 2950 Birchmount Rd., M1W 3G5**
**வட மேற்கு பிர்ச்மவுண்ட் மற்றும் பிஞ்ச்**











இந்தியா செய்திகள்
India News

# நடிகர் விவேக் வீடுஅமைந்துள்ள வீதிக்கு "விவேக் சாலை" என தமிழக அரசு அரசாணை வெளியிட்டது



நடிகர் விவேக் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள சாலைக்கு அவரது பெயர் சூட்ட வேண்டும் என்கிற அவரது மனைவியின் கோரிக்கையை ஏற்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். தமிழ் திரையுலகில் முன்னணி நகைச்சுவை நடிகராக வலம் வந்தவர் நடிகர் விவேக். இயற்கையை போற்றும் குணம் கொண்ட அவர், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்கள் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். தனது நகைச்சுவை மூலம் சமூக கருத்துக்களை பேசி மக்களை சிந்திக்கவும் வைத்து வந்த விவேக், நடிப்பை தாண்டி பல சமூகப் பணிகளையும் செய்திருக்கிறார். தமிழகம் முழுவதும் பல லட்சம் மரக்கன்றுகளை நட்டு வைத்ததோடு, இளைஞர்கள் அதிகளவில் மரக்கன்றுகளை நட வேண்டும் என்றும் ஊக்கப்படுத்தி வந்தார்.

தமிழ் திரையுலகில் சின்னக் கலைவாணர் என மக்களால் அன்போடு அழைக்கப்பட்டு வந்த விவேக், கடந்த ஆண்டு ஏப்ரல் 17ஆம் தேதி திடீரென மாரடைப்பால் காலமானார். அவரது ஒரு வருட நினைவஞ்சலி சமீபத்தில் தான் அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில் இன்று நடிகர் விவேக்கின் மனைவி அருட்செல்வி, தமிழக முதல்மைச்சர் மு.க.ஸ்டாலினை கடந்த வாரம் சந்தித்தார். தன் மகள் அமிர்தாநந்தினியுடன் வந்திருந்த அவர், முதல்வரிடம் கோரிக்கை மனு ஒன்றையும் அளித்தார். அதில் விருகம்பாக்கத்தில் நடிகர் விவேக் அவர்கள் வாழ்ந்த வீடு அமைந்துள்ள சாலைக்கு அவரது பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறார்.

இந்நிலையில் அவரது கோரிக்கையை ஏற்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். சென்னை விரும்கம்பாக்கத்தில் ரமலான் பரிசு வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர் இதனை தெரிவித்தார். நடிகர் விவேக்கின் குடும்பத்தினர் அவரது இல்லம் அமைந்திருக்கும் சாலைக்கு, அவரது பெயரை வைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்ததும், முதலமைச்சர் மு.க.ஸ்டலின் உடனடியாக விவேக்கின் பெயரை சூட்டுவது குறித்து அரசாணை வெளியிட உத்தரவிட்டதாக தெரிவித்தார். மேலும் வருகிற 3 ஆம் தேதி அதன் பெயர் பலகை திறப்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளதாகவும் கூறினார்..

# தந்தை நீதிபதியின் கார் ஓட்டுநர்: மகள் நீதிபதியாக தேர்வு

மத்திய பிரதேசத்தில் நீதிபதியின் கார் டிரைவராக இருப்பவரின் மகள் தனது 25 வயதிலேயே சிவில் நீதிபதியாக தேர்வு செய்யப்பட்டுள்ளதால், ஒட்டுமொத்த குடும்பமே மகிழ்ச்சி அடைந்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம் நீமுச் மாவட்டம் சேர்ந்த அரவிந்த் குப்தா என்பவர் நீதிபதி ஒருவரின் கார் ஓட்டுநராக பணியாற்றி வருகிறார். அரவிந்த் குப்தாவின் மகள் வன்ஷிதா குப்தா (25). இந்நிலையில் மாநில அளவில் நடத்தப்பட்ட நீதித்துறைக்கான தேர்வில், 25 வயதே ஆன வன்ஷிதா குப்தா சிவில் நீதிபதி பதவிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். மாநில அளவில் அவர் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளார். இதனால், ஒட்டுமொத்த குடும்பமே மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளது. இதுகுறித்து அரவிந்த் குப்தா கூறுகையில், "எனது மகளின் வெற்றியால் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.

கடந்த 20 ஆண்டுகளாக நீதிமன்ற ஊழியராக பணியாற்றி வருகிறேன். நீதிபதியின் கார் ஓட்டுநராக பணியாற்றி வரும் நான், எனது மகளும் ஒரு நாள் நீதிபதியாக வருவாள் என்று கனவில் கூட நினைக்கவில்லை. எனது மகள் தனது முதல் முயற்சியிலேயே சிவில் நீதிபதி பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்றது, எங்களது குடும்பத்திற்கே பெருமை சேர்த்துள்ளார். ஜெய்ப்பூரில் சட்டப் படிப்பை பயின்றார். இந்தூரில் செயல்படும் பயிற்சி நிறுவனத்தில் சேர்ந்து சிவில் நீதிபதி பணிக்கான தேர்வுக்குத் தயாரானார். பள்ளியில் படிக்கும் போது, வன்ஷிதா விமானியாக ஆசைப்பட்டார். ஆனால் ஒரு நாள் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்தார். அங்கு நீதிபதிக்கு கொடுக்கும் மரியாதையை பார்த்த அவர் நீதிபதியாக வரவேண்டும் என்று முடிவு செய்தார்" என்கிறார்.





தொடர்ந்து வன்ஷிதா குப்தா கூறுகையில், "எனது தந்தையின் தந்தை (தாத்தா) ரமேஷ் சந்திர குப்தா, நீதிமன்றத்தில் பணியாற்றினார். பணி ஓய்வு பெற்றவுடன் மந்த்சூரில் நீதித்துறை தொடர்பான தேர்வுக்கு பயிற்சி அளித்து வருகிறார். தற்போது சிவில் நீதிபதியாக தேர்வானது மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார். இதுகுறித்து வன்ஷிதாவின் தாயார் கூறுகையில், "சிறுவயதில் இருந்தே வீட்டில் நீதிபதியாக வேண்டும் என்று விரும்பினார். தனது தந்தை கடினமாக உழைப்பதைப் பார்த்த அவர், தான் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று உணர்ந்தாள். தற்போது அதனை சாதித்துக் காட்டியுள்ளார்" என்று பெருமையுடன் கூறினார்.

உலக செய்திகள்
World News

# 37 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானத்தில் நடந்த திருமணம்



37 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த விமானத்தில் எதிர்பாராத வகையில் ஒரு தம்பதிக்கு திருமணம் நடந்துள்ளது.

அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தில் வசித்து வருபவர்கள் ஜெரேமி சால்டா மற்றும் பாம் பேட்டர்சன். இவர்கள், உலகின் திருமண நகரம் என பெயர் பெற்ற லாஸ் வேகாஸ் நகரில் கடந்த 24ந்தேதி தங்களது திருமணம் நடைபெற வேண்டும் என விரும்பியுள்ளனர். அதற்காக தயாராகி வந்துள்ளனர்.

ஆனால், குறிப்பிட்ட நாளில் லாஸ் வேகாஸ் செல்லும் அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானம் ரத்து செய்யப்பட்டது. இதனால், திட்டமிட்டபடி தங்களது திருமணம் நடைபெறாமல் போய் விடுமோ என்று அச்சமடைந்து உள்ளனர்.

எப்படி வேகாஸ் நகருக்கு செல்ல போகிறோம் என அவர்கள் இருவரும் பேசி கொண்டிருந்தனர். இதனை லாஸ் வேகாசுக்கு செல்ல கூடிய கிறிஸ் என்ற மற்றொரு பயணி கேட்டு கொண்டே இருந்துள்ளார்.

அவர் அந்த தம்பதியிடம் உங்களுக்கு நான் திருமணம் செய்து வைக்கிறேன் என்று கூறியுள்ளார். 3 பேரும் ஆன்லைனில் தேடி சவுத்வெஸ்ட் விமானம் ஒன்றில் கடைசி 3 இருக்கைகளை முன்பதிவு செய்தனர்.

ஒருவழியாக விமானத்தில் ஏறினர். திருமண உடையில் பேட்டர்சன் இருந்துள்ளார். இதனை விமானி கவனித்து உள்ளார். அவரிடம் பேட்டர்சன் தங்களுக்கு நடந்த விசயங்களை பற்றி கூறியதுடன், நகைச்சுவைக்காக விமானி கில்லிடம், நாங்கள் விமானத்தில் திருமணம் செய்து கொள்ள போகிறோம் என்று கூறியுள்ளார்.

அந்த விமானியும் சற்றும் யோசிக்காமல், திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று சம்மதித்து விட்டார். இதனால், பேட்டர்சன் ஆச்சரியத்தில் மூழ்கி போனார்.

அனைத்து வேலைகளும் தடபுடலாக நடந்தன. விமானத்தின் கழிவறையில் இருந்த பேப்பரை பயன்படுத்தி விமானத்தில் திருமண விழாவுக்கான தோற்றம் ஏற்படுத்தப்பட்டது. அதே விமானத்தில் பயணித்த தொழில்முறை புகைப்படக்காரர் ஒருவர் புகைப்படங்களை எடுத்து தள்ளினார்.

இதேபோன்று மற்றொரு நபர், பழைய நோட்டு ஒன்றை அனைவரிடமும் வழங்கி புதுமண தம்பதிகளுக்கு வாழ்த்துக்கான கையெழுத்துகளை வாங்கினார்.



விமான பணிப்பெண்ணாக இருந்த ஜூலி, மணமகள் தோழியாக மாறினார். நடுவானில் 37 ஆயிரம் அடி உயரத்தில் இந்த தம்பதியின் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. இந்த பதிவை சவுத்வெஸ்ட் விமான நிறுவனம் பகிர்ந்து உள்ளது. அதனை ஆயிரக்கணக்கானோர் ஷேர் செய்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் தங்களது விமர்சனங்களை பதிவிட்டு வருகின்றனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை அதிபருக்கு "இப்போது" மக்கள் என்ன "மரியாதை" கொடுக்கின்றனரோ அதே "மரியாதை"யை நமது பாரத பிரதமர் மோடிக்கும் கொடுக்கின்றனர் – அண்ணாமலை அதிரடி



தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கடந்த ஏப்ரல் 30ம் தேதி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார். அங்கு தமிழர்கள் வாழும் பகுதிகளில் நடைபெற்ற மே தின பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின்னர் பொருளாதார நெருக்கடியால் வாழ்வை இழந்தவர்களுக்கு தேவையான நிதியுதவிகளை மத்திய பா.ஜ.க. அரசு வழங்கும் என்று கூறினார்.

இந்நிலையில், இலங்கை பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய அண்ணாலை நேற்று செய்தியாளர்களை சந்தித்து பயணம் தொடர்பாக விளக்கினார். அதாவது கடந்த 4 நாட்களாக இலங்கை மலையகத் தமிழர்களை சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்தது. இலங்கை அதிபருக்கு என்ன மரியாதை கொடுக்கின்றனரோ அதே மரியாதையை நமது பாரத பிரதமர் மோடிக்கும் மக்கள் அளிக்கின்றனர். கடந்த ஏழு மாதங்களில் மட்டும் இந்தியா, இலங்கைக்கு ரூ.11 ஆயிரம் கோடி மதிப்பிலான உணவுப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

மேலும், இலங்கை சென்றபோது, கச்சத்தீவில் இருக்கும் அந்தோணியார் ஆலயத்துக்கு செல்கின்ற தமிழக மக்கள் அனுமதிச் சீட்டு இல்லாமல் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். இலங்கை எல்லையை தமிழக மீனவர்கள் மீறுகின்றனர் என்று அவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கையை தவிர்த்து மனிதாபிமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். அதே சமயம் தமிழர்களின் படகுகளை மீட்பதற்கு அந்நாட்டு அரசியல் கட்சிகளின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். அவர்கள் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# மன்னார் மக்களின் எதிர்காலத்தை கேள்விக்குறி ஆக்குமா காற்றாலை மின்திட்டம்??



பொதுவாக புதுப்பிக்க கூடிய சக்தி வளங்களில் காற்றாலை மின் செயற்திட்டம் முக்கியமானதாகும் காற்று என்பது எமது பிரதேசத்தில் இலவசமாகவும் அதே நேரம் தொடர்ச்சியாக கிடைக்க கூடிய இயற்கையின் மூலப்பொருளாக காணப்படுகின்றது.

ஆகவே காற்றை பயன்படுத்தி மேற்கொள்ளும் மின்சார செயற்பாடுகள் ஏனைய முறையிலான மின்சார செயற்பாடுகளுடன் ஒப்பிடுகின்ற போது குறைவான அளவு சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தும் அதே நேரம் பொருளாதார ரீதியாக அதிக அளவு நன்மை பயக்கும் செயல்திட்டமாக காணப்படுகின்றது.

நீர் மின் உற்பத்தி, நிலக்கரி மின் உற்பத்தி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது காற்றாலை செயற்திட்டத்தினால் சூழலுக்கு பாதிப்பு குறைவாக காணப்படுகின்ற போதும் முற்றாக சூழலுக்கும் சூழலை நம்பி வாழும் பறவைகள் மிருகங்கள் உட்பட மனிதர்களுக்கும் தீமை இல்லை என நாம் கடந்து செல்ல முடியாது.

இவ் காற்றாலை செயற்றிட்டம் மன்னாரில் நடை முறைப் படுத்தப்படுவதால் மாவட்ட ரீதியாக பல பாதிப்புகள் அண்மைகாலமாக உணரப்பட்டு வருகின்றது.

மன்னார் முதல் நடுகுடா வரையிலான 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு அடி சக்தி பரிமாற்ற அமைப்புடனான இந்த மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக நடுகுடா முதல் அநுராதபுரம் வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உள்ளிட்ட முழு மின் கட்டமைப்புக்கும் 103.5 மெகாவாட் திறன் இணைக்கப்படவுள்ளதாக இச் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கடற்கரையில் 13 கிலோமீற்றர் தூரத்திற்கு, 150 ஹெக்டேயர் நிலப்பரப்பை கையகப்படுத்தி இந்த மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டிற்கு 400 மில்லியன் மின் அலகுகளை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டது.

மன்னாரின் தென் கடல் பகுதியில் மக்கள் வசிக்கும் அதே நேரம் மீன்பிடியை மேற்கொள்ளும் பகுதிகளான நடுக்குடா தொடக்கம் தாழ்வுபாடு வரையிலாக அமைக்கப்பட்டுள்ள காற்றாலை செயற்திட்டமானது நாட்டுக்கு பண ரீதியாக பல நன்மைகளை ஏற்படுத்தினாலும் மன்னார் மாவட்ட மக்களுக்கு பெரும்பாலும் நன்மையை ஏற்படுத்த போவதில்லை என்பதுடன் எதிர்பார்காத அளவுக்கு பாரிய ஆபத்தை ஏற்படுத்தப்போவதை அறியாமலே மன்னார் மக்கள் இருப்பதே மிகவும் கவலைக்குறிய விடயமாகும்.

அண்மை காலமாக மன்னார் தீவக பகுதிக்குள் கரைவலை தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் தங்கள் மீன்பிடி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டதாக தெரிவித்திருந்தனர். அதற்கு பெரும்பாலும் காற்றாலை மினுற்பத்தி செயற்திட்டம் காரணமாக அமைந்திருக்களாம் என் குற்றம் சுமத்தியிருந்தனர்.

ஆனாலும் அது ஆதாரபூர்வமற்ற குற்ற சாட்டு என அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் அவ் குற்ற சாட்டை சாதாரணமாக கடந்து விட முடியாத நிலையில் குறித்த விடயத்தின் உண்மை தன்மை தொடர்பாக ஆராய்ந்த நிலையில், காற்றாலைகள் ஊடாக ஏற்படும் சத்தம் கடற்கரைகளை நோக்கி வரும் மீன்களை கலைப்பதாகவும் தொடர்சியான இச் சத்ததின் காரணமாக கரையை நோக்கி வரும் மீன்கள் வேறு பகுதிகளை நோக்கி நிரந்தரமாக செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகவும் உறுதிப்படுத்தியுள்ளார் யாழ்ப்பாண புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா.

காற்றாலை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் காற்றாலை செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் நன்மைகளை ஏற்படுத்தினாலும் மாவட்ட ரீதியாக நன்மையை விட அதிகளவான பாதிப்பை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

குறுங்கால பாதிப்பு மாத்திரம் இல்லாமல் மாவட்டம் நீண்ட கால பல பாதிப்புகளை எதிர்கொள்ள இந்த காற்றாலை வழியை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக காற்றாலை செயற்றிட்டம் காரணமாக ஆவியுயிர்ப்பு, ஆவியாக்கல் செயற்பாடு அதிகமாக இடம் பெறுவதால் குறித்த காற்றாலைகளை சூழ உள்ள நிலத்தடி நீர் விரைவில் ஆவியாகுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் இதன் காரணமாக காற்றாலைகளை சூழ உள்ள நீர் மூலகங்களில் விரைவில் பாதிப்பு ஏற்படுவதுடன் விவசாய செய்கையும் பாரிய அளவில் பாதிக்கப்படும் என தெரிவிக்கிறார்.

அதே நேரம் காற்றாலை செயற்திட்டம் காரணமாகவும் அதனால் ஏற்படும் கதிர்வீச்சு காரணமாகவும் ஏற்படும் பாதிப்பு காரணமாக வெளிநாடுகளில் இருந்து எமது நாட்டுக்கு வரும் பறவைகளின் பயணப்பாதை பாதிக்கப்படுவதாகவும் இவ்வாறு தொடரும் பட்சத்தில் வெளிநாட்டு பறவைகளின் வருகை மன்னார் மாவட்டத்திற்குள் இல்லாமல் போய்விடும் என்பதுடன் இவ்வாறான பறவைகளை பார்பதற்கும் புகைப்படங்கள் எடுப்பதற்கும் மன்னார் நோக்கி வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயனிகளின் வருகை குறைவடையும் இதனால் மாவட்டத்திற்கு கிடைக்கும் வருமானமும் பாரிய அளவில் குறைவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.





அத்துடன் இரவு நேரங்களில் காற்றாலைகள் ஏற்படுத்தும் சத்தம் காரணமாக காற்றாலைகளை சூழ உள்ள மக்கள் மன அழுத்தத்திற்கு உள்ளாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் காற்றாலை இலங்கையின் கற்பிட்டி மற்றும் புத்தளம் போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்ட போதிலும் அவ்வாறான பகுதிகள் பெரிதும் மக்கள் வசிப்பிடங்கள் இல்லாத பகுதிகளாக காணப்படுவதாகவும் அவ்வாறான பகுதிகள் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடாத பகுதிகள் எனவும் சுட்டி காட்டியுள்ளானர்.

ஆனாலும் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட காற்றாலைகள் மக்கள் வசிக்கும் பகுதிகள் என்பதுடன் மக்கள் மீண்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடு பகுதி எனவும் அவர் தெரிவித்துள்ளானர்.

கடந்த பல வருடங்களாக மன்னார் மாவட்டத்தில் கல நிலையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்டத்தில் மழை வீழ்ச்சி அதிகரித்திருந்தாலும் மழை நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

இவற்றை விட ஆபத்தாக காற்றாலையினால் ஏற்படும் சத்தம் காரணமாக கர்பிணி தாய்மார்கள் மன அழுத்ததால் பாதிக்கப்படும் பட்சத்தில் அவர்களின் வயிற்றில் வளரும் சிசுக்களும் பாதிக்கப்பட கூடிய வாய்ப்புக்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறான இயற்கை விரோத திட்டமிடாத அபிவிருத்தி எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மன்னார் மாவட்டத்தில் தொடரும் பட்சத்தில் விரைவில் மன்னார் தீவு வளங்கள் அற்ற கைவிடப்பட்ட ஒரு தீவகவே மாறும் என்பதே நிதர்சனம்.

இவ்வாறான நிலையில் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து பல எதிர்ப்பு போராட்டங்கள் மேற்கொண்ட போதிலும் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் இவ் செயற்திட்டத்திற்கு தடை ஏற்படுத்தப்பட்ட போதிலும் அரசாங்கத்தினால் பூநகரி தொடக்கம் மன்னார் வரை இவ் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான முன்னெடுப்புக்கள் மும்மூறமாக இடம் பெறுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

அதே நேரம் புதிய காற்றாலைகளை அமைப்பதற்காக கடற்கரை ஓரங்களில் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கைகளும் அதே நேரம் தனியார் காணிகளை கொள்வனவு செய்யும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடற்றொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தாவிடம் குறித்த பிரச்சினை தொடர்பாக வினவிய போது மக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் குற்றசாட்டுக்கள் ஆதார பூர்வமாக நிருபிக்கபடவில்லை எனவும் இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அதன் பின்னர் மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவே இவ் செயற்திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் அவ் ஆய்வுகளின் உண்மை தன்மை என்பது எப்போது மக்கள் மத்தியில் திருப்தியை ஏற்படுத்த போவதில்லை என்பதுடன் அவ்வாறான ஆய்வுகளின் முடிவுகள் கிடைக்கப்பெறுவதற்கு முன்னரே மாவட்ட ரீதியான சூழல் பாதிப்புக்கள் நிறுத்த முடியாத நிலை பெற்றுவிடும் என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தாகும்.

மக்களின் விருப்பத்திற்கு ஏற்பவே இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தெரிவித்தாலும், மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும், கோட்டபாஜ ராஜபக்ஸ தலைமையிலான அரசாங்கம் மன்னார் மக்களின் விருப்பத்திற்கு முரணாக இவ் செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் காற்றாலை திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான ஒப்பந்த நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர் அதே நேரம் அரச தரப்புக்கள் பிரதிநிதிகள் ஊடாக மக்களை சமரசபடுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

அபிவிருத்தி எனும் போர்வையிம் முன்னெடுக்கப்பட்டும் இவ்வாறான இயற்கை விரோத மக்கள் விரோத செயற்திட்டங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் இவ்வாறான செயற்திட்டங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் நம் சந்ததியோடு நிற்க போவதில்லை என்பதுடன் எமக்கு பின்னால் வரும் சந்ததியினரின் எதிர்காலத்தையும் இருப்பையும் கேள்வி குறியாக்கும் என்பது உறுதி.

இவ்வாறான இயற்கை விரோத திட்டமிடாத அபிவிருத்தி எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மன்னார் மாவட்டத்தில் தொடரும் பட்சத்தில் விரைவில் மன்னார் தீவு வளங்கள் அற்ற கைவிடப்பட்ட ஒரு தீவகவே மாறும் என்பதே நிதர்சனம்.

எனவே அரசாங்கம் பெரும்பாலும் மக்கள் வசிக்காத மக்கள் பாவனையற்ற பகுதிகளை அடையாளப்படுத்தி மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து அவ்வாறான பகுதிகளில் இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும் என பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுப்பதுடன் காற்றாலை செயற்திட்டத்தின் விரிவுபடுத்தலை ஒரு போதும் மன்னார் மக்கள் ஏற்க போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

- மன்னார் நிருபர்

# பௌத்த மகாசங்கத்தின் அழுத்தங்களுக்கு சிங்கள அரசியல்வாதிகள் பணிவார்களா?



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

இலங்கைத்தீவின் பௌத்த மதம் அரச மதம். புத்த பகவான் அரச போகங்களைத் துறந்து சன்னியாசம் பூண்டார். ஆனால் அவருடைய பெயரில் சங்கத்தை கட்டியெழுப்பி வைத்திருக்கும் இலங்கைத்தீவின் தேரவாத மகா சங்கங்கள் அவ்வாறல்ல. அவர்கள் அரசர்களைப் போலவே வாழ்கிறார்கள். அரசர்களைப் போலவே முடிவெடுக்கிறார்கள். அரசியலிலும் அரசர்களை கட்டுப்படுத்தும் அதிகாரத்தோடு காணப்படுகிறார்கள்.

இலங்கைத்தீவின் பௌத்தமத பீடங்கள்பல நூற்றாண்டுகளாக அரசர்களுக்கு நிகராக அதிகாரத்தை கொண்டிருந்ததோடு அரசர்களோடு நெருங்கி இடையூடாடிய ஒரு பாரம்பரியத்தை கொண்டவை. எனவே அரசர்கள் சிந்திப்பதை போல ராஜதந்திரிகள் சிந்திப்பதை போல சிந்திக்க கூடிய ஒரு பாரம்பரியமும் இலங்கைத்தீவில் பௌத்த மகா சங்கங்களுக்கு உண்டு. இலங்கைத்தீவின் அரசியலில் தீர்மானிக்கும் சக்திகளில் ஒன்றாக கடந்த பல நூற்றாண்டுகளாக மகாசங்கம் காணப்படுகிறது.சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் முதலிடம் கொடுக்கும் இலங்கைத்தீவின் ஒற்றையாட்சி கட்டமைப்பின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதிதான் மகாசங்கம். இந்த அடிப்படையில்தான் கடந்த வாரத்திலிருந்து மகா நாயக்கர்கள் நாட்டின் அரசியலில் தலையிட்டிருகிரார்கள்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து தொடங்கி நாட்டில் நடப்பவற்றின் தொகுக்கப்பட்ட விளைவாக நாட்டில் ஒருவித அரசற்ற நிலை தோன்றியுள்ளது. இதன் விளைவாகவே மகாநாயக்கர்கள் கடந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து அரசியல்வாதிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க தொடங்கினார்கள்.

ஒருபுறம் நாடாளுமன்றத்தில் ஒரு பலமான ஆட்சியை ஏற்படுத்த முடியாத அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும். இன்னொருபுறம் யுத்த வெற்றி நாயகர்களை குப்பைத் தொட்டிக்குள் அல்லது கழிப்பறை குழிக்குள் வீசும் ஆர்ப்பாட்டக்காரர்கள். காலிமுகத்திடலில் அமைக்கப்பட்ட கோட்டா கோகம கிராமம் அண்மை வாரங்களாக அலரி மாளிகைக்கு முன்னரும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்களால் எரிச்சலடைந்த போராட்டக்காரர்கள் அலரி மாளிகைக்கு முன்னரும் ஒரு குட்டிக் கிராமத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு மைனா கோ கம என்ற பெயரை வைத்திருக்கிறார்கள் மைனா என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு பறவையின் பெயர். ஆனால் சிங்களப் பண்பாட்டில் அது ஒரு மிக இழிவான ஒரு நிந்தனை வாக்கியம் என்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக ராஜபக்ச குடும்பத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டிருக்கும் பதாகைகள், சுலோகங்கள், ஓவியங்கள், சிலைகள் காண்பியப் புனைவுகள், பாடல்கள், மீம்ஸ்கள் போன்ற எல்லாவற்றையும் தொகுத்துப் பார்த்தால் அந்த குடும்பம் எந்த அளவுக்கு அவமதிக்கப்படுகிறது என்று தெரியவரும். இலங்கைத் தீவின் வரலாற்றில் வேறு எந்த ஒரு அரச குடும்பமும் இந்தளவுக்கு அவ மதிக்கப்படவில்லை. தமிழ் மக்கள் ராஜபக்ச குடும்பத்தை போர்க்குற்றம் செய்தவர்கள் இனப்படுகொலை புரிந்தவர்கள் என்றுதான் குற்றம் சாட்டினார்கள். ஆனால் சிங்கள மக்கள் அவர்களைத் திருடர்கள் என்பதில் தொடங்கி சிங்களத்தில் காணப்படும் சகல தூஷன வார்த்தைகளாலும் திட்டுகிறார்கள்.

இது தமிழ் மக்கள் எதிர்பாராத ஒரு மாற்றம். 12 ஆண்டுகளுக்கு முன்பு பால் சோறு பொங்கி கொண்டாடப்பட்ட ஒரு குடும்பம் அதே மக்களால் இப்பொழுது எப்படி அவமதிக்க படுகிறது என்பது. இலங்கைத் தீவின் நவீன அரசியலில் சிங்கள - பௌத்த வீரத்தின் அடையாளமாக காட்டப்பட்ட குரக்கன் சால்வை எந்தளவுக்கு அவமதிக்கப்படுகிறது என்பது.

இவ்வாறாக ஒருபுறம் வீட்டுக்கு போக மறுக்கும் ஒரு அரச குடும்பம். இன்னொரு பக்கம் அந்தக் குடும்பத்தை வீட்டுக்கு அனுப்பும் வரை வீட்டுக்கு போக மறுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள். ஆனால் நாடு தொடர்ந்தும் அத்தியாவசிய பொருட்களுக்காக தெருக்களில் வரிசையில் நிற்கிறது. ஒவ்வொரு கிழமையும் விலைகள் உயர்ந்து கொண்டே போகின்றன. ஒரு வதந்தி போதும் சந்தையை தீர்மானிப்பதற்கு என்ற நிலை. ஏறக்குறைய அரசாங்கம் என்ற ஒன்று இல்லை என்ற நிலை தோன்றிவிட்டது. அதனால்தான் மகாசங்கம் தலையிட்டது. சிங்கள-பௌத்த ஒற்றையாட்சி கட்டமைப்பை பாதுகாப்பதே மகா சங்கத்தின் நோக்கம். யுத்த வெற்றி நாயகர்களை அவமதிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதன் தர்க்கபூர்வவிளைவாக யுத்த வெற்றியையும் அவமதிக்கும் ஒரு நிலை வருவதை மகாசங்கம் விரும்பவில்லை. யுத்த வெற்றியை அவமதிப்பது என்பது அந்த யுத்த வெற்றி மூலம் பாதுகாக்கப்பட்ட சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பை பலவீனப்படுத்துவதுதான். எனவேதான் மகாசங்கம் தலையிட்டிருக்கிறது.

மகா சங்கத்தின் தலையீட்டை அரசியல்வாதிகள் விரும்பவில்லை என்று தெரிகிறது. ராஜபக்ச குடும்பம் மகாசங்கம் கேட்டுக்கொண்டபடி நடப்பதாக உறுதி கூறியுள்ளபோதிலும், நடைமுறையில் மகாசங்கத்தின் ஆணையை மனதார ஏற்றுக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. குறிப்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகி ஒரு ஒரு புதிய இடைக்கால ஏற்பாட்டுக்கு இடம் தர வேண்டும் என்று மகாசங்கம் கேட்டிருந்தது. அவ்வாறு பதவியை விட்டுக்கொடுக்க மஹிந்த தயாரில்லை என்று கூறப்படுகிறது. மகா சங்கத்தின் ஆணையை மஹிந்த ரசிக்கவில்லை என்றும் தெரிகிறது. அண்மையில் அவர் தனக்கு நெருக்கமான ஒருவரோடு உரையாடும் பொழுது கொத்தலாவலவின் கூற்று ஒன்றை நினைவுபடுத்தியிருக்கிறார். பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை பலப்படுத்தி அதை ஒரு தேர்தல் முதலீடாக மாற்றி வெற்றி பெற்றபின் அவரோடு உரையாடிய கொத்தலாவல மகா சங்கத்தினரை பற்றி குறிப்பிடும் பொழுது "கட்டப்பட்டிருந்த நாயை நீ அவிழ்த்துவிட்டு விட்டாய்" என்ற தொனிப்பட எச்சரித்திருக்கிறார். அதை மகிந்த இப்பொழுது மேற்கோள் காட்டியதாக ஒரு தகவல். அதாவது மகா சங்கத்தினர் மஹிந்தவை பதவி விலகுமாறு நிர்ப்பந்திப்பதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

இது விடயத்தில் கோட்டாபயவுக்கும் மஹிந்தவுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல்கள் உண்டு. அது அவர்களால் வேண்டுமென்றே வெளியில் காட்டப்படும் ஒரு நடிப்பு என்றும் வியாக்கியானம் உண்டு. தனது தம்பி, தன்னை அவ்வாறு பதவியை விட்டு அகற்றினாள் எதிர்க் கட்சிகளின் வரிசையில் போய்க் குந்தியிருப்பதற்குத் தான் தயார் என்று மகிந்த அன்மையில் தெரிவித்திருக்கிறார். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனோடு உரையாடும் பொழுது "நான் உங்களுடைய பக்கம் வந்து இருக்கப் போகிறேன் என்ற தொனிப்பட கதைத்திருக்கிறார்" அதாவது மகா சங்கத்தின் சொற் கேட்டு தன்னை பதவியிலிருந்து அகற்றினால் தான் எதிர்க் கட்சிகளின் வரிசையில் போய் அமர்வேன் என்ற எச்சரிக்கையை அவர் விடுகிறார். அது கோத்தாபயவுக்கும் அச்சுறுத்தல். எதிர்க்கட்சிகளுக்கும் அச்சுறுத்தல்.

கொழும்பில் நடக்கும் போராட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பலரும் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுவது உண்டு. இப்பொழுது சஜித்தின் இடத்தில் மஹிந்த இருந்திருந்தால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதே அது. மஹிந்த தெருவில் இறங்கி போராடும் ஒருவர். அவர் இப்பொழுது எதிர்க் கட்சிகளின் வரிசையில் இருந்திருந்தால் அரசாங்கத்தை எப்பொழுதோ எதுவிதத்திலோ வீட்டுக்கு அனுப்பியிருப்பார்.

கோட்டவுடன் ஒப்பிடுகையில் மகிந்ததான் தலைவர்.தாமரை மொட்டு கட்சி என்பதே மஹிந்தவின் ஜனவசிய முகத்தை வைத்து கட்டியெழுப்பப்பட்ட ஒன்றுதான்யுத்தத்தை மகிந்ததான் வெற்றிக்கு இட்டுச் சென்றார். யுத்தத்தை எப்படி நடத்துவது, எப்படி முடித்து வைப்பது போன்ற அரசியல் முடிவுகளை அவர்தான் எடுத்தார். அவர் எடுத்த அரசியல் தீர்மானங்களைத்தான் கோட்டாவும் படைத்தரப்பும் நடைமுறைப்படுத்தினார்கள். பழுத்த அனுபவமுடைய தலைவர் அவர். அவரை அகற்றினால் கோத்தாபய மேலும் பலவீனமடையும் நிலமை வரலாம். எனவே மஹிந்த தன் பதவியை விட்டு இறங்கவில்லை என்றால் மகா நாயக்கர்களின் ஆணையை அரசாங்கம் அவமதித்தது ஆகிவிடும்.

அதுமட்டுமில்ல எதிர்கட்சிகளும் மகா சங்கத்தின் சொற்கேட்டு அனைத்துக்கட்சி இடைக்கால ஏற்பாடு ஒன்றை உருவாக்க சம்மதிக்காவிட்டால், அதுவும் மகா சங்கத்தின் ஆணையை புறக்கணிப்பதாக அமையும். மொத்தத்தில் மகா சங்கத்தின் அணையை சிங்கள மக்கள் பிரதிநிதிகள் அவமதிப்பார்களா அல்லது அதற்குக் கீழ்ப்படிவார்களா என்பதில்தான் அடுத்த கட்டம் பெருமளவுக்குத் தங்கியிருக்கிறது. மகாநாயக்கர் கேட்பது போன்ற ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு போக ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சிகளும் சம்மதிக்கவில்லை என்றால் மகாசங்கம் அதை எப்படி அணுகும்?

அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளாதவரை தம்மைச் சந்திக்க வரக்கூடாது என்று மல்வத்த பீடாதிபதி கூறிவிட்டார். அண்மையில் சஜித் பிரேமதாச இருபத்தியோராவது திருத்தச் சட்டத்தின் வரைபை எடுத்துக்கொண்டு மல்வத்த பீடாதிபதியைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். ஆனால் சந்திக்க முடியவில்லை. அதுபோலவே தாமரை மொட்டு கட்சியை சேர்ந்த ஒரு குழுவினர் மல்வத்த பீடாதிபதியைச் சந்திக்கச் சென்றிருக்கிறார்கள். ஆனால் மகாநாயக்கரை சந்திப்பதற்கு அனுமதி கிடைக்கவில்லை. முன்னரும் 2018 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஒரு யாப்புக் குழப்பத்தை ஏற்படுத்திய போது அவரை மகாநாயக்கர்கள் சந்திக்க மறுத்தார்கள். இம்முறையும் அப்படித்தான் நடக்கிறது.

ஆனால் மகாசங்கத்தின் இதுபோன்ற அழுத்தங்களின் மூலம் அரசியல்வாதிகளை ஒரு வழிக்கு கொண்டு வராதவரை நாட்டின் தெருக்களிலும் காலிமுகத்திடலிலும் போராடிக் கொண்டிருக்கும் மக்களை வீட்டுக்கு போகுமாறு கேட்க முடியாது. அவர்கள் வீட்டுக்கு போகவும் மாட்டார்கள்.ஏனெனில் எந்தக் காரணங்களுக்காக அவர்கள் தெருவில் இறங்கினார்களோ, காலிமுகத்திடலில் கூடினார்களோ, அதே காரணங்கள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன. பொருட்களின் விலைகள் மேலும் உயர்ந்து செல்கின்றன. எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாகக் காத்திருக்கும் நீண்ட வரிசைகள் மேலும் நீண்டு செல்கின்றன. எனவே எந்தக் காரணங்களுக்காக மக்கள் தெருக்களில் இறங்கினார்களோ, அந்தக் காரணங்கள் மேலும் அதிகரித்து வருகின்றன. அதனால் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்க யாராலும் முடியாது.

முதலில் ஒரு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டும். அந்த ஸ்திரமான ஆட்சியானது வெளித் தரப்புக்களோடு, குறிப்பாக அனைத்துலக நாணய நிதியம் போன்ற அனைத்துலக அமைப்புகளோடு உறவாடி பிரச்சினைக்கு ஒரு தீர்வை கண்டுபிடிக்க வேண்டும். எனவே பொருளா-தார நெருக்கடிகளைத் தீர்ப்பது என்று சொன்னால், முதலில் ஒரு ஸ்திரமான ஆட்சி வேண்டும். ஆனால் அப்படி ஒரு ஆட்சியை உருவாக்க அரசாங்கத்தாலும் முடியவில்லை, எதிர்க்கட்சிகளாலும் முடியவில்லை. மகாசங்கத்தாலும் முடியவில்லை என்பதே இலங்கைதீவில் இப்போதுள்ள பாரதூரமான நிலை ஆகும்.

## வீணாவின் கவிக்கணை

விளக்கில்லை வெளிச்சமில்லை,
இருள் சூழ்ந்த பஞ்சு மெத்தை,
சத்தான உணவு, அது கிடைப்பதால்
இங்கு பசிக்கு வேலையுமில்லை,
அடுத்த வேளை என்ன செய்வதென
சிந்திக்கும் அவசியமும் இல்லை,
அதற்கான பொருள் ஈட்ட
தேவையும் இல்லை, அழகான
தேவதையின் அன்பான கருவறையில்,
சுகமான சுமையாக நாம் வாழ்வதோ
அந்த பத்து மாதம் மட்டுமே,
அன்னையின் கருவறையை நாம்
தாண்டிவிட்டால், புரியாத புதினங்கள்
எல்லாம் கை தட்டி வரவேற்கும் நம்மை
இப்பூவுலகிற்கு!



# MAJESTIC CITY தமிழர் அங்காடியில் திறந்து வைக்கப்பெற்ற EXPRESS AIR "எக்ஸ்பிரஸ் ஏயர்" பிரயாண முகவர் நிலையம்



கடந்த 30-04-2022 சனிக்கிழமை மதியம் ஸ்காபுறோவில் அமைந்துள்ள MAJESTIC CITY தமிழர் அங்காடியின் உள்ளே திறந்து வைக்கப்பெற்ற EXPRESS AIR "எக்ஸ்பிரஸ் ஏயர்" பிரயாண முகவர் நிலையத்தின் திறப்பு விழாவில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

திறப்பு விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்து அழைக்கப்பெற்ற அனைவரையும் அன்புடன் வரவேற்ற உரிமையாளர் ரஜீவன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோரின் அழைப்பைஏற்று ஒன்றாரியோ மாகாண அரசின் முதியோர்கள் நலன் காக்கும் அமைச்சர் றேமன்ட் சோ அவர்கள். தமிழ் பேசும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் லோகன் கணபதி, விஜய் தணிகாசலம் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம். யுகம் வானொலி நிறுவனத்தின் அதிபர் கணபதி ரவீந்திரன். MAJESTIC CITY தமிழர் அங்காடி நிறுவனத்தின் முகாமையாளர் திரு கிறிஸ் சிவக்கொழுந்து உட்பட பலர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.



அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் என அனைவரையும் அன்புடன் வரவேற்ற உரிமையாளர் ரஜீவன் மற்றும் அவரது துணைவியார் ஆகியோர் விருந்துபசாரத்தையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். வர்த்தகப் பிரமுகர்களான நண்பர்கள் பலர் அங்கு கலந்து கொண்டு தங்கள் ஆதரவையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ந்தனர்.







*PHOTOS BY: Praba - Designs 2 Prints Ltd*

# "கடல் கடந்து கனடாவிற்கு வருகை தரும் எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் வரவேற்று மதிப்பளிக்கும் தமிழ்க் கனடிய உள்ளங்களைப் பாராட்டுகின்றேன்."

## ஸ்காபுறோ நகரில் இடம்பெற்ற தனது கவிதை நூல்கள் வெளியீட்டு விழாவில் கவிஞர் அ. தமிழரசி நன்றி தெரிவிப்பு



"தமிழகத்திலிருந்து கடல் கடந்து கனடாவிற்கு வருகை தரும் என் போன்ற எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் கலைஞர்களையும் வரவேற்று மதிப்பளிக்கும் தமிழ்க் கனடிய உள்ளங்களைப் பாராட்டுகின்றேன். இந்த மண்ணில் வாழும் அனைத்து படைப்பாளிகளையும் அத்துடன் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம். கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் ஆகியவற்றின் முக்கிய உறுப்பினர்களையும் மற்றும் இங்கு தங்கள் நேரங்களை ஒதுக்கியும் அன்பளிப்புக்களை வழங்கியும் ஆதரவு வழங்குகின்ற அன்பான வர்த்தக உள்ளங்களையம் நான் பாராட்டுகின்றேன்".

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும் தமிழாசிரியருமான அ. தமிழரசி அவர்கள்.

ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள விழா மண்டபத்தில் நடைபெற்ற தனது கவிதை நூல்களான் தேடல் சுகமானது மற்றும் உடைத்தெழும் விதைகள் ஆகியவறறின் வெளியீட்டு விழாவில் நன்றியுரையாற்றும் போது தெரிவித்தார்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் தலைவர் கவிஞர். கந்த. ஸ்ரீபஞ்சநாதன் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் முதலில் மங்கல விளக்கேற்றல் வைபவம் இடம்பெற்றது.

தழிழ்த்தாய் வாழ்த்தையும் கனடிய தேசிய கீதத்தையும் செல்வி. சரிகா நவநாதன் இசைத்தார்.

தலைமையுரை: யாற்றிய கந்த ஸ்ரீ பஞ்சநாதன் அவர்கள் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தினை மதித்து இந்த வெளியீட்டு விழாவினை நடத்தும் பொறுப்பை தங்களிடம் ஒப்படைத்த நூலாசிரியருக்கும் ஆர். என். லோகேந்திரலிங்கத்திற்கும் நன்றி தெரிவித்து ஆற்றலுள்ள தமிழகக் கவிஞர்களை வருகை கனடாவில் வாழும் கவிஞர்களுக்கு உற்சாகம் தரும் விடயமாகும் என்றார்.

வாழ்த்துரையை எழுத்தாளரும் கவிஞரும் கனடா தமிழ் மகளிர் மன்றத்தின் தலைவியுமாகிய திருமதி சரசுவதி அரிகிஷ்ணன் மற்றும் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் ஆகியோர் ஆற்றினார்கள்.

தொடர்ந்து, கவிதை நூல் ஒன்று: தேடல் சுகமானது ஆய்வுரைஐயு கவிஞர் அருட்கவி த. ஞானகணேசன் (முன்னாள் தலைவர் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்) மற்றும் உடைத்தெழும் விதைகள் என்னும் கவிதை நூலின் ஆய்வுரையை உலகச் சாதனையாளர், கவிஞர் அகணி சுரேஸ் அவர்களும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து சிறப்புரை வழங்க கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆற்றினார்கள்

மேலும் வாழ்த்துரை:யை மருத்துவர் போல் ஜோசேப் வெளியீட்டு உரையை கனடாத் தமிழ்க் கவிஞர் கழகத்தின் பொருளாளரும் கவிஞருமாகிய கவிஞர் கண. குமரகுரு நிகழ்த்தினார்.

அடுத்து முதற்பிரதிகள் வழங்கப்பெற்றன. முதற் பிரதி பெற்றவர்கள் (தேடல் சுகமானது), திரு. தனம் கனகரத்தினம் (கணக்காளர்) (உடைத்தெழும் விதைகள்), திரு. நவநாதன் பெரியதம்பி (சமூகசேவகர், வர்த்தகப் பிரமுகர்) ஆகியோர் நூல் ஆசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

திரு. பாஸ்கரன் சின்னத்துரை (வீடு விற்பனை முகவர்), திரு. கோபாலகிருஸ்ணன் செல்லத்துரை (அம்மா அடைவு மாடம்), திரு விசு கணபதிப்பிள்ளை (மக்கள் தொண்டர் சமூக சேவகர்), திரு. குமார் தம்பியப்பா - கணக்காளர், திருமதி. வாசுகி நகுலராஜா அவரது துணைவர். திரு. நகுலராஜா, திரு. ராதா கிருஸ்ணசாமி வர்த்தகப் பிரமுகர் உட்பட பலர் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து நூலாசிரியரை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நன்றியுரையை நூலாசிரியர் அ. தமிழரசி அவர்கள் சிறந்த முறையில் வழங்கி அனைவரும் நேர்த்தியான முறையில் நன்றியை பகிர்ந்தார்.







ஒரு கோப்பை
கொஞ்சம் ☕ தேநீர் - 51
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

பன்றிக்குப் பட்டாடை
போர்த்துபவன் மதிகேடன்!
நன்றியிலாத் தருநிழலை
நாடுபவன் பெருமூடன்!
கொன்றழிக்கும் வேங்கைதனைக்
கொஞ்சுபவன் ஏமாளி!
ஒன்றுக்கும் உதவாமல்
உளறுபவன் கோமாளி!

நல்லவிதை நல்லெண்ணம்
நல்லவற்றை விளைவிக்கும்!
நல்லவயல் நல்லசெயல்
நிறைவான பலனளிக்கும்!
நல்லகதை நல்லுறவு
நாளெல்லாம் நலன்பயக்கும்!
நல்லவர்தம் வாழ்வொன்றே
நாட்டின்(கு) ஒளிகொடுக்கும்!



## Former YRDSB Chair Juanita Nathan seeks representation for residents of Ward 7 in the City of Markham

# முன்னாள் யோர்க் பிராந்திய கல்விச்சபைத் தலைவர் யூவனீட்டா நாதன் மார்க்கம் நகரத்தின் ஏழாம் வட்டாரத்தில்பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவர முயற்சி



தற்போதைய யோர்க் பிராந்திய கல்விச்சபையின் முன்னாள் தலைவரும் (YRDSB) மற்றும் தற்போதைய அறங்காவலரும் தமிழ் பேசும் சமூகசேவையாளருமான யூவனீட்டா நாதன் அவர்கள், மார்க்கம் நகரின் ஏழாம் வட்டாரத்துக்கான அடுத்த நகரசபை உறுப்பினராக ஆவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்.

"எனது குடும்பம், நண்பர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களோடு கலந்தாலோசித்த பிறகு, நகர அளவில் உள்ளூர் பிரச்சினைகளுக்கான எனது நிலைப்பாட்டை முன்னெடுக்க, 2022 ஒக்ரோபரில் நடைபெற உள்ள மார்க்கம் மாநகராட்சித் தேர்தலில் ஏழாம் வட்டாரத்துக்கான நகரசபை உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட முடிவு செய்துள்ளேன்" என்று யூவனீட்டா நாதன் தனது விருப்பத்தை அறிவித்துள்ளார்.

"ஏழாம் வட்டாரத்தில் நீண்டகாலமாக வசிப்பவள் என்ற முறையில், இந்த வட்டாரத்தில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் சமமானதாகவும், நிதி ரீதியாக நிறைவாகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் வலுவானதாகவும், பாதுகாப்பானதாகவும், அனைத்துச் சமூகங்களையும் உள்ளடக்கியதாகவும் அமைக்க நான் உறுதிபூண்டுள்ளேன்" என்று யூவனீட்டா நாதன் மேலும் கூறியுள்ளார்.

யூவனீட்டாவுக்கு மார்க்கத்தில் வசிப்பவர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுச் சேவையில் ஒருதசாப்தத்திற்கும் மேலான அனுபவம் உள்ளது. யூவனீட்டா 2010 ஆம் ஆண்டு முதல் YRDSB அறங்காவலராக இருந்து வருகிறார் . அவரது பதவிக்காலத்தில் YRDSB இன் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பணியாற்றியுள்ளார். அவர் ஒரு அறங்காவலராகப் பணியாற்றுவதோடு, யோர்க் பிராந்தியத்தில் உள்ள சமூக சேவை நிறுவனத்தில் சமூக ஆதரவுப் பணியாளராகவும் குடும்ப ஆலோசகராகவும் உள்ளார்.

Brock பல்கலைக்கழக பட்டதாரியான இவர், சமூக சேவைக்கான மகாராணியின் வைரவிழாப் பதக்கத்தையும் பெற்றவர். யூவனீட்டா சமூக மாற்றத்துக்கான செயற்பாட்டாளர். கனடிய உளநல சங்கம் - யோர்க் & சிம்கோ, மார்க்கம் தமிழ் அமைப்பு உட்பட பல்வேறு சமூக அமைப்புகளின் இயக்குநர் சபைகளில் பங்கெடுத்து ஆற்றிய சமூக சேவைகளுக்காக நன்கு அறியப்பட்டவர்.

"எங்கள் சமூகத்திற்கு மூன்று தடவைகள் அறங்காவலராகச் சேவையாற்றும் பெருமையும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துள்ளது. இந்த ஆண்டுகளில், நான் பல குடியிருப்பாளர்களைச் சந்தித்து அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் பரந்த அளவிலான உள்ளூர் விடயங்களில் அவர்களின் எண்ணங்களைக் கேட்டிருக்கிறேன்", என்று யூவனீட்டா நாதன் கூறியிருந்தார்.

"வரவிருக்கும் மாதங்களில், ஏழாம் வட்டாரத்தில் வசிப்பவர்களுடன் இணைந்து பணியாற்றும் சூழலை எதிர்பார்க்கின்றேன். மற்றும் எங்கள் சமூகங்களுக்கான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர்ப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த ஆவலொடு இருக்கிறேன்" என்று கூறி முடித்தார் யூவனீட்டா நாதன்.

**மேலதிக விபரங்களுக்கு: (416) 857-6308**

# நடிகர் சூரியா – ஜோதிகா தயாரிப்பான 'Oh My Dog' திரைப்படத்தில் வரும் "It's My Kinda Day" பாடலைப் பாடிய கனடா குட்டிப் பாடகர் அஜீஸ் பாராட்டப்பெறுகின்றார்



நடிகர் சூரியா-ஜோதிகா தயாரிப்பில் வெளியாகவுள்ள 'Oh My Dog' திரைப்படத்தில் வரும் "It's My Kinda Day" என்னும் பாடலைப் பாடிய கனடா வாழ் குட்டிப் பாடகர் அஜீஸ் அவர்களுக்கான பாராட்டு விழா ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று 6ம் திகதி கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ளது.

1686 Ellesmere Road, Scarborough, Ontario (Ellesmere and McCowan) என்னும் விலாசத்தில் அமைந்துள்ள JC's Banquet & Convention Centre மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த பாராட்டு விழாவில் பல பிரமுகர்கள் உரையாற்றவுள்ளார்கள். குட்டிப் பாடகர் அஜீஸ் அவர்கள் ஏற்கெனவே சில திரைப்படப் பாடல்களை பாடியுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அஜீஸ் சிவகுமார் கனடாவில் பிறந்து வளர்ந்து வரும் இளம் பாடகன் அண்மையில் தென்னிந்திய திரைப்படமான ''Oh My Dog'' இல் தன் முதலாவது பாடலான "Its My Kinda Day" என்ற பாடலை இசையமைப்பாளர் நிவாஸ் பிரசன்னாவின் இசையில் பாடி சிறிய வயதில் பின்னனிபாடகன் ஆனார்.

அவர் தன் 4 வயதிலிருந்தே மேற்கத்திய இசையை கற்றும் பின்பு கர்நாடக இசையை கற்றும் வருகிறார். இவருக்கு வாத்தியகருவிகளிலும் மிக ஈடுபாடு இருப்பதால் டிரம்ஸ், பியானோ மற்றும் கிட்டார் கற்றுவர பெற்றோர் மிகவும் ஆதரவு வழங்கிவருகிறார்கள். இவரின் பலம் என்றால் அது அவர் இசைமேல் வைத்திருக்கும் அதிக ஈடுபாடும் விடாமுயற்சியும் அதற்கு முற்றிலும் ஊக்கமும் ஆதரவும் கொடுக்கும் பெற்றோரும் ஆகும்.

மிக அண்மையில் இரண்டு independent songs வெளியிட்டுள்ளார் அவையாவன:

- "ஆகாய நீலமே" உத்தரா உன்னிகிருஷ்ணன் அவர்களோடு.
- "ஏலசா" தனிப்பாடல்

இரண்டு பாடலுக்கான இசை: ஸ்ரீஜய் ராகவன் - Sril Vijay.

சிறு வயதிலே எண்ணற்ற மேடை அனுபவம் கிடைக்கபெற்றார். கடந்த 7 ஆண்டுகளாக பல இசை நிகழ்ச்சிகளில் உற்சாகத்தோடு பங்கேற்று தனது இசைத்திறனை முழுமையாக வெளிக்காட்டி பலர்பாராட்டை பெற்றுள்ளார். மேடையில் தைரியமாக நின்று பாடும் அனுபவமும் பல அருமையான வாய்ப்புக்களும் பல இசைப்போடிகளில் கலந்துகொண்டதால் இவருக்கு அமைந்தது. அவை:

- பாரதி கலை பாடவா பாடவா 2018
- சுருதி இசைப்போட்டி
- நினைவுகள் 2018
- Hidden Talent Canada Vocal Competition
- London IBC தங்க குரல் 2018
- Super Singer Vijay Tv 2019

உலகெங்கும் நடைபெற்ற இசைப் போட்டிகளில் குறிப்பாக அவர் லண்டன் சென்று பங்கேற்ற ஐபிசியின் தங்க குரலில் முதல் 30 இடங்களைப் பிடித்து மேலும் அவர் இறுதிப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கபட்டு அதிலே அவருக்கு இசையமைப்பாளர் ஜிப்ரான் திரைப்படத்தில் பாட வாய்ப்பு வழங்குவதாக உறுதிப்படித்தினார்.

தற்போது அந்த பாடலுக்கான அனைத்து வேலையும் முடித்து பாடல் வெளியிட்டை எதிர்பார்த்து இருக்கிறார். இந்த பாடல் SPB Charan அவர்களுடன் இணைந்து பாடியது மிகவும் குறிப்பிடதக்கது. பாடசாலை நேரம் தவிர மீதி நேரம் இசை வகுப்புக்கள், இசை நிகழ்ச்சி, மனம் விரும்பிய பாடல் பதிவு செய்து இணையதளத்தில் இடுவது, இசை நேர்காணல் என இசையோடே அதிக நேரம் செலவிட்டுவருகிறார்.

இவரின் பாடும் திறன் அடையாளம் கண்டு Canada வில் பல முண்ணனி இசைக்குழுவினர்கள் இசை ஒருங்கிணைப்பாளர்கள் இவரை பல மேடை நிகழ்ச்சிகளில் Cinema பாடல் / பக்தி இசை பாடல்கள் பாடும் வாய்ப்புகளை அளித்துவருகிறார்கள்.

பாடல் பாட எவ்வளவு பிடிக்குமோ அவ்வளவு தூரம் அவர் பயிற்சியும் எடுத்துக்கொள்வார். Western பாடல், கர்நாடக சங்கீதம், பக்திப்பாடல், திரைஇசைப்பாடல் என எந்த பாட்டை எடுத்தாலும் அதன் தன்மை மாறாது பாட முயற்சிப்பது, ரசிக்கும் படி பாடுவது தாரஸ்தாயில் பாடும் ஆற்றலை பெற்றது பாவத்தோடு (Bhaavam) பாடுவது மற்றும் தைரியமாக பாடுவது இவரது தனித்துவம் ஆகும். தனக்கு கிடைத்த பாடும் திறனை கொண்டு பலரை மகிழ்விக்க வேண்டும் தமிழ் மகனாக தன் குடும்பத்திற்கும் தமிழ் மக்களுக்கும் இசைமூலம் பெருமை தேடித்தரவேண்டும் என பெரிய கனவோடு இவர் தன் இசைப்பயணத்தை. தொடர்கிறார்.

குட்டிப் பாடகர் அஜீஸ் அவர்கள் இசைத்துறையில் தொடர்ந்து பல வெற்றிகளை ஈட்ட வேண்டும் என்று கனடா உதயன் ஊடகக் குழுமம் வாழ்த்துகின்றது.



# இராசபக்ச குடும்பம் உலக வரலாற்றில் இருந்து பாடம் படிக்க மறுக்கிறது!

**- கனடா நக்கீரன்**

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.
*(அதிகாரம் கொடுங்கோன்மை - குறள் 551)*

***Than one who plies the murderer's trade, more cruel is the king
Who all injustice works, his subjects harassing. (Chapter The Cruel Sceptre - Kural 551)***

குடிமக்களின் பொருள்மீது ஆசை கொண்டு அவர்களைத் துன்புறுத்தித் தவறாக ஆளும் அரசு பகைகொண்டு பிறரைக் கொலை செய்பவரைக் காட்டிலும் கொடியது என்பது இதன் பொருளாகும். கொடுங்கோன்மை என்பது அரசாங்கத்தின் ஒரு சர்வாதிகார அல்லது எதேச்சதிகார வடிவமாகும். இதில் அதிகாரம் என்பது ஒரு தனிநபரிடமோ அல்லது ஆளும் வர்க்கத்திலோ குவிந்திருக்கும். அரசன் ஆளவேண்டிய முறைப்படி ஆள்வான் கொடுங்கோலன் தன் விருப்பம் போல் ஆள்வான். அரசன் எல்லோருயை நன்மையையும் நாடுவான் கொடுங்கோலன் சிலருடைய மகிழ்ச்சியையே நாடுவான்.
அரசர்கள் ஆட்சி செய்த காலத்தில் வள்ளுவர் அரசனது கொடுங்கோன்மை பற்றிச் சொன்னது இன்றைய மக்காட்சியில் கோலோச்சும் சனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் போன்றோருக்குப் பொருந்தி வரும்.

இலங்கையின் கடந்த 74 ஆண்டுகளுக்கு மேலாக மாறி மாறி ஆட்சியைப் பிடித்த அரசியல் கட்சித் தலைவர்கள் நாட்டு மக்களைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்தி தங்களையும், தங்களது குடும்பத்தையும் தங்களைச் சூழயிருந்த சொந்தங்களை செல்வந்தர்களாக்கினார்கள்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இனம், மொழி, சமயம் கடந்து இலங்கை மக்கள் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச, பிரதமர் மகிந்த இராசபக்ச இருவரும் தங்கள் பதவிகளைத் துறந்து விட்டு வீட்டுக்குப் போகுமாறு வெய்யிலிலும் மழையிலும் இளைஞர்கள் போராடி வருகிறார்கள். மேலும் ஒருபடி சென்று கருவூலத்தில் இருந்து கொள்ளையடித்த கோடிக்கணக்கான சொத்தையும் தந்துவிட்டு வெளியேறுமாறு கேட்கிறார்கள்.

இராசபக்ச குடும்பம், பண்டாரநாயக்க குடும்பம், சேனநாயக்கா குடும்பம் போல் அல்லாது ஒரு சாதாரண குடும்பம். ஆனால் இன்று அவர்கள் நாட்டின் மிகப் பெரிய கோடீசுவரர்கள். மிகக் குறுகிய காலத்தில் எப்படிக் கோடீசுவரர்கள் ஆனார்கள்?

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய நிதியமைச்சர் அலி சப்ரி நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை இலங்கை சுதந்திரத்தின் பின்னர், பாரிய நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருப்பதாகவும் அதற்கான காரணங்களை ஒளிவு மறைவின்றிச் சொன்னார். அவர் ஆற்றிய ஆற்றிய உரையில் காணப்பட்ட 13 தவறுகள் பின்வருமாறு:

(1) வருமான வரியை அதிகரிக்கும் புதிய வரவு - செலவு திட்டத்தின் முன்மொழிவு விரைவில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.
(2) வரி குறைப்பு (2019) பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்தது.
(3) ரூபாயை முன்னரே மிதக்க விட்டு, படிப்படியாகக் அதன் பெறுமதி குறைய அனுமதித்திருக்க வேண்டும்.
(4) பன்னாட்டு நாணய நிதியத்தின் **(IMF)** உதவி மிகவும் முன்னதாகவும் மிகவும் தேவைப்படும் நெருக்கடியான சூழ்நிலைகளின் போது பெறப்பட்டிருக்க வேண்டும்.
(5) கடன்களை மறுசீரமைப்பதில் ஏற்பட்ட தாமதம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்தது.
(6) இலங்கையின் பயன்படுத்தக்கூடிய வெளிநாட்டு கையிருப்பு தற்போது 50 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாகவே உள்ளது. 2019 இல் கையிருப்பு 7.5 பில்லியன் டொலராக இருந்தது.
(7) வரி வருவாய் தற்போது 24 விழுக்காட்டில் இருந்து 8.6 விழுக்காடாகக் குறைந்துள்ளது.
(8) 2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 1,464 பில்லியன் ரூபாவாகும் அதேவேளை 2021 ஆம் ஆண்டில் அரசாங்கச் செலவு 3,522 பில்லியன் ரூபாவாகும்.
(9) செலவினமானது வருமானத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும், அதே வேளையில் 2,748 பில்லியன் ரூபா தொடர்ச்சியான செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டது.
(10) பன்னாட்டு நிதி நிறுவனத்தின் ***(IMF)*** திட்டத்தில் நுழைவதற்கு இலங்கைக்கு குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும்.
(11) பல நாடுகளுடன் இடைக்கால நிதி பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.
(12) உலக வங்கியின் 400 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை 700 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்த பேச்சு வார்த்தை நடந்து வருகிறது.
(13) உலக வங்கி, ஆசிய மேம்பாட்டு வங்கி மற்றும் இந்தியா ஆகியவை அத்தியாவசிய மருந்துகளை வாங்குவதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடனில் மூழ்கித் தத்தளிக்கும் ஆட்சியைக் காப்பாற்ற நிதி அமைச்சர் அலி சப்ரி பொய்யான நம்பிக்கையை எழுப்பிக் கொண்டிருக்கும் வேளையில், யதார்த்தம் மேலும் மேலும் அவநம்பிக்கையையும் எழுப்புகிறது.

ஒரு சில அத்தியாவசிய பொருட்களை வாங்க சில்லறை விற்பனை நிலையங்களுக்கு முன் நீண்ட நுகர்வோர் வரிசைகளுக்கு முடிவே இல்லாமல் இருக்கிறது. அந்த வரிசைகள் நீண்டு கொண்டே செல்கின்றன. பாதிக்கப்பட்ட எட்டாவது நபர் மண்ணெண்ணெய் வாங்க காத்திருந்த போது உயிரிழந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சாத்தியமான அனைத்து நுகர்வுப் பொருட்களிலும் பற்றாக்குறை உள்ளது மற்றும் சந்தையில் கிடைக்கும் சிறிதளவு கூட அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இலங்கைக்கு வராத பட்டினி, தற்போது அடிமட்ட மக்களது வீடுகளின் கதவுகளைத் தட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில், வெளியில் இருந்து கிடைக்கப்பெறும் டொலர்கள் மட்டும் இந்தக் சிக்கல்களை நிரந்தரமாக தீர்க்க முடியாது. ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுப்பதன் மூலம் பணக்காரன் ஆக மாட்டான்இ அது போலவே நோய்த்தடுப்பு மருந்துகள் ஒருபோதும் நிரந்தர பாதுகாப்பை வழங்காது.

இதற்குப் பொது மற்றும் தனியார் துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சி மற்றும் சிதைந்த பொருளாதாரத்தை மறுகட்டமைக்க ஒருங்கிணைந்த திட்டம் தேவை. நிலவும் அரசியல் அராஜகத்தால் அது சாத்தியமில்லை.

எனவே அமைச்சர் சப்ரியின் நம்பிக்கை தவறானது மட்டுமல்ல குறைப் பிறப்பாகவும் காணப்படுகிறது. முன்னைய நிதி அமைச்சர்கள் போலவே இவரும் பொருளாதாரத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர் அல்லர். குருடர்கள் உள்ள நாட்டில் ஒற்றைக்கண்ணன் அரசனாக இருப்பது போன்று ஆளும் கட்சியில் நிதி அமைச்சர் பதவிக்குப் பொருத்தமானவர் இல்லாத காரணத்தினால் அந்த இடத்துக்கு சப்ரி அமர்த்தப்பட்டுள்ளார். ஆளும் கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது. ஒன்றுக்கு இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை சபாநாயகரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சபாநாயகரிடம் கையளித்துள்ளார். ஒன்று சனாதிபதி கோட்டாபய இராசபக்சக்கு எதிரானது. மற்றது பிரதமர் மகிந்த இராசபக்சவுக்கு எதிரானது.

கோட்டபாய இராசபக்ச மற்றம் மகிந்த இராசபக்ச இருவரும் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற கூக்குரல் மகிந்த இராசபக்ச மட்டும் பதவி விலக வேண்டும் என மாறியுள்ளது. ஆனால் மகிந்த இராசபக்ச தான் பதவி விலகப் போவதில்லை என்றும் தனக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கிறது என்றும் ஒரு இடைக்கால அரசு உருவாக்கப்பட்டாலும் தானே பிரதமர் என்றும் கூறிவருகிறார். அதனை மெய்ப்பிப்பது போல நேற்று துணை சபாநாயகர் தேர்தலுக்கு நடந்த வாக்கெடுப்பில் இரஞ்சித் சியம்பலபிட்டிய அவர்கள் 83 வாக்குள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். காரணம் தங்களை சுயாதீனக் குழு என்று சொல்லிக் கொண்டிருக்கும் 11 கட்சிகளைச் சேர்ந்த 39 நா.உறுப்பினர்களும் வாக்களித்துள்ளார்கள். இந்தச் சுயாதீனக் குழுவில் மைத்திரிபால சிறிசேனா அவர்களது சிறிலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ச அவர்களது தேசிய சுதந்திர முன்னணி, உதய கமன்பில்ல அவர்களது பிவித்துறு ஹெல உறுமய கட்சிகள் இடம் பிடித்துள்ளன.

இந்தப் பின்னணியில் ஆளும் கோட்டாபய மற்றும் மகிந்தா இராசபக்ச இருவருக்கும் எதிரான போராட்டம் எழுச்சியோடு தொடர்கிறது. முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், தொடர்வண்டி ஊழியர்கள் மற்றும் பவுத்த தேரர்கள் ஒரு அணியிலில் திரண்டு போராடுகிறார்கள். இன்று மே 6 அன்று நாடுதழுவிய கதவடைப்புப் போராட்டத்துக்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன. தங்களது வேண்டுகோள்களுக்கு அரசு செவி சாய்க்காவிட்டால் அடுத்த வாரம் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள்.

மிக நுணுக்கமாக வடிவமைத்த "மஹிந்த இராசபக்ச' ஒரு முழுமையான வம்ச நிறுவனமானது இன்று இடிந்து கொண்டிருக்கிறது. மகிந்த இராசபக்ச மட்டும் இல்லை முபாரக், கடாபி, சுஹார்டோ மற்றும் பலர் தங்கள் சந்ததியினரை அரியணையில் அமர்த்த நினைத்தார்கள். ஆனால் விதி வேறுவிதமாக விளையாடியது. பெரும்பாலான மூன்றாம் உலகின் குட்டி சர்வாதிகாரிகளும் அப்படித்தான் நினைத்தார்கள். நினைக்கிறார்கள்.

கோட்டாபய, மகிந்தா மற்றும் பசில் இராசபக்க ஆகியோரது உருவப் படங்களை தெருவில் ஆர்பாட்டக்காரர்கள் இழுத்துச் செல்கிறார்கள். பாடையில் வைத்துக் காவுகிறார்கள். அவர்களது கொடும்பாவிகளைத் தீயிட்டுக் கொளுத்துகிறார்கள். பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

லிபியாவின் சர்வாதிகாரி மொயம்மர் கடாபிக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்த போது அவர் அதனை நம்பவில்லை. "எனது மக்கள் அனைவரும் என்னை நேசிக்கிறார்கள் என்னைப் பாதுகாக்க அவர்கள் உயிரையும் கொடுக்க அணியமாக இருக்கிறார்கள்" என்று கடாபி பிபிசி க்கு அளித்த நேர்காணலில் **(01/03/2011)** கூறினார். தெருக்களில் இறங்கிப் போராடும் மக்கள் "வெளியாட்கள்" வழங்கிய போதைப் பொருளின் தாக்கத்தில் இருந்ததாகவும் கடாபி குற்றம் சாட்டினார்.

மொத்தம் 41 ஆண்டுகளுக்கும் மேலாக லிபியாவை ஆண்ட கடாபியின் இறப்பு பரிதாபமாக இருந்தது. மயக்கமடைந்த நிலையில் கடாபி பிடிபட்டு ஒரு வடிகால் வழியாக அழைத்துச் செல்லப்படுகிறார், அவரது தலையின் இடது பக்கத்தில் ஆழமான காயம் இருந்தது, அவரது உடற்பகுதியில் ஏற்பட்ட மற்ற காயங்களிலிருந்து வடிந்த குருதியால் அவரது சட்டை சிவப்பு நிறத்தில் இருந்தது. அடுத்ததாக தரையில் காணப்படுகிறார். அவரை ஆயுதங்களுடன் சூழ்ந்து நின்ற துப்பாகிதாரிகள் "இறைவனே மிகப் பெரியவன்" (அல்லாகு அக்பர்) என்று கூச்சலிட்டுக் கொண்டு கடாபி மீது துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள். "நான் உங்களுக்கு என்ன செய்தேன்? சுட வேண்டாம்" என்று கடாபி கெஞ்சியதைக் கிளர்ச்சிக்காரர்கள் காதில் போடவில்லை.
இராசபக்ச குடும்பம் உலக வரலாற்றில் இருந்து பாடம் படிக்க மறுக்கிறது!



சுவாமி விபுலாநந்தர் தமிழ் ஆய்வு மையம் கனடா
அறுபதாம் ஆண்டு பாராட்டு விழாவும் நூல்வெளியீடும்
திரு. சின்னையா சிவநேசன் .B.Sc.,B.Ed,OCT ,ESL .
(மேனாள் கல்வி ஆலோசகர் .தொரொன்ரோக் கல்விச்சபை ) இந்நாள் சிரேஷ்ட விரிவுரையாளர் (ஆங்கிலம்)
அண்ணாமலை கனடா
மதிப்புக்குரிய திரு. சின்னையா சிவநேசன் அவர்களின் 60 ஆண்டுகால கல்வி, சமூகம், சமயம், ஊடகம் ஆகிய துறைகளில் ஆற்றிய பணிகளைப் பாராட்டும் வைபவமும் நூல் வெளியீடும்
இடம்: ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7
காலம்: மே 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி
வெளியிடப்படும் நூல்கள்:
1. நினைவில் நிற்பவை (சுய வரலாறு)
2 காலத்தால் அழியா ஆங்கிலக் கவிதைகள் (தமிழ் வடிவம்)
3. நரி மாப்பிள்ளை ( திருந்திய பதிப்பு ) ஒரு குறு நாடகம்
நூல் விமர்சனம்
திரு. சின்னத்தம்பி சண்முகராஜா M.A
பேராசிரியர் வண. அ. ஜோ சந்திரகாந்தன்
ஆசிரியர். வி. திவ்யராஜன்
மேற்படி விழாவுக்கு நமது மைய உறுப்பினர்கள் ,அண்ணாமலை கனடா வளாகத்தின் விரிவுரையாளர்கள் மாணவர்கள், ஊடக நண்பர்கள், பல்வேறு தொழில்சார் நிபுணர்கள், வர்த்தக அன்பர்கள், பல்வேறு சங்க உறுப்பினர்கள், பல்வேறு முதியோர் சங்க உறுப்பினர்கள் அவரது நண்பர்கள், உறவினர்கள் நலன்விரும்பிகள் யாவரையும் வருகை தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
முக்கிய குறிப்பு : விழா சரியாக 3 மணிக்கு ஆரம்பமாகும் அன்பர்கள் யாவரும் கோவிட் தொற்று அறிவுறுத்தலுக்கு ஏற்ப முகக் கவசம் அணியுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம்.
பேராசிரியர் இளையதம்பி பாலசுந்தரம்
தலைவர் 416 267 5255
க. குமரகுரு .M.A.
செயலாளர் 647 224 8871



# தொழிலாளர் தினமும் மறக்கப்பட்ட இரு ஆளுமைகளும்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர், லண்டன்)**

தொழிற்சங்கங்களை அரசியல்வாதிகள் கைப்பற்றும் போது, தொழிலாளர்கள் பகடை காய்களாகின்றனர். அவர்கள் அரசியல் சார்பற்று தமது உரிமைகளுக்காகப் போராடும் போது ஒற்றுமை ஓங்கியிருந்தது. ஆனால் காலம் செல்லச் செல்ல தொழிற்சங்கம் என்ற கட்டமைப்பு "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" கதையாயிற்று. இது வளர்முக நாடுகள் அனைத்திற்கும் பொருந்தும். இதற்கு இந்திய, இலங்கை போன்ற நாடுகளும் விதிவிலக்கல்ல. பொதுவாக மே மாதம் முதலாம் திகதி, இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் தமது பலத்தை நிரூபிக்கும் பொருட்டு, தொழிலாளர் தின பேரணிகளை நடத்துவதும், அதன் மூலம் ஏராளமான வசூலில் இறங்குவதும், இதன் போது அடிதடிகள் நடைபெறுவதும் காலத்திற்குக் காலம் நடைபெற்று வந்துள்ளது. இதிலும் குறிப்பாக தென்னிலங்கையில் கொழும்பிலும், மலையகப் பகுதிகளிலும் மே தின ஊர்வலம் என்பது கூர்ந்து கவனிக்கப்பட்டன. ஊர்வலத்திற்கு வரும் கூட்டங்களை தங்களது ஆதரவாளர்கள் என்று காட்டுவதற்கு அதன் மூலம் "சந்தா அரசியல்" செய்வதற்கும் மே 1 ஆம் திகதி ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. சர்வதேச தொழிலாளர் தினமாக அனுசரிக்கப்படும் மே 1 ஆம் திகதி, தொழிலாளர்களுக்கு உதவியதோ இல்லையோ, தொழிற்சங்கங்களும் அதன் தலைவர்களும் தம்மை வளர்த்துக்கொள்ளப் பெரிதும் உதவின.

இதில் மிகவும் இலாபம் அடைந்தவை மலையகத்தில் இலங்கை தொண்டமான் காங்கிரஸ் என்று சமூக ஊடகங்களில் நையாண்டியாக விமர்சிக்கப்படும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தென்னிலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி. எனினும், இலங்கையில் இடதுசாரி இயக்கங்களும் அந்த கொள்கைகளைக் கொண்டிருந்த இலங்கை கம்யூனிஸ்க் கட்சி, நவ சமசமாஜ கட்சி, லங்கா சமசமாஜ கட்சி போன்ற பல கட்சிகள் காலவோட்டத்தில் நீர்த்துப் போயின.

ஆனால், இன்று இலங்கையில் அரசிற்கு எதிராகத் தொடரும் போராட்டங்களில் சிறிதும் பெரிதுமாகப் பல தொழிற்சங்கங்கள் ஈடுபட்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றன. அவர்களுக்கு ஆங்காங்கே அரச உத்தியோகத்தர்கள் மட்டுமின்றி, தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் மத்தியிலும் கணிசமான ஆதரவுள்ளதை அவதானிக்க முடிகிறது. பல்கலைக்கழகங்களில் கற்றலில் ஈடுபட்டுள்ள இளம் பிக்குகளும் அரசிற்கு எதிரான இந்த போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இன்று - 6 மே 2022 - இலங்கையின் தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தொழில்சார் வல்லுநர்கள் நாடு தழுவிய முழு அடைப்பிற்கான அழைப்பை விடுத்துள்ளனர். "கோட்டா வீட்டிற்குச் செல்லுங்கள்" போராட்டத்திற்கான ஆதரவாக இந்த அறைகூவல் - ஹர்த்தால் - விடுக்கப்பட்டுள்ளது என்று தொழிற்சங்க தலைவர்களில் ஒருவரான ரவி குமுதேஷ் சமூக ஊடகச் செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.



"எமக்கு 11 ஆம் திகதிக்கு முன்னதாக சாதகமான பதிலொன்று கிடைக்கவில்லையென்றால், இந்த அடையாள போராட்டம் தொடரும் போராட்டமாகவும் பொது வேலை நிறுத்தமாகவும் முன்னெடுக்கப்படும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், இலங்கையில் தொழிற்சங்க கட்டமைப்பை ஏற்படுத்தி அதை வலுப்படுத்திய இருவர் இன்று பெரும்பாலும் மறக்கப்பட்டுள்ளனர். இந்த பேரணிகளில் தொண்டமான்களும், ராஜபக்சக்களும் புகழப்படும் அளவிற்கு இல்லையென்றாலும், சம்பிரதாய ரீதியில் கூட இந்த இருவரும் நினைவுகொள்ளப்படுவதில்லை என்பது மிகவும் கசப்பான உண்மை.

ஒருவர் ஏ இ குணசிங்க மற்றொருவர் தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தில் பிறந்து மலையகத்திற்கு சென்று அங்கு தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய கோதண்டராம நடேச ஐயர். இவர்கள் இருவரும் இணைந்து தொடங்கிய "சிலோன் லேபர் யூனியன்" இலங்கையின் முதலாவது தொழிற்சங்கமாகும். நடேச ஐயர் சில காலம் சென்னையில் எழுத்தராக (குமாஸ்தா) பணியாற்றியபின் நூறாண்டுகளுக்கு முன்னர் "தேச நேசன்" எனும் இதழிற்கு ஆசிரியராகச் சென்றார். சிலோனீஸ் தேசிய காங்கிரஸ் அமைப்பில் இருந்த அருணாசலம் மற்றும் இ வி ரட்ணம் ஆகியோர் அந்த பத்திரிகையை நடத்திவந்தனர். "சிலோன் லேபர் யூனியனில்" துணைத்தலைவராகவும் செயல்பட்ட நடேச ஐயர் பின்னர் அந்த அமைப்பில் தமிழ் மற்றும் சிங்கள உறுப்பினர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக, அதிலிருந்து விலகினார். நாட்டின் அனைத்து பிரச்சனைகள் மற்றும் துன்பங்களுக்கும் இந்திய வம்சாவளி தமிழர்களே காரணம் என்று ஏ இ குணசிங்க குற்றஞ்சாட்டியதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து, அந்த அமைப்பிலிருந்து வெளியேறி மலையகத்தின் தனியாக - அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை - தோற்றுவித்து அதை தான் காலமாகும்வரை வெற்றிகரமாகவும் நடத்திக்காட்டினார். பின்னர் இலங்கை அரசியல் சபைக்கு ஹட்டன் நகரிலிருந்து 1936 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு 1947 வரை அதில் ஆக்கபூர்வமாகச் செயல்பட்டார். அதேவேளை ஆங்கிலத்தில் "தி இண்டியன் எஸ்டேட் லேபரர்" என்ற சஞ்சிகையையும் நடத்தினார்.

இன்று இலங்கையில் குறைந்தபட்ச ஊதியம் என்ற கோட்பாடு சட்டரீதியாக திகழ்வதற்கு நடேச ஐயரின் முயற்சியும் முன்னெடுப்பும் மிகவும் அளப்பரியது. அந்த சட்டத்தின்படி 10 வயதிற்கு கீழேயுள்ள எவரையும் பெருந்தோட்டங்களில் அறிந்தோ அறியாமலோ பணிக்கு அமர்த்த முடியாது. அதேபோன்று தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ஒன்று நிர்ணயிக்கப்பட்டதும் அவரின் முயற்சியே.

இதே போன்று தென்னிலங்கையில் இன்று நடைபெறும் போராட்டங்களைப் போன்று ஆங்கில அரசிற்கு எதிரான ஒரு பாரிய முன்னெடுப்பு 1929 ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது இலங்கையில் பிரதான போக்குவரத்து கட்டமைப்பாக இருந்தது டிராம் கார்கள் (tram car). லண்டனின் புறநகரில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டிருந்த பௌஸ்டெட் கம்பெனி அந்த டிராம் சேவையை நடத்தி வந்தது. அந்த அலுவலகம் இருந்த இடம் இடத்தில் இன்று பெரிய வணிக வளாகம் செயல்படுகிறது. பல நாடுகளில் போக்குவரத்து சேவைகளை நடத்திய பல பிரிட்டிஷ் நிறுவனங்களைப் போலவே பௌஸ்டெட் கம்பெனியும் கொழும்பு டிராம் சேவை மூலம் கொள்ளை இலாபம் ஈட்டியது. ஆனால் அதன் ஊழியர்களின் தேவைகள் மற்றும் குறைகளைத் தொடர்ந்து புறந்தள்ளியது. பேச்சுவார்த்தைகள் இனி



பலனளிக்காது என்ற நிலையில் ஏ இ குணசிங்க தலைமையில் வேலை நிறுத்தப் போராட்டம் வெடித்தது. கொழும்பு நகரம் ஸ்தம்பித்தது. வர்த்தகமும் பொருளாதாரமும் முடங்கியது. மக்கள் டிராம் சேவைகளை புறக்கணித்தனர்.

மனித உரிமைகள் என்ற வார்த்தை அகராதியில் இல்லாத நிலையில், பிரிட்டிஷ் அரசு அந்த போராட்டத்தை ஒடுக்க எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. அவர்கள் எடுத்த ஒவ்வொரு முயற்சியையும் தனது தலைமைத்துவம் மற்றும் ஆற்றல் காரணமாக முறியடித்தார் குணசிங்க. காலனித்துவ அரசின் பொலிசாரின் அடக்குமுறைக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டிப் போராடி ஆங்கிலேய அரசிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார் குணசிங்க.




அந்த டிராம்வே வேலை நிறுத்தம் இலங்கையின் அரசியல் மற்றும் தொழிற்சங்க சரித்திரத்தில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. இந்த போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திக்காட்டிய குணசிங்க இலங்கை தொழிற்சங்கத்தின் தந்தை என்று போற்றப்பட்டார். நிறம் சற்று கருப்பாக இருந்தாலும் ஒரு கதாநாயகனுக்கு உரிய உடல்வாகை அவர் கொண்டிருந்தார். அவரது உடலமைப்பு அவரது ஆளுமைக்கு மிகவும் பக்கபலமாக இருந்தது. அவரது இருந்த சட்ட அறிவும் சட்டத்தரணிகளின் நட்பும், சரளமாக ஆங்கிலம் பேசும் நாவன்மையும் அவருக்கு பெரிதும் உதவின. அச்சம் என்பதை அறியாத குணசிங்கவை கண்டு ஆங்கிலேயர்கள் அச்சுறும் காலம் ஏற்பட்டது. அவரை இரகசிய பொலிசார் தொடர்ந்து கண்காணித்தாலும், அவருக்கு உள் தகவல்களுக்குப் பஞ்சமில்லாமல் இருந்ததால், பொல்லும் துவக்கும் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆங்கில அரசின் ஆதிக்கம் எங்கும் நிலைத்திருந்த நிலையில், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஆன்னி பெசண்ட் அம்மையார், கண்டி தர்மராஜா கல்லூரியில் ஆற்றிய உரை குணசிங்க மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உணர்வை அம்மையாரின் பேச்சு அவருள் தட்டியெழுப்பியது. அத்தோடு வண. அன்காரிக தர்மபாலவின் ஆளுமையாலும் பேச்சாலும் குணசிங்க ஈர்க்கப்பட்டார். 1915 இல் கண்டியில் நடைபெற்ற சிங்கள - முஸ்லிம் மோதல்களின் போது கைதாகி 50 நாட்களுக்கும் மேல் சிறையில் இருந்த பிறகு விடுதலையான குணசிங்க கொழும்பு வந்த போது தர்மபாலவின் நட்பும் பேச்சும் அவரது தொழிற்சங்க உணர்வுகளை ஊட்டி வளர்த்தது.

தீவிர தொழிற்சங்க செயல்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் ஏ இ குணசிங் இலங்கை இளையோர் லீக் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஏகாதிபத்திய சிந்தனைகளுக்கு எதிராக இருந்த இளைஞர்களை அந்த அமைப்பு ஈர்த்தது. தேசிய உணர்ச்சியை ஒரு அமைப்பின் மூலம் ஒருமுகப்படுத்தும் போது நாட்டின் விடுதலை சாத்தியமாகும் என்று அவர் தொடர்ந்து வலியுறுத்தி பிரச்சாரம் செய்து வந்தார். இலங்கையில் விடுதலைப் போராட்டம் என்பது பெரியளவில் இல்லாத போது தொழிற்சங்கங்களே அந்த விடுதலை உணர்வை மக்களிடையே ஊட்டி வளர்த்தன.

ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்திய "தலைக்கட்டு வரி"; போல் டாக்ஸ் - நாட்டின் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. அதன்படி 21 வயதிற்கு மேலானவர்கள் ஆண்டுதோறும் அரசிற்கு இரண்டு ரூபாய் வரியாக கட்ட வேண்டும், அல்லது ஆறு நாட்கள் சாலைகளில் கடுழியம் செய்ய வேண்டும். இதற்கு எதிரான குணசிங்க தலைமையிலான இளையோர் லீக் பிரச்சாரப் போராட்டங்களை முன்னெடுத்தது. இது அவரை மேலும் பிரபலமாக்கியது. இந்த வரிகொடா இயக்கத்தின் ஒரு பகுதியாக குணசிங்க சாலையில் கல் உடைக்கும் செயல்பாட்டை முன்னெடுத்தார். அவருடன் நான்காயிரம் பேர் அதில் இணைய ஆங்கிலேய அரசால் அவர்களுக்கு கற்களை உடைக்க சுத்தியலை அளிக்க முடியவில்லை பின்னர் அந்த "தலைக்கட்டு வரி" ஒழிக்கப்பட்டது.

அனைத்திலும் பார்க்க அனைவருக்கும் வாக்குரிமை என்ற இயக்கத்தை அவரும் நடேச ஐயரும் இணைந்து முன்னெடுத்தனர். படித்தவர்கள், வருமான வரி கட்டுபவர்கள் என்று நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 4% மக்களுக்கே வாக்குரிமை இருந்ததை 21 வயதான அனைவருக்கும் அளிக்க வேண்டும் என்று போராடியவர்களில் ஏ இ குணசிங்கவும் நடேச ஐயரும் முன்னோடிகளாக இருந்தனர். அதற்கான நடந்த போராட்டங்களில் மக்களைத் திரட்டுவதில் இவர்கள் இருவரின் ஆளுமையும் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களத்தில் பேசும் வல்லமையும் லட்சக்கணக்கான மக்களை போராட்டத்தில் பங்குபெற வைத்தது. இருவரும் தமது தொழிற்சங்க உறுப்பினர்களுடன் டோனமோர் ஆணையத்திடம் சென்று வாதிட்டனர். இறுதியில் வெற்றியும் பெற்றனர். அந்த போராட்டத்தின் விளைவாக ஆசியாவிலேயே அனைவருக்கும் வாக்குரிமை என்ற பெருமையை இலங்கை பெற்றது. இன்று அந்த வாக்குரிமையின் பலனைக் கொண்டே சேனநாயக்க, பண்டாரநாயக்க முதல் ராஜபக்சக்கள் வரை ஆட்சியில் அமர முடிந்தது.




ஏ இ குணசிங்க மற்றும் நடேச ஐயர் இருவரும் பின்னாளில் கொள்கை முரண்பாடு காரணமாகப் பிரிந்து சென்றாலும், தொழிலாளர்களின் நலன்களில் அவர்கள் ஒரு நாளும் விட்டுக்கொடுப்பு செய்தது கிடையாது. அதேவேளை மக்களுக்கான விடுதலை என்பது பரந்துபட்ட அளவில் சமூக மற்றும் பொருளாதார மாற்றங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதில் இருவரும் உறுதியாக இருந்தனர்.

அந்த இருவரும் சமூக ஜனநாயகம் என்ற கொள்கையில் நீங்கா பற்று வைத்திருந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக இன்று இந்த இருவரைப் போல தேசத்தின் மீது உழைக்கும் மக்கள் மீதும் மாறாத பற்றும் அவர்களுக்காக உழைக்க வேண்டும் என்கிற கொள்கையும் கொண்ட தலைவர்களைக் காண்பது மிகவும் அரிதாகிவிட்டது. இலங்கை சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளை நெருங்கும் நிலையில், நாட்டின் சொத்துக்களை கொள்ளையடித்தும், தொழிலாளர்களை சுரண்டியும், பிரிவினைவாதம் பேசியும், இன முரண்பாடுகளை ஏற்படுத்து சுயலாபம் அடைந்தவர்களுமே இன்று இலங்கையில் தலைவர்களாகப் பார்க்கப்படுகின்றனர்."

## 26th YEAR IN PUBLISHING, NEWS, VIEWS AND TAMIL LITERATURE

# கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ் வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பயண விழாவும்

காலம்: **Sunday. May 29th, 2022**
**மாலை 5:30**

இடம்: **Metropolitan Centre**
**3840 Finch Avenue East**
**Scarborough, ON MIT 3TA**

வரவேற்புபசாரம்... உரைகள்... இசை மற்றும் நடனம்...







விழா பற்றிய விபரங்களுக்கு:

கதிர்: (416) 893-0399
சோதி: (647) 409-8966
வீணைமைந்தன்: (514) 684-3604
சங்கர்: (416) 270-4343
ஸ்ரீ: (416) 720-6811
மரியராசா: (416) 669-6437
சங்கர் சிவா: (647) 891-7725

(குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகும்)

## சிந்தனைக் களம்
### (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

**Zoom ID: 830 8142 3243 Passcode:430 829)**

**14 மே 2022 (சனிக்கிழமை) 9:00pm-11:30pm (கனடா-ரொறன்ரோ)**

**(இலங்கை, இந்தியா - 15 மே 2022 ஞாயிற்றுக்கிழமை 6:30am-9:00am)**
**(சிட்னி - 15 மே 2022 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:30pm)**

**உரைத்தொடர் - 17**

உரைப் பொருள்
***செவ்வியலிசை - பாரதிகள் ஐவர்***

உரையாளர்
***ஸ்ரீ அசோக் சுப்ரமணியம்***



Gandharva Vidya Center.
Bay Area, California

## தமிழ்ப்பூங்காவின்
## பாடுங்குயில் – 2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
வயது 4 முதல் 12 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
**May** (வைகாசி) **31, 2022**

விபரங்களுக்கு: **(647) 706-6123**
**3001 Markham Road #21 Scarborough, ONM1X 1L6**

நவக்கிரி மக்கள் ஒன்றியம் கனடா
## பொதுக்கூடமும் புதிய நிர்வாகசபைத் தேர்வும்

நவக்கிரி மக்கள் ஒன்றியம் கனடாவின் பொதுக்கூடமும் புதிய நிர்வாகசபைத் தேர்வும் வரும் மே மதம் 8ம் திகதி 2022 ஆண்டு பிற்பகல் 3:00 மணியில் இருந்து 5:00 மணிவரை தீர்மானிக்கப்படுள்ளது. அனைத்து நவக்கிரி ஊர் மக்களும் கலந்து கொண்டு இக் கூட்டத்தை சிறப்பிக்கவும் ஊரின் பெருமையை வளர்க்குவும் உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளுத.

இடம்: **7340 Markham Road (Underground Party Hall)**
**Markham ON L3S 0B1**

காலம்: **May 8th, 2022** பிற்பகல் 3:00 தொடக்கம் மாலை 5:00 மணி வரை

மேலதிக தொடர்புகளுக்கு 416-888-1128 அல்லது 647-818-6750



# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
**905-201-8900**



# மீண்டும் தேர்வு செய்யுங்கள்

# விஜய் தணிகாசலம்

## ஸ்காபரோ றூஜ் பார்க் MPP வேட்பாளர்

**RE-ELECT**
**JUNE 02**
**2022**



**ONTARIO PC**

விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்

vijaythani.ca info@vijaythani.ca 647-946-7761

Authorized by the CFO for the Scarborough-Rouge Park PC Riding Association

ஓம் முருகா

# கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்

## Canada Sri Shanmuganatha Swamy Temple



08/05/2022
ஞாயிற்றுக்கிழமை
தொடக்கம்

23/05/2022
திங்கட்கிழமை
வரை

# 2022

# மகோற்சவப் பெருவிழா

**சண்முகப்பெருமான் அடியார்களே!**

சகல செல்வங்களும் ஒருங்கே அமைந்த கனடாத் திருநாட்டிலே, சைவமும் தமிழும் நறுமணம் வீசும் ஒன்ராரியோ மாநிலத்தின் கண் அமைந்துள்ள ரொறன்ரோ மாநகரிலே திருக்கோயில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர் வேண்டுவதை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் வள்ளி தேவசேனா சமேத சண்முகப்பெருமானுக்கு நிகழும் மங்கள கரமான சுபகிருது வருடம் சித்திரை 25 ஆம் நாள் ( 08/05/2022 ) ஞாயிற்றுக்கிழமை தெய்வேந்திர முகூர்த்த நேரமான நண்பகல் 12:00 மணிக்கு துவஜாரோகணம்(கொடியேற்றம்) நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் பகல்–இரவு மகோற்சவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் தினமும் காலையும் மாலையும் ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆறுமுகப் பெருமானின் திருவருளைப் பரிபூரணமாகப் பெற்றேகுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

08/05/2022
கொடியேற்றம்
ஞாயிற்றுக்கிழமை

21/05/2022
தேர்த்திருவிழா
சனிக்கிழமை

22/05/2022
தீர்த்தத் திருவிழா
ஞாயிற்றுக்கிழமை

23/05/2022
திருக்கல்யாணம்
திங்கட்கிழமை

மகோற்சவக் குருக்கள்
சிவஸ்ரீ. குமார் குருக்கள்
ஆலய குருமார்கள்
வி.கே.சதீஸ் குருக்கள் (பட்டர்)
மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

சர்வ சாதகம்
'சாதகச் சுடர்' ப்ரம்மஸ்ரீ.
கெங்காதர. வெங்கடரமணசர்மா

ஆலய நிர்மாணம்
ஸ்தபதியர் திலகம்'சிற்பகலை அரசன்' 'விஸ்வப்பிரமஸ்ரீ'
'சித்திரத்தேர் சக்கரவர்த்தி'
திரு. சரவணமுத்து ஜெயராஜா

அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!

சண்முக சேவையில்,
சண்முகப் பித்தன்,
(ஆலய தர்மகர்த்தா)

33 Melford Drive, Unit 8, Scarborough, ON M1B 2G6
416-613-1883
https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple
www.omshanmuga.org


MORTGAGES & REFINANCES
WE WILL GET THE MORTGAGE FOR
• LOW INCOME
• BAD CREDIT
• CONSUMER PROPOSAL
அனைத்துவிதமான
மோட்கேஜ்
தேவைகளுக்கும்,
ஆலோசனைகளுக்கும்
அழையுங்கள்!
PRIVATE FIRST
AND 2ND MORTGAGES
WITHIN 24 HOURS
WE ARE CONFIDENT
THAT WE CAN HELP YOU
Shan Thayaparan
Mortgage Architect
M08009140
416-826-7426
shan@shan123.com
MORTGAGE ARCHITECTS


Bhairavi Music Academy
பைரவி நுண்கலைக்கூடம் வழங்கும்
GREENFLAME®ன்
ONTARIO
இசைச்சாரல்-3
குரலிசை போட்டி
உங்கள் ஈழத்தாய் தொலைக்காட்சியில்
பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணிக்கு
நிரந்தர நடுவர்
மயூரதி தேவதாஸ்
தமிழ் உச்சரிப்பு நடுவர்
அகணி சுரேஷ்
eet TV
நிரந்தர நடுவர்
அபிராமி கிருஷ்ணா
நிகழ்ச்சித்தொகுப்பு
சாந்தினி சிவகுமாரன்

## பெருமைக்குரிய நீதிபதி மேதகு கே. சந்துரு எழுதிய

# "நானும் நீதிபதியானேன்" நூல் திறனாய்வு

பழ. நெடுமாறன்

30க்கும் மேற்பட்ட ஆண்டுகள் வழக்குரைஞராகத் திகழ்ந்து அறத்தை நிலைநிறுத்த இடைவிடாது போராடியவர் பின்னர் உயர்நீதிமன்ற நீதிநாயகமாக உயர்ந்து "சமன்செய்து சீர்தூக்கும் கோல் போல்" அனைவருக்கும் குறிப்பாக, திக்கற்றுத் தவித்த அடித்தள மக்களுக்கு நீதி வழங்கிய பெருமைக்குரியவர் மேதகு கே. சந்துரு ஆவார்.

"நானும் நீதிபதியானேன்" என்ற தலைப்பில் அவருடைய தன் வரலாற்றை ஏறத்தாழ 500 பக்கங்களில் எழுதியுள்ளார். எத்தகைய ஒளிவு மறைவு இல்லாமலும், மிகையோ, கற்பனையோ சிறிதும் கலக்காமலும், தங்களது வரலாற்றை எழுதியவர்கள் மிகக் குறைவு. காந்தியடிகள் தனது வரலாற்றில் நடந்ததை நடந்தவாறே சத்திய சோதனையாக எழுதியுள்ளாரோ, அதேபோல சந்துரு அவர்களும் எத்தகைய ஒளிவு மறைவின்றி எழுதியிருக்கிறார்.

நீதிமன்றத்தில் தான் எடுத்துக்கொண்ட வழக்குக்காக வாதாடுவது மட்டுமல்ல, நீதிமன்ற வளாகத்தில் நடைபெறும் சட்டமீறல்களையும் துணிவுடன் நீதிபதிகளிடம் எடுத்துக்கூறி அவற்றைத் திருத்திய பெருமை அவருக்கு உண்டு. நீதிமன்ற வாயிலில் விலங்கிடப்பட்ட நிலையில் கைதி ஒருவர் அமர்ந்திருப்பதையும், அருகே காவலர்கள் காவல் காப்பதையும் கண்ட அவர் திடுக்கிட்டுப் போனார். உடனடியாக நீதிபதியிடம் உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒன்றை எடுத்துக்காட்டி அந்தக் கைவிலங்கை அகற்றச் செய்தவர் சந்துரு அவர்களாவார்.

அதுமட்டுமல்ல, 1994 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளின் அமைப்பைச் சேர்ந்த போராளியான கவுதமி போரினால் பாதிக்கப்பட்டு இடுப்புக் கீழ் செயலற்ற நிலையில் தமிழகம் கொண்டுவரப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அந்த நிலையில் சிறிதுகூட இரக்கம் காட்டாமல் அவரைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தது அன்றைய தமிழக அரசு. அவருக்காகவும், அவரைப் போல பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் நீதிமன்றத்தில் வாதாடி அவர்களை மருத்துவமனைகளில் சேர்த்து சிகிச்சை அளிக்கும் தீர்ப்பினைப் பெற்றுத் தந்தார்.

தனியார் மருத்துவமனை எதுவும் அவரை அனுமதிக்க மறுத்தன. அருட்சகோதரி ஹெர்மினா அவர்கள் தனது மருத்துவமனையில் அனுமதிக்க முன்வந்தார். ஆனாலும், கவுதமியின் படுக்கையருகே காவலர்கள் நிறுத்தப்பட்டனர். இயற்கைக் கடன்களைக் கழிக்கும் வேளையில்கூட அவர்கள் வெளியேற மறுத்தனர். உடனடியாக சந்துரு அவர்களுக்கு இதை நான் தெரிவித்தபோது, அவர் நீதிமன்றத்தில் முறையிட்டார். ஆனால், நீதிபதியோ "அந்தப் பெண் ஓடிவிட்டால் நீங்கள் பொறுப்பு ஏற்பீர்களா?" எனக் கேட்டபோது, சர்வதேச பிரகடனங்களையும், அகதிகளின் உரிமைகளையும் விளக்கிச் சொல்லி கவுதமிக்கு விடுதலைப் பெற்றுத் தந்து, அவர் பத்திரமாக நாடு திரும்ப உதவியவர் சந்துரு அவர்கள்.

தமிழ்நாட்டில் அரசு அமைத்த அகதிகளின் முகாம்களில் வாழ்ந்த ஈழத் தமிழ் அகதிகளை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி இலங்கை அனுப்புவதற்கு முற்படும் அரசின் செயலை தடுக்கவேண்டும் என நானும், மரு. இராமதாசு அவர்களும் தொடுத்த வழக்கில் வாதாடி ஐ.நா. அகதிகள் ஆணையப் பிரதிநிதிகளின் முன் தாமாக விரும்பி நாடு திரும்பும் அகதிகளை மட்டுமே திருப்பி அனுப்ப வேண்டும் என்ற தீர்ப்பினைப் பெற்றுத்தந்த பெருமைக்குரியவர் சந்துரு ஆவார். இதன் விளைவாகத்தான் இன்றுவரையிலும் ஈழத் தமிழ் அகதிகளைக் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்ப அரசினால் முடியவில்லை. இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் கொடுமைகளும், சாவுகளும் நிகழும் என்ற நிலையில் தங்களின் தாயகம் திரும்ப முடியாமல் தவித்த ஈழத் தமிழ் அகதிகளுக்குப் பாதுகாப்பு அளித்து நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்த பெருமைக்குரியவர் சந்துரு அவர்கள்.

தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு மாநாடுகளையும், போராட்டங்களையும் நாங்கள் நடத்த முற்பட்டபோதெல்லாம் தமிழக காவல்துறை அவற்றுக்குத் தடை விதித்தது. அப்போதெல்லாம் எங்களது வழக்குகளை எடுத்துக்கொண்டு வாதாடி அனுமதியைப் பெற்றுத்தந்த பெருமை அவரை மட்டுமே சாரும். ஈழத் தமிழருக்கு ஆதரவான குரல் தமிழகத்தில் ஓங்கி ஒலிப்பதற்கு வழிவகுத்துத் துணை நின்ற பெருமை அவருக்கே உரியது.

2002 ஆம் ஆண்டில் உலக முழுவதிலும் உள்ள தமிழர்களை ஒன்று திரட்டி உலகத் தமிழர் பேரமைப்பு என்ற பெயரில் ஒரு அமைப்பினை உருவாக்கினோம். அதன் தொடக்கவிழா மாநாடு நடைபெறுவதற்கு இரு நாட்களுக்கு முன் அதற்குத் தடை விதிக்கப்பட்டது. அந்தத் தடையைத் தகர்த்து மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கும் இன்றுவரையிலும், இனியும் நீடித்து உலகத் தமிழர்களுக்கு அந்த அமைப்பு தொண்டாற்றுகிறது என்றால், அதற்கு அடிப்படை காரணர் சந்துரு அவர்களேயாவார்.

இராசீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 தமிழர்களுக்கும் ஒட்டுமொத்தமாக மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஒரு கொலை வழக்கில் இவ்வளவு அதிகமான பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது உலகில் இதுவே முதன்முறையாகும். "ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல்" என்னும் சர்வதேச மனித உரிமை அமைப்பு உட்பட பல மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. தமிழ்நாட்டில் பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து 26 தமிழர்கள் "உயிர்க் காப்புக் குழு" என்ற பெயரால் எனது தலைமையில் ஓர் அமைப்பை நிறுவி இத்தண்டனையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தோம். மூத்த வழக்கறிஞர் என். நடராசன் அவர்கள் இந்த வழக்கில் வாதாடி 19 பேருக்கு விடுதலைப் பெற்றுக் கொடுத்தார். எஞ்சிய நால்வருக்குத் தூக்குத் தண்டனையும், மூவருக்கு ஆயுள்தண்டனையும் விதிக்கப்பட்டன. இந்த நால்வர் சார்பில் தமிழக ஆளுநராக அப்போதிருந்த பாத்திமா பீவி அவர்களுக்குக் கருணை மனுக்கள் அளிக்கப்பட்டன. ஆனால் அவற்றை ஏற்காமல் தள்ளுபடி செய்தார். அவரது ஆணையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம். மூத்த வழக்கறிஞர் சந்துரு அவர்கள் இந்த நால்வருக்காக வாதாடி ஆளுநரின் ஆணை தவறானது என்ற தீர்ப்பினைப் பெற்றுக்கொடுத்தார். அமைச்சரவையின் பரிந்துரையின் பேரிலேயே கருணை மனுக்களை ஆளுநர் முடிவெடுக்கவேண்டும் என அரசியல் சட்டம் வகுத்த நெறிமுறையிலிருந்து யாரும் விலக முடியாது என அத்தீர்ப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1950 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் அமலுக்கு வந்த நாளிலிருந்து 25.11.1999 அன்று இந்தத் தீர்ப்பு அளிக்கப்படும் வரை அனைத்து மாநில ஆளுநர்களும், குடியரசுத் தலைவர்களும் அரசியல் சட்டம் வகுத்துத்தந்த நெறிமுறையைப் பின்பற்றத் தவறினார்கள் என்பது அம்பலமானது. இந்தத் தீர்ப்புக்குப் பிறகே இந்த நடைமுறையைப் பின்பற்றவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் மாபெரும் திருப்பத்தினை ஏற்படுத்திய இந்தத் தீர்ப்பை பெற்றுக்கொடுத்தப் பெருமைக்குரியவர் மேதகு சந்துரு அவர்களே.

கொடிய பொடாச் சட்டத்தின் கீழ் நானும் மற்றும் ஐந்து பேரும் கைது செய்யப்பட்டு சிறையில் 18 மாதங்களுக்கு மேலாக வாடினோம்.

ஆரம்பக் கட்டத்தில் எங்கள் மீது 1967 ஆம் வருடத்திய சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ்தான் வழக்குக் குறிப்பிடப்பட்டு முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படி நாங்கள் தண்டிக்கப்பட்டிருந்தால் மூன்றாண்டுக்கு மேல் சிறை தண்டனை விதித்திருக்க முடியாது. ஆனால், பின்னர் திட்டமிட்டுக் காவல்துறை பொடாச் சட்டப் பிரிவுகளின்கீழ் எங்கள் வழக்கை கொண்டுவந்ததுடன் அக்குற்றத்தை விசாரிப்பதற்கு பொடாச் சட்டப் பிரிவு 50-ன் கீழ் தமிழக அரசு அனுமதி அளித்தது.

ஓராண்டுக் காலம் கடந்த நிலையில் எங்களுக்குப் பிணை அளிப்பதற்கான முறையீட்டை உயர்நீதிமன்றத்தில் திரு. சந்துரு அவர்கள் தாக்கல் செய்தார். அத்துடன் அவர் தன்னிலும் மூத்த வழக்கறிஞர் திரு. என். நடராசன் அவர்களை நேரில் சென்று சந்தித்து இந்த வழக்கில் வாதாட வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார். சிறையில் இருந்த எனக்கு இச்செய்தி கிடைத்தபோது, மிகவும் மனம் நெகிழ்ந்து போனேன். திரு. சந்துரு அவர்கள் மூத்த வழக்கறிஞர், அவரே இந்த வழக்கில் வாதாடி இருக்கலாம். ஆனாலும் மூத்த வழக்கறிஞர் என். நடராசன் அவர்களுடன் இணைந்து இருவருமாக உயர்நீதிமன்றத்தில் எங்களுக்காக வாதாடினார்கள். 17 மாத சிறைவாசத்திற்குப் பின் 18.12.2003 அன்று எங்களுக்கு உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது. மேலும் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தை ஆதரித்துப் பேசியதைத் தவிர அவர்கள் மீது வேறு குற்றம் எதுவுமில்லை என்றும், அதற்காக அவர்களை பொடாச் சட்டத்தில் கைது செய்ய முடியாது என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டது.

எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் பரந்தாமன் அவர்கள் மீது வெடி மருந்து வழக்குப் பிரிவு ஒன்றும் சேர்க்கப்பட்டதால் அவருக்குப் பிணை மறுக்கப்படும் என்பது தெரிந்தவுடன், அவரது பிணை மனு திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டு, அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. ஆனால், என்மீது வேறொரு குற்றத்திற்காக வழக்கு இருந்ததால், உடனடியாக நான் பிணையில் வெளிவர இயலவில்லை. உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் ஒருவராகத் திகழ்ந்த திரு. சந்துரு அவர்கள், கீழ்மை நீதிமன்றங்களில் வழக்குகளில் வாதாட முன்வருவதில்லை என்றாலும் எனக்காக செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு வந்து வாதாடினார். அங்கு பிணை மறுக்கப்பட்டவுடன் உயர்நீதிமன்றத்தில் முறையிட்டு அந்த வழக்கிலும் பிணை பெற்றப் பிறகே நான் வெளிவர முடிந்தது. ஆனாலும், எனக்கு அளிக்கப்பட்ட பிணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீட்டு மனு அளித்தது. இதை தெரிந்துகொண்ட திரு. சந்துரு அவர்கள் உடன-டியாக என்மகள் உமாவை அழைத்து உயர்நீதிமன்றம் வழங்கிய பிணை விடுதலை ஆணையை உடனடியாக கடலூர் சிறை அதிகாரியிடம் அளித்து அன்று காலை 10 மணிக்குள் விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி கூறினார். அதன்படி என்மகளும் கடலூருக்கு விரைந்துவந்து சிறை அதிகாரியைப் பார்த்து விவரத்தைச் சொல்லி அவரின் ஒத்துழைப்போடு காலை மணிக்கு முன்பாகவே நான் விடுதலையானேன். உச்சநீதிமன்றத்தில் எனது பிணையை எதிர்த்து அரசு செய்திருந்த முறையீடு 10 மணிக்கு மேல் விசாரணைக்கு வந்தபோது, ஏற்கெனவே நான் விடுதலையான செய்தி நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் அரசின் மனுவை அவர் தள்ளுபடி செய்தார். தொலைநோக்குடன் திரு. சந்துரு அவர்கள் செயல்பட்டதால் நான் விடுதலையானேன் இல்லாவிட்டால் மேலும் சில மாதங்கள் சிறையிலிருந்திருக்க நேரிட்டிருந்திருக்கும்.

கடலூர் சிறையிலிருந்து நான் விடுதலையாகி வரும் வழியில் உள்ள பல ஊர்களில் அனைத்துக் கட்சித் தோழர்களும் கூடி நான் வந்த காரை நிறுத்தி வரவேற்புக் கொடுத்த காரணத்தினால் சென்னைக்கு நான் வந்து சேர்வதற்கு நெடுநேரம் ஆகி மாலையில்தான் வந்து சேர்ந்தேன். சைதாப்பேட்டை அருகில் பெரும் கூட்டமாக தோழர்கள் கூடி வரவேற்பு அளித்தனர். கூட்டத்தினர் அளித்த அன்பு நெருக்கடியின் காரணமாக அந்தக் காரின்மீது ஏறி நின்று அனைவருக்கும் வணக்கம் செலுத்தினேன். அப்போது கூட்டத்திற்கு வெளியில் மூத்த வழக்கறிஞர் சந்துரு அவர்கள் நின்று கையை ஆட்டுவதைப் பார்த்தபோது, நன்றியுணர்வால் எனது விழிகள் கசிந்தன. உடனடியாக கீழிறங்கி அவர் இருக்கும் இடத்திற்குச் செல்ல முயன்றபோது எனது நோக்கம் புரியாமல் தோழர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள். அந்த ஆரவாரத்தில் நான் கூறியது எதுவும் அவர்கள் காதில் விழவில்லை. மிக நெருக்கமான தோழர்கள் என்னைத் தள்ளிக்கொண்டு வந்து எனது காருக்குள் ஏற்றி கதவைச் சாத்திவிட்டார்கள். கூட்டத்தைப் பிளந்துகொண்டு எனது கார் சந்துரு அவர்கள் நின்ற இடத்திற்குச் செல்வதற்கே பெரும்பாடாக இருந்தது. அவற்றையெல்லாம் கடந்து அங்குவந்து பார்த்தபோது, அந்த இடத்தில் அவர் இல்லை. விடுதலைக்காற்றை நான் உயிர்ப்பதற்கு யார் காரணரோ அவரே என்னை வரவேற்க சைதாப்பேட்டை வந்து நீண்டநேரமாகக் காத்திருந்ததை இன்று நினைத்தாலும் என் உள்ளம் கசிகிறது.

பொடாச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்தி அரசியல் எதிரிகளின்மீது ஏவியதோடு, முதல்வர் செயலலிதா நிற்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து கிரிமினல் சட்டங்களை தூசித்தட்டி எடுத்து எங்களது தமிழர் தேசிய இயக்கத்தை தடை செய்தார். சென்னையிலும், மதுரையிலுமிருந்த கட்சி அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டு முத்திரை வைக்கப்பட்டன. இன்றுவரையிலும் அந்தத் தடை நீடிக்கிறது.

தோழர் வைகோ அவர்கள் மீதும், அவரது தோழர்கள் ஒன்பது பேர் மீதும் பொடாச்சட்டம் ஏவப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டனர். அவர்களுக்குப் பிணை கிடைக்கவும் திரு. சந்துரு அவர்கள் வாதாடி பிணைப் பெற்றுக்கொடுத்தார்.

நான்கு ஆண்டுகாலம் பொடா வழக்குகளை திரு. சந்துரு அவர்கள் ஏற்று நடத்தியதின் விளைவாக தொழில்ரீதியான நண்பர்களும், சில உறவினர்களும் அவருடன் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்வதையே தவிர்த்தனர். நீதிமன்ற வராண்டாக்களில் அவர் செல்லும்போது எதிரில் வருபவர்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார்கள். ஊத்தங்கரையில் அப்பாவி மக்கள் மீது தொடுக்கப்பட்ட பொடா வழக்கை விசாரிக்காமலேயே இரு நீதிபதிகள் விலகிக் கொண்டதை விமர்சித்து ஊடகங்களுக்கு திரு. சந்துரு அவர்கள் பேட்டி அளித்ததையே காரணமாகக் காட்டி அவருக்கு உயர்நீதிமன்ற நீதிபதியாகும் வாய்ப்புத் தட்டிப் பறிக்கப்பட்டது.

"தமிழீழம் சிவக்கிறது", "காவிய நாயகன் கிட்டு" என்ற தலைப்புகளில் நான் எழுதிய இரு நூல்கள் 1967 ஆம் வருடத்திய சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்டன. என் மீதும், நூலை வெளியிட்ட பதிப்பகத்தின் உரிமையாளர் என்ற முறையில் எனது துணைவியார் திருமதி. பார்வதி மீதும் வழக்குத் தொடுக்கப்பட்டது. ஆலந்தூர் குற்றவியல் நடுவர் மன்றத்திலிருந்து இந்த வழக்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. அங்கு ஏழு சாட்சிகளை விசாரித்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அதன் விளைவாக அரசுத் தரப்பு வழக்கறிஞர் வழக்கைத் திரும்பப் பெறுவதற்கு மனுதாக்கல் செய்தார். அதை ஏற்றுக்கொண்ட மாவட்ட அமர்வு மன்ற நீதிபதி எங்களை நிரபராதிகள் என்று கூறி விடுதலை செய்தார். ஆனால், என்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட நூல்களை திருப்பித் தரவில்லை. எனவே, உயர்நீதிமன்றத்தில் என் சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது. ஆனால் உலகில் இதுவரை எந்த நீதிமன்றமும் அளிக்காத ஒரு தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் அளித்தது. அந்த நூல்களை அழித்துவிடும்படி காவல்துறைக்கு ஆணைப் பிறப்பித்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நிரபராதிகள் என விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் நான் எழுதிய நூல்கள் மட்டும் குற்றவாளியாக்கப்பட்டு அதற்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட வேடிக்கையை திரு. சந்துரு அவர்கள் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள்,
மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers,
Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti,
Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள்
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள்
இப்போது சங்கர் அன் கோவில்
கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
123
Mini Library
NESCAFE Sunrise
Baidyanath
MAHANARAYAN TAILA
Fair & Lovely
BRU
KILLI
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# New Highway 413 in Greater Toronto Area Will Reduce Roundtrip Drive Times by an Hour Each Day!

# ரொறன்ரோப் பெரும்பாகப் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய 413 நெடுஞ்சாலை ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் சுற்றுப்பயண நேரத்தை குறைக்கும்






ரொறன்ரோப் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய 413 நெடுஞ்சாலை வாகன நெரிசலைக் குறைத்து ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் சுற்றுப்பயணத்திற்கான எமது நேரத்தையும் குறைக்கும் என்று ஓன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் கடந்த 4ம் திகதி புதன்கிழமை புதிய 413 நெடுஞ்சாலைக்கான நிர்மாண வேலைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மே 4, 2022 அன்று, ஓன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் ரொறன்ரோப் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய 413 நெடுஞ்சாலை வாகன நெரிசலைக் குறைத்து ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் சுற்றுப்பயணத்திற்கான எமது நேரத்தையும் குறைக்கும் என்றும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஒன்றாரியொ கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசாங்கம் மட்டுமே நெடுஞ்சாலை 413 ஐ உருவாக்கும் என்று மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், "ஒன்டாரியோ பிசிக்கள் மட்டுமே வளர்ந்து வரும் மாகாணத்திற்கு நெடுஞ்சாலைகளை உருவாக்குவதற்கான உண்மையான திட்டத்தைக் கொண்டிருக்கின்றன, வாகனநெரிசலுக்கு எதிராகப் போராடுவதற்கு நெடுஞ்சாலை 413 ஐ உருவாக்குவது மற்றும் சுற்றுப்பயண பயண நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் குறைப்பது உட்பட" என்று அவர் கூறினார். "ஆண்ட்ரியா ஹார்வத் மற்றும் NDP புதிய சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளை தீவிரமாக எதிர்க்கின்றனர். டெல் டுகா - தலைமையிலான லிபரல் கட்சியினர் ஒன்றாறியோவுக்குத் தேவையான சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளை உருவாக்க மறுத்து, முடிவில்லாத பிரச்சனைகளுக்குள் எமது வாகனச் சாரதிகளை கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

ஸ்டீவன் டெல் டுகா மற்றும் ஆண்ட்ரியா ஹார்வத் ஆகியோர் நெடுஞ்சாலை 413 திட்டத்தை முறியடிப்போம் என்று பலமுறை கூறியுள்ளனர், இது ரொறன்ரோ பெரும்பாகத்தில் உள்ள சாரதிகளுக்கு மற்றும் நீண்ட பயணங்களை மேற்கொள்பவர்களுக்கு வழிவகுக்கும்.

Del Duca மற்றும் Horwath கட்டிடங்களை கட்ட வேண்டாம் என்று கூறினாலும், மக்கள்தொகை அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஒரு மில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் நூறாயிரக்கணக்கான புதிய சாரதிகள் சில பரபரப்பான மற்றும் மிகவும் தடைபட்ட சாலைகளில் தங்கள் வாகனங்களை செலுத்த வேண்டிய வகையில் அவசியம் ஏற்படும்.

வட அமெரிக்காவில். நெடுஞ்சாலை 413 என்பது புதிய 400 தொடர் நெடுஞ்சாலை மற்றும் ஹால்டன், பீல் மற்றும் யோர்க் பிராந்தியங்களில் உள்ள போக்குவரத்து வழித்தடமாகும். இந்த நெடுஞ்சாலை நான்கு முதல் ஆறு வழிச்சாலை அகலமாகவும் கிழக்கில் நெடுஞ்சாலை 400 இலிருந்து மேற்கில் நெடுஞ்சாலை 401 வரை நீட்டிக்கப்படும். இந்த நெடுஞ்சாலை 413 கட்டப்பட்டதும், நெடுஞ்சாலை 413 ஒவ்வொரு வழியிலும் பயண நேரத்தை 30 நிமிடங்கள் குறைக்கும், வாகனச் சாரதிகள் ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் மற்றும் வாரத்திற்கு ஐந்து மணி நேரம் வரை சேமிக்கும், இந்த மாற்றம் அவர்கள் தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் சிறந்த நேரத்தை செலவிட உதவும் "ஒன்றாரியோ வாழ் மக்கள் பேசுவதில் சுகவீனமாக உள்ளனர், மேலும் அரசியல்வாதிகள் வேண்டாம் என்று சொல்ல எந்த காரணத்தையும் கண்டுபிடிப்பதில் அவர்கள் சோர்வாக உள்ளனர்" என்று ஃபோர்டு மேலும் கூறினார். "ஒன்றாறியோ ஓட்டுநர்கள் அதிக நேரம் போக்குவரத்தில் சிக்கிக் கொள்ள முடியாது, இந்த சிக்கலை தீர்க்க அவர்களுக்கு உண்மையான நடவடிக்கை தேவை. ஒன்டாரியோ பிசிக்கள் மட்டுமே 413 ஐ உருவாக்கி அதைச் செய்து முடிக்கும்.

உண்மையான திட்டத்தைக் கொண்ட ஒரே தலைவர் டக் ஃபோர்டு மட்டுமே:

ஒன்டாரியோவின் பொருளாதாரத்தை நல்ல உற்பத்தி வேலைகள், சிறு வணிகத்திற்கான கூடுதல் ஆதரவு மற்றும் இறுதியாக நெருப்பு வளையத்தைத் திறக்கும் சுரங்கத் திட்டம் ஆகியவற்றைக் கொண்டு மீண்டும் கட்டியெழுப்புதல்.

தொழிற்பயிற்சிகளை ஊக்குவிப்பதன் மூலமும், திறமையான தொழிற்துறைகளில் வேலைகளைத் திறப்பதன் மூலமும், கல்லூரிகளுக்கு மூன்றாண்டு பட்டங்களை வழங்க அனுமதிப்பது மற்றும் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்காக வேலை செய்தல்.

401 கிழக்கு நெடுஞ்சாலையில் நாம் முதலீடு செய்யும் போது நெடுஞ்சாலை 413, பிராட்போர்ட் பைபாஸ் உள்ளிட்ட நெடுஞ்சாலைகள் மற்றும் உள்கட்டமைப்புகளை உருவாக்க முடியும்என்று நான் கருதுகின்றேன்.

எரிவாயு வரிகளைக் குறைப்பதன் மூலமும், வாகனங்களுக்கான உரிமத் தகடு ஸ்டிக்கர்களை இல்லாமல் செய்ததன் மூலமும், நெடுஞ்சாலைகள் 412 மற்றும் 418 இல் உள்ள நியாயமற்ற சுங்கச்சாவடிகளை அகற்றுவதன் மூலமும் செலவுகளைக் குறைக்கலாம். என்றும் முதல்வர் டக் போர்ட் தெரிவித்தார்.

அத்துடன் அதிகமான தாதியர்கள், மருத்துவர்கள் மற்றும் தனிப்பட்ட ஆதரவு பணியாளர்களை பணியமர்த்துவதன் மூலம் திறந்த நிலையில் இருக்கும் திட்டங்கள் வெற்றியடையும், மேலும் அதிகமான முதியவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் தங்க அனுமதிப்பது மற்றும் ஒன்டாரியோவில் PPE போன்ற அதிக தடுப்பூசிகள் மற்றும் முக்கியமான பொருட்களை தயாரிப்பது. இவ்வாறான அம்சங்களை முதல்வர் டக் போர்டு அவர்களால் மட்டுமே செய்ய முடியும் என்று ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதி உறுப்பினர் விஜய் தணிகாசலம் கனடா உதயனுக்குத் தெரிவித்தார்.



(23ம் பக்கத் தொடர்ச்சி)

பெருமைக்குரிய நீதிபதி மேதகு கே. சந்துரு எழுதிய

# "நானும் நீதிபதியானேன்" நூல் திறனாய்வு

பழ. நெடுமாறன்

ஈழத் தமிழர் பிரச்சனையில் சிங்கள அரசுக்கும், ஈழத் தமிழர்களுக்குமிடையே நடுவராக செயல்பட்டு அப்பிரச்சனையை தீர்ப்பதற்கு முன்வரவேண்டிய இந்திய அரசு தானே ஒரு தரப்பாக மாறி சிங்கள அரசுடன் ஒரு உடன்பாடு செய்துகொண்டது. இராசீவ் - செயவர்த்தனா உடன்பாட்டினை ஈழத் தமிழர்களும், விடுதலைப்புலிகளும் ஏற்கவில்லை. ஆனால், இந்த உடன்பாட்டை திணிக்கும் முயற்சியில் இந்திய அமைதிப் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் அங்கு அனுப்பப்பட்டது. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி இந்த உடன்பாட்டிற்கு ஆதரவுத் தெரிவித்தது. கட்சித் தோழர்கள் பலரும் அதை விரும்பவில்லை. வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்த பெரும்பான்மையினரான உறுப்பினர்கள் கட்சித் தலைமையின் இந்தப் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். இந்த உடன்பாட்டை கண்டிக்கும் வகையில் திரு. சந்துரு அவர்களும் பேரா. மோசஸ் அவர்களும் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். அதில் சிறப்புரையாற்ற மேனாள் வங்க நிதியமைச்சர் அசோக்மித்ரா ஒப்புதல் அளித்திருந்தார். ஆனால் கட்சித் தலைமையின் அழுத்தத்தால் அவர் கலந்துகொள்ளவில்லை. எனினும் இக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக நீதிநாயகம் சந்துரு அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். 20 வருடங்களுக்கு மேலாக அக்கட்சியுடன் அவருக்கு இருந்த பிணைப்புத் துண்டிக்கப்பட்டது. ஆனாலும், அக்கட்சியைச் சேர்ந்த தோழர்களுக்கு இச்செய்தி அதிர்ச்சியை அளித்தது. பலரும் திரு. சந்துரு அவர்களுக்கு ஆதரவுக் கடிதங்களை அனுப்பினார்கள்.

அதற்குப் பிறகு பல்வேறு கட்சிகளிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்தபோதிலும், அவர் அதை இன்றுவரை ஏற்கவில்லை. 1988 ஆம் ஆண்டு தலைமையமைச்சர் இராசீவ் அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த வி.பி. சிங் விலகி சென்னை வந்தபோது, அனைத்து அரசியல் கட்சி வழக்கறிஞர்களும் அவருக்கு அளித்த வரவேற்புக் கூட்டத்திற்கு திரு. சந்துரு அவர்களை தலைமை தாங்கவேண்டுமென அனைவரும் விரும்பினர். அவரும் அதை ஏற்றுக்கொண்டு மிகப்பெரிய அளவில் நடைபெற்ற அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி சிறப்பாக நடத்தினார். இதன்விளைவாக அடுத்த இரு நாட்களில் வருமான வரித்துறையிலிருந்து அவருக்கு அறிவிக்கைக் கொடுக்கப்பட்டது. ஆனால், எல்லாவிதமான கணக்குகளையும் அவர் ஒழுங்காக வைத்திருந்ததால், அவர்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

மூத்த வழக்கறிஞர்களான விஜயன், ஆர். சண்முகசுந்தரம் ஆகியோர் அரசியல் எதிரிகளால் தாக்கப்பட்டபோது மருத்துவமனையில் அவர்களைச் சந்தித்து விவரங்களை அறிந்து வழக்கறிஞர்களைத் திரட்டி கடற்கரை காந்தியடிகள் சிலைக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை தாங்கி திரு. சந்துரு நடத்தினார். திரு. சண்முகசுந்தரத்தின் வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும், அவரது மருத்துவமனை செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றியும் பெற்றார்.

மதுரையில் உயர்நீதிமன்றத்தின் கிளை ஒன்று நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கை தென் மாவட்ட மக்களால் நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இதுகுறித்து விசாரிக்க ஒன்றிய அரசு நீதிபதி விசாரிக்க ஜஷ்வந்த் சிங் தலைமையில் ஒரு ஆணையம் அமைத்தது. அந்த ஆணையத்தின் முன் நேரில் தோன்றி மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை அமைப்பதை திரு. சந்துரு வலியுறுத்தினார். ஜ'வந்த் சிங் ஆணையம் மதுரை கிளை அமைப்பதை பரிந்துரைத்தது. ஒன்றிய அரசு அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு செயல்பட ஆணையிட்டது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதிகளாக இருந்தவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்க மறுத்தனர். ஆக இத்திட்டம் 10 ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்தது. பிறகு தலைமை நீதிபதியாக கே.ஜி. பாலகிருஷ்ணன் பதவி ஏற்றவுடன் அனைத்து நீதிபதிகள் கூட்டத்தில் இதற்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் விளைவாக மதுரையில் உயர்நீதிமன்றக் கிளைக்கான அடிக்கல் 13.04.2000 அன்று நடத்தப்பட்டது. இந்தக் கிளை வருவதற்கு அரும்பாடுபட்ட திரு. சந்துரு அவர்களை இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி தலைமை நீதிபதி அழைப்பு அனுப்பினார். மதுரை வழக்கறிஞர் சங்கமும் அவர் கலந்துகொள்ள வேண்டுமென விரும்பியது. ஆனால் சென்னையில் உள்ள வழக்கறிஞர்கள் இதற்கு எதிராக இருந்தார்கள் போராடினார்கள் வழக்குகள் தொடுத்தார்கள். ஆனால், மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் திறப்புவிழா 24.07.2004 இல் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஏனெனில், 1980களில் நான் சட்டமன்றத்தில் அங்கம் வகித்தபோது, மதுரையில் உயர்நீதிமன்றக் கிளை அமைக்கவேண்டும் என வலியுறுத்தும் வகையில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசினேன். தொடர்ந்து இக்கருத்தை வலியுறுத்தி வந்தவன் என்கிற முறையில் இதற்காக அரும்பாடுபட்ட நீதிநாயகம் சந்துரு அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் சிங்கள இராணுவ வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் நிற்கவில்லை. ஏற்கெனவே இலங்கைத் தமிழர் பகுதிகளில் போரில் உயிர்த்தியாகம் செய்த விடுதலைப்புலி வீரர்களுக்கு மாவீரர் நினைவகங்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் இடித்துத் தகர்த்து எலும்புகளைக்கூட தோண்டி எடுத்து அழித்தனர். என் போன்றவர்கள் உள்ளங்களில் ஆறாத துயரமாக இது பதிந்தது. எனவே, தமிழ்நாட்டிலாவது ஈழப்போரில் மடிந்த மக்களுக்கும், மாவீரர்களுக்கும் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்படவேண்டுமென விரும்பினோம். நண்பர் நடராசன் அவருடைய விளார் கிராமத்தில் நிலம் தருவதற்கு முன்வந்தார். அதை ஏற்று உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் "முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்" என்ற பெயரில் நினைவகம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் அளித்த நிதியுதவியினால் இது நிறுவப்பட்டது. ஒன்றிய, மாநில ஆட்சியினர் இதற்கு எதிராக எந்த நேரத்திலும் நடவடிக்கையில் ஈடுபடலாம் என்ற அச்சம் எங்களுக்கு இருந்தது. 8.11.2013 அன்று தொடங்கி திறப்பு விழா மாநாட்டினை மூன்று நாட்களுக்கு நடத்துவது என முடிவு செய்தோம். ஆனால், இறுதி நேரத்தில் அரசு தடை விதித்தால் என்ன செய்வது? என்பது குறித்து மேனாள் நீதிநாயகம் சந்துரு அவர்களிடம் ஆலோசனைக் கேட்டேன். அவர் கூறிய ஆலோசனைகளின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தோம். 05.11.2013 ஆம் தேதியன்று நினைவு முற்றத் திறப்பு விழாவுக்குத் தடை எதுவுமில்லை என்பதோடு, விழாவை நடத்துவதற்கான அனுமதியையும் உயர்நீதிமன்றமே வழங்கியது. உடனடியாக இத்தீர்ப்புக்குத் தடை வாங்குவதற்கு அரசு முயற்சி செய்தது. இதை அறிந்த திரு. சந்துரு அவர்கள் முற்றத்தின் திறப்பு விழாவை 06.11.2013 அன்று காலையிலேயே நண்பர்கள் முன்னிலையில் நடத்தும்படி ஆலோசனை கூறினார். அவ்வாறே நாங்களும் திறப்புவிழாவை நடத்தி முடித்தோம். அரசு செய்த மேல் முறையீடு விசாரணைக்கு வந்தபோது, திறப்பு விழா நடந்து முடிந்துவிட்டதால் அரசு மேல்முறையீட்டை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அன்று அவரின் ஆலோசனைப்படி நாங்கள் திறக்காமல் போயிருந்தால் இன்றுவரை அந்த முற்றம் திறக்கப்படாமலேயே கிடந்திருக்கும்.

திறப்புவிழா மாநாட்டில் உலகத் தமிழர் கருத்தரங்கிற்கு நீதிநாயகம் சந்துரு அவர்கள் தலைமை தாங்கி பேசுகையில், "இலங்கையில் இறந்த தமிழர்களுக்கு இந்தியாவில் நினைவிடமா? என்று சிலர் வினவலாம். இரண்டு உலகப் போர்களில் உயிர் துறந்த பிரிட்டன் படை வீரர்களுக்கு சென்னையில் இராணுவக் கல்லறைகளும், நினைவு மண்டபங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இறந்தபோனவர்களின் வாரிசுகள் ஆண்டுதோறும் இங்கிலாந்திலிருந்து வந்து அவற்றுக்கு மரியாதை செலுத்துகிறார்கள். எனவே போரில் மாண்ட ஈழத் தமிழர்களுக்குத் தமிழ்நாட்டில் நினைவகம் அமைப்பது சரியானது" என்று கூறினார்.

நினைவு முற்றத்தின் திறப்பு விழாவை வெற்றிகரமாக நாங்கள் நடத்திவிட்டதால், எரிச்சலும், சினமும் அடைந்த ஆட்சியாளர்கள் திறப்புவிழா முடிந்த மறுநாளே முற்றத்தின் முன்புறத்தில் சாலை புறம்போக்கில் அரசின் அனுமதியுடன் அமைத்திருந்தப் பூங்காவை இடித்துச் சிதைத்தனர். எங்களுக்கு எத்தகைய முன்னறிவிப்பும் கொடுக்காமல் அதிகாலைப் பொழுதில் பூங்காவை சிதைத்த அரசுக்கு எதிராக நாங்கள் தொடுத்த வழக்கு இன்னமும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் கிடப்பில் கிடக்கிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்புகள்

மூத்த வழக்கறிஞராக இருந்த சந்துரு அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவி ஏற்றப் பிறகு வரலாற்றுச் சிறப்புமிக்கப் பல்வேறு தீர்ப்புகளை வழங்கியுள்ளார். பட்டியலினத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்தில் இருக்கும் வரை மட்டுமே அவர்களுக்கு இடஒதுக்கீட்டு உரிமை வழங்கப்படும். பிற மதங்களுக்கு மாறினால் இடஒதுக்கீடு பெற முடியாது. இந்த வேறுபாட்டை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்குகள் இன்னமும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பாக வெளியிடப்பட்ட விளம்பரங்களில் புத்த மதத்தைத் தழுவிய தலித்துகளுக்கு இடஒதுக்கீட்டு உரிமை கிடையாது என அறிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்கில் தலைமை நீதிபதியுடன் அமர்ந்து நீதிநாயகம் சந்துரு அவர்களும், இணைந்து அளித்தத் தீர்ப்பில் புத்த மதத்தைத் தழுவிய பட்டியலின மக்களுக்கும் இடஒதுக்கீட்டு உரிமை உண்டு என்று கூறியதோடு, புதிய விளம்பரத்தை வெளியிடும்படி தேர்வாணையத்திற்கு ஆணைப் பிறப்பித்தனர். தமிழக அரசு பிறப்பித்த மதமாற்றத் தடைச் சட்டத்திற்கான அவசரச் சட்டத்தை எதிர்த்து சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் போராட்டம் அறிவித்தன. இப்போராட்டத்திற்கு எதிராக பா.ச.க.வின் சார்பில் ஒருவர் தொடுத்த வழக்கில் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் போராடுவதற்கான உரிமை உண்டு என்ற தீர்ப்பை தலைமை நீதிபதியும், நீதிநாயகம் சந்துரு அவர்களும் இணைந்து அளித்தனர்.

தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் என அறநிலையத்துறை வெளியிட்ட சுற்றறிக்கையை எதிர்த்து சமற்கிருதத்தின் மட்டுமே அர்ச்சனை செய்யவேண்டும் என வலியுறுத்தி தொடுக்கப்பட்ட வழக்கில் தமிழ் அர்ச்சனை எந்த வகையிலும் சட்டத்திற்கு எதிரானது அல்ல எனத் தீர்ப்பளித்த நீதிநாயகம் சந்துரு தனது தீர்ப்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளை சுட்டிக்காட்டினார்.

வடலூரில் வள்ளலார் நிறுவிய சத்தியஞான சபையில் சிவலிங்கத்தை வைத்து ஆகம விதிப்படி வழிபாடு நடத்த உரிமை கேட்டு ஒருவர் தொடுத்த வழக்கில் நீதிநாயகம் சந்துரு அவர்கள் அளித்தத் தீர்ப்பில், வள்ளலாரின் தத்துவப் பின்புலத்தை விரிவாகச் சுட்டிக்காட்டி அந்த வழக்கைத் தள்ளுபடி செய்ததோடு, அங்கு வைக்கப்பட்ட சிவலிங்கம் போன்றவற்றை அப்புறப்படுத்தும்படியும் ஆணைப் பிறப்பித்தார். வள்ளலாரின் தீவிரப் பற்றாளரான பொள்ளாச்சி என். மகாலிங்கம் அவர்கள் "இந்தத் தீர்ப்பு நீதிபதி சந்துரு வழங்கிய தீர்ப்பு அல்ல, அவரது உடலுக்குள் புகுந்து வள்ளலாரே வழங்கிய தீர்ப்பு" என்று குறிப்பிட்டார். நாடெங்கிலும் உள்ள வள்ளலார் அன்பர்கள் இத்தீர்ப்பைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். தமிழகத்தில் உள்ள கோவில்களில் இருந்து பழமையும், மதிப்பும் மிக்க சிலைகள் களவாடப்படுவது தொடர்கதையாக நீடித்து வருகிறது. வெளிநாடுகளுக்கு இச்சிலைகள் கடத்தப்பட்டுப் பல கோடி ரூபாய்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அத்தகைய கடத்தல் தொழில் ஈடுபட்ட சுபாஷ் சந்திர கபூர் என்பவரை உடனடியாகக் கைது செய்ய செயங்கொண்டம் நீதிமன்றம் ஆணைப் பிறப்பித்தது செல்லாது என்று கூறி, உயர்நீதிமன்றத்தில் கபூர் சார்பில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த நீதிநாயகம் சந்துரு அவர்கள் "செர்மனியில் இருக்கும் கபூரை கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டுவரவேண்டும்" என்ற ஆணைப் பிறப்பித்தார். அதன்படி 2012 ஆம் ஆண்டில் அவர் கைதாகி இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டார். இந்தத் தீர்ப்புக்குப் பிறகே சிலைகள் திருடப்படும் விவகாரம் பெரிய அளவில் அனைவருக்கும் தெரியவந்தது. அது குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கு சிறப்பு அமர்வு ஒன்றினை உயர்நீதிமன்றம் நியமித்தது.

இவற்றைப் போல மேலும் பல கோவில்கள் குறித்த வழக்குகளில் நீதிநாயகம் சந்துரு அவர்கள் அளித்தத் தீர்ப்புகள் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுப் பாராட்டப்பட்டன.

மூத்த வழக்கறிஞராக மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்த திரு. சந்துரு அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்ட வரலாற்றினை விரிவாக எழுதியிருக்கிறார். நீதி, நேர்மை, சத்தியம் போன்ற உயர் குணங்கள் நிரம்பப் பெற்ற அவர் நீதிபதியான பிறகு ஏறத்தாழ 90,000 வழக்குகளில் தீர்ப்புகளை வழங்கினார். ஆண்டுக் கணக்கில் தேங்கிக் கிடந்தப் பல வழக்குகள் அவரால் முடிவுக்கு வந்தன. அவர் அளித்தத் தீர்ப்புகள் நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தி அனைத்துத் தரப்பினரின் பாராட்டுகளைப் பெற்றன.

ஆனால், அவரை நீதிபதியாக நியமிப்பதற்கு எத்தனை தடைகள்? எத்தனைப் பேர் வரிந்துக் கட்டிக்கொண்டு அவருக்கு எதிராகச் செயல்பட்டனர்? என்பதையெல்லாம் இந்நூலில் படிக்கும்போது நெஞ்சம் கொதிக்கிறது. மேனாள் உச்சநீதிமன்ற நீதிபதியான வி. ஆர். கிருஷ்ணய்யர் போன்றவர்கள் அவர் நீதிபதியாக வரவேண்டும் என மனமாற விரும்பினார்கள் என்பதை அறியும்போது முட்டுக்கட்டைப் போட்டவர்களை மன்னித்துவிட தோன்றுகிறது.

நீதிநாயகம் சந்துரு அவர்கள் ஓய்வு பெறும் வேளையில் வழக்கமாக உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் பிரிவு உபசார விழாவைத் தனக்கு நடத்தவேண்டியதில்லை என தலைமை நீதிபதிக்குக் கடிதம் எழுதினார். இறுதியாக 08.02.2013 அன்று அவர் ஓய்வுப்பெற்ற போது தனது குடும்பச் சொத்து எவ்வளவு? என்பதை தலைமை நீதிபதியிடம் அளித்தார். பின்னர் தன்னைச் சந்தித்த வழக்கறிஞர்கள், நண்பர்கள், அரசு ஊழியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். பிறகு நீதிமன்ற வளாகத்தில் உள்ள பத்திரிகையாளர்கள் அறைக்குச் சென்று நன்றி தெரிவித்தார். தான் நீதிபதியாகப் பணியாற்றிய காலத்தில் அரசு அளித்தக் காரை ஒப்படைத்துவிட்டு, சென்னை கடற்கரை தொடர்வண்டி நிலையத்திலிருந்து மின்சார தொடர்வண்டி மூலம் புறப்பட்டுத் தனது இல்லம் சென்றார். இச்செய்திகளெல்லாம் மக்கள் நடுவே பரவியபோது அவர்களின் உள்ளங்களில் திரு. சந்துரு அவர்கள் வானளாவ உயர்ந்தார்.

அவரோடு நெருங்கிப் பழக எனக்கு அவர் அளித்த வாய்ப்பினை இன்றளவும் பெருமையாகவே கருதுகிறேன். மனித உரிமைகளுக்காக நான் கொடுத்தப் பல வழக்குகளை அவர் எவ்விதக் கட்டணமும் பெறாமலேயே நடத்தி வெற்றி தேடித் தந்தார். எனவே அந்த வழக்குத் தீர்ப்புகளையெல்லாம் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டதோடு, அந்த நூலை அவருக்கே காணிக்கையாகப் படைத்தேன்.

மேனாள் நீதிநாயகம் சந்துரு அவர்களின் தன் வரலாற்று நூல் இளம் வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, இளைய சமுதாயத்தினர் அனைவரும் படிக்கவேண்டிய நூல் மட்டுமல்ல, அவர்களுக்கு வழிகாட்டும் நூலாகவும் திகழ்கிறது.

# தமிழக அரசு கூகுள் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்: அரசுப் பள்ளி மாணவர்கள் எளிதாக ஆங்கிலம் படிக்க ஏற்பாடு




அரசுப் பள்ளி மாணவர்கள் தொழில்நுட்பத்தின் துணை கொண்டு எளிதாக ஆங்கிலம் படிக்க, பேச, புரிந்து கொள்ள ஏதுவாக "Google Read Along" என்ற செயலியை பயன்படுத்துவதற்கென பள்ளிக்கல்வித்துறை மற்றும் கூகுள் நிறுவனத்திற்கு இடையே தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: பள்ளிக் கல்வித் துறை சார்பில் நபார்டு திட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம், மாவட்ட கனிமவள நிதி ஆகியவற்றின் வாயிலாக 181 கோடியே 3 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 208 அரசு பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், கழிவறைகள், சுற்றுச்சுவர் மற்றும் மாவட்ட ஆசிரியர் மற்றும் கல்வி நிறுவனக் கட்டடம் ஆகியவற்றை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (மே 5) திறந்து வைத்தார். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிவறைகள், மின்சாதன வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இணைய வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி", "நம் பள்ளி நம் பெருமை" பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நபார்டு திட்டத்தின் கீழ் 181 கோடியே 3 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களை தமிழக முதல்வர் திறந்து வைத்தார். கடந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட முத்தமிழறிஞர் மொழி பெயர்ப்புத் திட்டம், திசைதோறும் திராவிடம், இளந்தளிர் இலக்கியத் திட்டம் ஆகிய மூன்றுத் திட்டங்களின் கீழ் இதுவரை 9 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக "திசைதோறும் திராவிடம்" திட்டத்தின் கீழ் 5 நூல்கள் மற்றும் இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் 23 சிறார் நூல்கள்;அமரர் கல்கி எழுதிய மகத்தான நாவலான "பொன்னியின் செல்வன்" ஐந்து பாகங்களாக முதல் முறையாக மலையாள மொழியில் ஜி.சுப்பிரமணியனால் மொழிபெயர்க்கப்பட்டு DC Books நிறுவனத்தின் கூட்டு வெளியீடாகவும்; சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் சி.சு.செல்லப்பாவின் புகழ்பெற்ற குறுநாவலான "வாடிவாசல்" செல்வி மினிபிரியா மொழிபெயர்ப்பில் மலையாளத்தில் அதே தலைப்பில் வி.சி.தாமஸ் பதிப்பகத்தின் கூட்டு வெளியீடாகவும்; திராவிடச் சிந்தனையில் பெண்ணுரிமையின் வெளிப்பாடாக தமிழில் இதுவரை எழுதியுள்ள பெண் படைப்பாளிகளின் எழுத்துகளில் 30 சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்து கவிஞர் அ. வெண்ணிலா தொகுத்த "மீதமிருக்கும் சொற்கள்" எனும் சிறுகதைத் தொகுப்பு "தமிழ்ப் பெண் கதைகள்" என்ற தலைப்பில் வெங்கிடாசலத்தால், மலையாள மொழியாக்கம் செய்யப்பட்டு மாத்ருபூமி பதிப்பகத்தின் கூட்டு வெளியீடாகவும்; எடமான் ராஜன் மொழிபெயர்ப்பில் பூமணியின் "வெக்கை" என்ற நாவல், மலையாளத்தில் "உஷ்ணம்" என்ற தலைப்பில் லோகோபுக்ஸ் நிறுவனத்துடனும், "இமயம் கதைகள்" ஆலிவ் பதிப்பகத்தோடும் கூட்டு வெளியீடாகவும்;ஆகிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் வெளியிட்டார்.

குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் 'இளந்தளிர் இலக்கியத்திட்டம்' அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், தமிழகத்தின் சிறந்த சிறார் படைப்பாளிகளான இளங்கோ, ஞா.கலையரசி, வெற்றிச்செழியன், உமாமகேஸ்வரி, கிரீஷ், சரிதாஜோ, பொற்கொடி, உதயசங்கர், சாலை செல்வம் மற்றும் ஆதி வள்ளியப்பன் ஆகிய 10 எழுத்தாளர்களின் அழகிய ஓவியங்களுடன் கூடிய 23 சிறார் படைப்புகளை தமிழக முதல்வர் வெளியிட்டார்.குழந்தைகளின் எழுத்தார்வத்தினை ஊக்குவிக்கும் வகையில் 18 வயதிற்குட்பட்ட மூன்று இளம் எழுத்தாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு கவிமணி விருதும், விருதுடன் ரூ.25 ஆயிரம் பரிசுத்தொகையும், கேடயமும், சான்றிதழும் வழங்கப்படுகிறது. அதன்படி, கவிமணி விருதிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள செல்வி ர.சக்தி, செல்வி ந.சுபிஷா, செல்வன் ம. ருத்ரவேல் ஆகியோருக்கு தமிழக முதல்வர் பரிசுத்தொகையையும், சான்றிதழையும், கேடயத்தையும் வழங்கினார். அரசுப் பள்ளி மாணவர்கள் தொழில்நுட்பத்தின் துணை கொண்டு எளிதாக ஆங்கிலம் படிக்க, பேச, புரிந்து கொள்ள ஏதுவாக "Google Read Along" என்ற செயலியை பயன்படுத்துவதற்கென பள்ளிக்கல்வித்துறை மற்றும் கூகுள் நிறுவனத்திற்கு இடையே தமிழக முதல்வர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக் கல்வி ஆணையர் க. நந்தகுமார்,இல்லம் தேடி கல்வி சிறப்புப் பணி அலுவலர் க. இளம்பகவத், கூகுள் நிறுவனத்தின் அலுவலர்கள் நிதின் காஷ்யாப், ஹேமந்த், அபிநவ் உன்னி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கை மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழக எம்.பி.க்களின் ஒரு மாத ஊதியம் வழங்கப்படும்: திமுக அறிவிப்பு

இலங்கை மக்களுக்கு உதவிடும் வகையில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குவார்கள் என்று அக்கட்சியின் தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.இதுதொடர்பாக திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: "நெருக்கடியில் உள்ள இலங்கை மக்களுக்கு நேசக்கரம் நீட்டும் விதமாக, திமுக சார்பில் இலங்கை மக்களுக்கு உதவிட முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடி வழங்கப்படும்.




இத்துடன், திமுக சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும்" என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த மே 3ம் தேதியன்று வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், திமுக சார்பில் ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து;திமுகவின் பாராளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்கள் ஒரு மாத ஊதியத்தை "முதலமைச்சர் பொது நிவாரண நிதி"க்கு வழங்கிடுவர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தின் மாமல்லபுரத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு கடத்த முயன்ற ரூ.2.50 கோடி மதிப்பிலான 3 சுவாமி சிலைகள் மீட்பு

மாமல்லபுரத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு கடத்த முயன்ற, ரூ.2.50கோடி மதிப்பிலான 3 உலோக சுவாமி சிலைகளை போலீஸார் மீட்டனர்.செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் தொன்மைவாய்ந்த புராதனப் பொருட்கள், சிலைகள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிலையில், அங்குள்ள தனியாருக்குச் சொந்தமான கலைப்பொருட்கள் விற்பனை நிறுவனத்தில், வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்வதற்காக தொன்மையான உலோக சுவாமி சிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக சென்னை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது.



இதையடுத்து, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு டிஜிபி ஜெயந்த் முரளி உத்தரவின்பேரில், ஐ.ஜி. தினகரன் வழிகாட்டுதலின்படி, கூடுதல் கண்காணிப்பாளர் அசோக் நடராஜன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. மாமல்லபுரத்தில் உள்ள நிறுவனத்தில் தனிப்படை போலீஸார் சோதனை மேற்கொண்டனர். அப்போது, வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்வதற்காக, உலோகத்திலான நின்ற நிலையில் உள்ள பார்வதி அம்மன் சிலை (உயரம் 97 செ.மீ. அகலம் 23 செ.மீ. எடை 26 கிலோ 400 கிராம்), அமர்ந்த நிலையில் உள்ள பார்வதி அம்மன் சிலை ( உயரம் 32 செ.மீ. அகலம் 20 செ.மீ. எடை 8 கிலோ 400 கிராம்), நடனமாடும் சிவன் சிலை (உயரம் 35 செ.மீ. அகலம்26 செ.மீ. எடை7 கிலோ 500 கிராம்) ஆகிய 3 புராதன சிலைகள் பதுக்கிவைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, 3 சிலைகளையும் போலீஸார் பறிமுதல் செய்தனர். அந்த சிலைகளுக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், தமிழகத்தில் உள்ள பழமைவாய்ந்த கோயிலில் இருந்து திருடப்பட்டிருக்கலாம் என்று சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இதையடுத்து, கோயிலில் சுவாமி சிலைகள் திருடுபோனது தொடர்பான வழக்குகளை போலீஸார் ஆராய்ந்து வருகின்றனர். தற்போது மீட்கப்பட்டுள்ள சுவாமி சிலைகளின் மதிப்பு ரூ.2.50 கோடிக்கு மேல் இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.சிலை கடத்தல் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது குறித்து போலீஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்லவிருந்த சிலைகளை மீட்ட, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு தனிப்படை போலீஸாரை தமிழக சட்டம் ஒழுங்கு டிஜிபி சைலேந்திரபாபு பாராட்டினார்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 996



## சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் மட்டக்களப்பு

*"குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்"*

கோயிலின் கிழக்குத் தவிர்ந்த ஏனைய புறங்களிலே உயரமான மதில்கள் காணப்படுகின்றன. கோயிலுக்கு மேற்கிலே, அண்மையில் உப்பாறு பாய்கின்றது. இக்கோயில் வளாகத்தின் நான்கு மூலைகளிலும் பழங்காலத்திலே அமைக்கப்பட்ட கிணறுகள் காணப்படுகின்றன. இக் கிணறுகள் பாவனைக்குரியவையாக உள்ளன. சித்திர வேலாயுதர் கோயிலின் தென்புறமாக வள்ளி அம்மன் கோயிலும், வடக்கிலே தெய்வயானை அம்மன் கோயிலும், காணப்படுகின்றன. தெற்குப் புறத்திலே மாரியம்மன் கோயிலும், மூலஸ்தானத்தின் பின்பக்கத்தில் விநாயகர் ஆலயமும் காணப்படுகின்றன.

இக்கோயிலிலே காணப்படும் மகா மண்டபம் முப்பது அடி அகலமுடையதாகக் காணப்படுகின்றது. இம் மண்டபத்தினை ஆறுமுகசுவாமி மண்டபம் என அழைக்கும் வழக்கமும் உள்ளது. இங்குள்ள வசந்த மண்டபம், முப்பதடி நீளமும், பத்தடி அகலமுங் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதற்கருகில் நவக்கிரகங்களுக்கான ஆலயம் உள்ளது.
கோயிலின் வட பக்கத்தில் உள்வீதியில் கொட்டறை உள்ளது. தென்புறத்திலே வாகனசாலை, வன்னியர் அறை யாகசாலை, களஞ்சிய சாலை, வைரவர் கோயில், குமாரர் கோயில், குருக்களின் கூடம் ஆகியனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள மண்டபங்களின் தூண்களிலே அறுபத்து மூவரின் உருவப்படங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகா மண்டபத்தின் தூண்களிலே அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் வடிவங்கள் தீட்டப்பட்டுள்ளன. மேலே வள்ளியம்மையாரின் புராண வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. வள்ளியை மான் ஈன்றமை, வள்ளியை வேடர் எடுத்து வளர்த்தமை, வள்ளி தினைப்புனம் காத்தமை, வள்ளியிடம் முருகன் ஆண்டி வேடத்திலே சென்றமை, வள்ளியின் முன் பிள்ளையார் யானை வடிவத்திலே தோன்றியமை, மற்றும் முருகன் வள்ளி திருமணக் கோலம் போன்ற காட்சிகள் தத்ரூபமாகத் தீட்டப்பட்டுள்ளன.

இக் கோயிலின் வழமைகளை ஆதாரமாகக் கொண்டு நோக்குமிடத்து, கோயிலின் முதன்மை அதிகாரம் தேசத்து வன்னியருக்கு உரியதாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலே வன்னியர் ஆட்சி நிலவிய காலங்களிலே ஆலய ஏற்பாடுகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. அக்காலங்களிலே திருவிழாக்கள் சமுதாயப் பிரிவுகள் பலவற்றின் சேவைகளையும் பெற்று, நில மானியங்களையும் ஆதாரமாகக் கொண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளன. ஆட்சி அதிகாரம் கொண்டவர்களாகக் காணப்பட்ட வன்னியர்கள் ஆலயங்களையும், சமய நிறுவனங்களையும் ஆதரித்தும், பாதுகாத்தும் வந்துள்ளனர். இங்கு நடைபெறும் விழாக்களைக் கண்டு களிக்கக் கிழக்கிலங்கையிலிருந்து மட்டுமன்றி, நாட்டின் பிறபகுதிகளிலிருந்தும் மக்கள் கூடுவது வழமையாகக் காணப்பட்டுள்ளது. அத்தகைய காலங்களில் ஆலய வளாகத்தில் ஒழுங்கை நிலை நிறுத்துவதோடு, மக்களுடைய உடமைகளுக்குப் பாதுகாத்தளித்துப் பேணுவது ஆட்சியதிகாரம் கொண்டோரின் கடமையாகும். இதன் தொடர்பாகவே பிற்காலத்தில் இவ்வாலயத்தின் முதன்மை அதிகாரம் தேசத்து வன்னியருக்கு உரியதாகக் காணப்படுகின்றது.

இவ்வாலய நிர்வாக முறைகளும், சேவைகளும் முற்கால வழக்கப்படியே நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பிலே வன்னியர் ஆட்சி நிலவிய காலத்திலிருந்து வண்ணக்கர் முறையும் நிலவி வருகின்றது. இக்கோவிலை வண்ணக்குமார் ஒழுங்காக, ஒற்றுமையாக நிர்வகித்து வருகின்றனர். கோவில் நிர்வாகம் பழமை வாய்ந்ததாக மூன்று வண்ணக்குமாரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. கோயிற் பரிபாலகரை வண்ணக்கர் அல்லது வண்ணக்கு என்று அழைப்பது மட்டக்களப்பில் பரவலான ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. வண்ணக்கர் என்ற சொல் தமிழ்ச்சொல் என்றும், இது கணக்கறிஞர் தலைவன் எனப் பொருள்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. இச் சொல் தொடர்பாக, மற்றுமொரு கருத்துள்ளது. மலையாளத்தில் முக்குவர் என்ற பிரிவினரின் தொடர்பாலேயே இச்சொல் வழக்கில் வந்தது என்றும், மலையாளத்தில் முக்குவரின் சமயச் சடங்குகளைச் செய்த குருமாரை வாணக்கன் என்று அழைக்கும் வழக்கமுள்ளதாகவும் கூறுவர்.

எவ்வாறாயினும், இவ்வாறு கோயிற் பரிபாலகர்களை வண்ணக்கர் எனக் கூறும் வழக்கினை மட்டக்களப்புத் தவிர்ந்த ஏனைய வேறு எங்குமே காண முடியாது. அத்தோடு, கண்டி இராச்சியத்திலே பௌத்த ஆலயப் பரிபாலகர்களை வண்ணக்கு நிலைமை என்று கூறும் வழக்கமும் காணப்பட்டுள்ளது. இதனால் கண்டி இராச்சியத்தின் கீழ் மட்டக்களப்பு பிரதேசம் இருந்த காலத்தில் வண்ணக்கர் முறை, மட்டக்களப்பிலிருந்து கண்டிக்கோ அல்லது கண்டியிலிருந்து மட்டக்களப்பிற்கோ பரவியிருத்தல் வேண்டும் என்ற கூற்றும் பலரிடையே நிலவுகின்றது.

பரம்பரையாக ஆலயசேவை புரிவோர் கோயிலார் என அழைக்கப்படுகின்றனர். திருவிழாக்காலங்களிலே சங்கற்பம் என்னும் சடங்கு நடைபெறும். அதிலே வன்னிமைக்கும், இளைஞர் இருவருக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும். திருவிழா ஆரம்பித்து நிறைவுபெறும் காலம்வரை இவர்களே கும்பம், வேல் ஆகியவற்றை எடுத்துச் செல்வது வழக்கம். கோயிலார் பகுதியிலுள்ள பெண்களை வட்டக்குத்துவோர் என்பர். தினமும் ஒரு மரக்கால் நெல்லினைக்குற்றி இரண்டு கொத்து அரிசியை நெய்வேத்தியத்திற்கென இவர்கள் கொடுப்பது வழக்கம்.


*வளரும்...*



# ஜீவன் முக்தி 582

## நித்ய யோகா

கனவுகளின் ஆழம் குறைந்தாலே நிஜத்தை நெருங்கி விரவீர்கள் ஓரறிவு படைத்த தாவரங்களே சூரியனிடமிருந்து சக்தியைக் கிரகித்துக் கொள்ளும்போது ஏன் ஆறறிவு படைத்த மனிதர்களால் பெற முடியாது?




நித்ய யோகா மனிதனாலும் தனக்குத் தேவைப்படும் சக்தியைச் சூரியனிடமிருந்து பெற முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தையும் விட மனிதனின் உடலானது ஐம்பூதங்களான நீர் நெருப்பு காற்று நிலம் ஆகாயம் இவற்றின் கலவையாக அமைக்கப்பட்டுள்ளது.

நித்ய யோகா ஒரு அறிவியல்.

ஐம்புலன்களின் கலவையாக அமைக்கப்பட்டிருக்கும் உடலை ஜீவன் முக்தியை வெளிப்படுத்தும் ஆரோக்கிய மிக்க உடலாக்குவது எப்படி கனவுகளைத் தாண்டி நிஜவாழ்வோடு வாழும் சக்தியை அதிகரிப்பது எப்படி என்பதை அனுபவமாக்கும் யோகம்தான் நித்ய யோகம்.

நித்ய சூர்ய நமஸ்கார பயிற்சி நேரடியாகச் சூரியனிடமிருந்து சக்தியை நமக்குள் உருவாக்கிக் கொள்வதற்கான புத்திசாதுர்யத்தை விழிப்படையச் செய்கிறது.

நித்யயோகா அறிவியல்பூர்வமாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்று.

நம்மிடையே இரண்டுவிதமான வாழ்க்கை முறை இருக்கிறது. அதில் ஒன்று.

நம் கனவுவாழ்க்கையை வாழ நினைப்பது மற்றொன்று வாழ்க்கையை நிஜத்தில் வாழ்வது.

இந்த இரண்டு வாழ்க்கையும் சந்தித்துக் கொள்வதைத்தான் யோகா என்றுசொல்கிறோம்.

உங்கள் கனவு வாழ்க்கையையும் நிஜ வாழ்க்கையையும் இணைப்பது எப்படி? உங்களால் இரண்டு வாழ்க்கையையும் இணைக்க முடியும்.

உங்களின் எதிர்பார்ப்புகளையும் உங்கள் கனவுகளின் ஆழத்தையும் குறைக்கும்போது உங்களின் சக்தி வெளிப்பாடு அதிகமாகிறது. அப்போது கனவு தளமும் நிஜ தளமும் மிகவும் நெருங்கி வந்துவிடும்.

யோகா உங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து விழிப்படையச் செய்யும்.

எது நிஜ வாழ்க்கையோ அதைத் தம் கனவு நிலைக்கு உயர்த்த நினைக்கும் மனிதர் பொருளியல்வாதி. அவர் தம் வாழ்க்கையில் காணும் கனவையெல்லாம் சாதிக்க நினைப்பவர். ஆனால் பிரச்சினை என்னவென்றால் அவருடைய கனவு என்பது நிலையானது அல்ல. சமநிலையிலும் அது இல்லை.

நீங்கள் உங்களின் கனவை நோக்கி வேலை செய்ய ஆரம்பித்தால் உங்களின் லட்சியமானது தொடர்ந்து மாறிக்கொண்டேதான் இருக்கும் உங்கள் யோசனைகளும்தொடர்ந்து மாறிக் கொண்டேதான் இருக்கும்.

உங்களுக்குள் சக்தி வெளிப்பாட்டை அதிகரிப்பதின் மூலமாக நிஜ தளமானது கனவு தளத்தை நோக்கி நெருங்கி வந்துவிடும். இப்படி இரண்டு தளங்களும் சந்தித்துக் கொள்வதையும் சங்கமித்துக் கொள்வதையும்தான் நித்ய யோகா என்று சொல்கிறோம்.

நித்ய யோகாவில் உள்ள நித்ய சூரிய நமஸ்காரம் எல்லாத் தரப்பட்ட மக்களுக்கும் உதவக்கூடியது.

சூரியனிடமிருக்கும் சக்தியை நமக்குள் உருவாக்கிக் கொள்வதற்கான புத்தி சாதுர்யத்தை விழிப்படையச் செய்யும் பயிற்சிதான் நித்ய சூரிய நமஸ்காரம்.

இயற்கையாகவே மனித உடலானது தேவையான அளவு சக்தியை சூரியனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் புத்திசாதுர்யத்தைப் பெற்றிருக்கிறது.

பழங்கால ஆயுர்வேத அறிவியல் சொல்கிறது... 'மனித உடல் ஒரு உன்னதமான மிகச் சிறந்த அமைப்பு. அது ஒரு வாழும் நினைவு வங்கி பூமியில் வாழ்கிற மற்ற ஜீவன்களைப் பற்றிய அறிவை மிக அதிக அளவில் சேகரித்து வைத்திருக்கும் சேமிப்பு களஞ்சியம்.'

நூற்றுக்கணக்கான வருடங்களாக நம் சுதந்திரம் பறிக்கப்பட்டதாலும்



சக்தியங்களை நாமே நிராகரித்து வருவதனாலும் நமது உடலின் இயற்கையான அறிவைப் பற்றி தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

நம் ரிஷிமார்கள் மனிதர்களாகிய நாம் ஒவ்வொரு நிமிடமும் பிரபஞ்ச சக்தியால் நிரப்பப்படுகிறோம்' என்ற உண்மையை தாங்கள் உணர்ந்ததோடு மட்டுமல்லாமல் அனைவருக்கும் இந்த உண்மையை உணர்த்தியுள்ளனர்.

நம் உடலின் ஒவ்வொரு செல்லும் உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் சுற்றுப்புறச் சூழலினால் புத்துணர்ச்சி ஊட்டப்படுகிறது.

இந்திய கலாச்சாரப்படி நமது உடலமைப்பானது இயற்கையிலேயே சக்தியை வழங்கும் புத்திசாலித்தனத்தையும் மற்றும் தகுதியையும் பெற்றிருக்கிற ஒரு மிக அற்புதமான இயந்திரம்.

நித்ய சூர்ய நமஸ்காரம் முற்றிலுமாக நம்மைச் சுற்றி உள்ள பிரபஞ்ச சக்தியை உடலுக்குத் தேவையான அளவு பெற்றுக் கொள்வதற்காகவே வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. அதிகாலையில் உதிக்கிற கதிரவனின் முதல் சூரியக்கதிர்கள் நம் முகத்தில் படுமாறு கிழக்கு நோக்கி நின்று தகுந்த மூச்சுப் பயிற்சியையும் மற்றும் நித்ய சூர்யநமஸ்கார மந்திரத்தையும் உச்சாடனம் செய்தால் நம் ஒவ்வொருவருடைய உடல்மற்றும் மனம் அடைகிற சக்திக்கு இணையாக இந்த உலகத்தில் எதுவுமே இருக்க முடியாது.




தினமும் காலையில் 12 முறை இந்தப் பயிற்சியை செய்தால், மிக அதிக அளவிலான சக்தியைப் பெறலாம்.

உடலின் எல்லாப் பகுதிகளும், ஒவ்வொரு உடல் உறுப்புகளும், ஒவ்வொரு சக்தி மையங்களும் புத்துணர்வோடு செயல்படும் விதமாக நித்ய சூர்ய நமஸ்காரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நித்ய யோகா வகுப்பிலும் 6 முதல் 12 படிகள் கொண்ட நித்ய சூர்ய நமஸ்காரப் பயிற்சியையும் வழங்குகிறோம். எல்லா யோகாசனங்களைக் காட்டிலும் மிகச்சிறந்த ஆசனம் நித்ய சூர்ய நமஸ்காரம் ஒன்றேயாகும். ஏனெனில், அது முழு உடலையும் வளைத்து நீட்டி திடமாக மாற்றுகிறது.

நித்ய சூர்ய நமஸ்காரம், 'ஆசனங்களின் ராஜா'வாகத் திகழ்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | இரு கால்களையும் ஒன்றாக சேர்த்து சமநிலைக்காக சிறிதளவு விரித்து நின்று கொள்ளுங்கள். கைகளை நமஸ்கரிக்கும் நிலையில் மார்பிற்கு முன் வைத்துக்கொள்ளுங்கள். சூர்ய நமஸ்காரம் செய்யும்போது கண்களைத் திறந்தே வைக்கலாம். | 2 | மூச்சை நன்கு உள்ளிழுத்துக்கொண்டே, இரு கைகளையும் உயர்த்தி, மெதுவாகப் பின்புறமாக உடலை எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு வளைக்கவும். |
| 3 | பின் மெதுவாக மூச்சை வெளிவிட்டுக்கொண்டே, முன்புறமாக குனிந்து உள்ளங்கைகள் தரையில் படுமாறும், நெற்றிப்பகுதி முட்டியைத் தொடுமாறும் குனியவும். | 4 | பின் அதே நிலையில் நின்றுகொண்டே, மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே வலதுகாலைப் பின்புறம் நோக்கி நீட்டி இதயப்பகுதியின் மையப் பகுதியையும் முகத்தையும் மேல்நோக்கி உயர்த்தவும். |
| 5 | இடது காலையும் பின்நோக்கி நீட்டி, முதுகு, கழுத்து மற்றும் தலை மூன்றும் நேர்க்கோட்டில் இருக்குமாறு, கைகள் தோள்பட்டைக்கு நேர் கீழே இருக்குமாறு வைத்துக்கொள்ளவும். | 5 | மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு இடுப்புப்பகுதியை மேலே உயர்த்தி பர்வதாசனம் போல் செய்யவும். |
| 6 | அஷ்டாங்க யோகாவைப் போல் முட்டிப்பகுதி, மார்புப்பகுதி, நாடிப்பகுதி தரையில் படுமாறு இருக்கவும். பின்பு இடுப்புப்பகுதியை மட்டும் சற்று மேலே உயர்த்தவும். | 7 | மெதுவாக மூச்சை உள்ளிழுத்துக்கொண்டு, உள்ளங்கையால் தரையைத் தள்ளியவாறு, மார்புப்பகுதியை மேலே உயர்த்தி, கைமுட்டியை 90 டிகிரி கோணத்திலும் மற்றும் புஜங்காசனத்தில் இருப்பதுபோலவும் செய்யவும். |
| 8 | கைகளால் தரையைத் தள்ளியவாறு, இடுப்புப்பகுதியை மேலே உயர்த்தி மற்றும் அர்த்தோமுக ஆசனம் போல் மூச்சை மெதுவாக வெளியேற்றிக்கொண்டே கைவிரல்களை நன்கு விரித்த நிலையில் வைத்திருங்கள். | 9 | மூச்சை உள்ளிழுத்துக்கொண்டே, மேல்நோக்கிப் பார்த்தவாறே வலது காலை முன்னே கொண்டுவந்து கைகளுடன் சேர்த்து வைக்கவும். |
| 10 | பின்பு இடது காலை மீண்டும் முன்னோக்கி வைத்து, கால்கள் கைகளை ஒட்டி இருக்குமாறும், நெற்றிப்பகுதி முட்டிப்பகுதியைத் தொடுமாறும் குனிந்த நிலையில் நிற்கவும். | 11 | மூச்சை உள்இழுத்துக்கொண்டே எழுந்து பின்புறமாக உடலின் முதுகுப்பகுதியை ஒரு ஆர்ச் போன்று வளைக்கவும். |
| 12 | மெதுவாக மூச்சை வெளியேற்றிக்கொண்டே கைகளை மார்புப்பகுதிக்கு முன் கொண்டுவந்து நமஸ்கரிக்கும் நிலையில் நிற்கவும். | | |

இதுபோல் அடுத்த காலுக்கும் பன்னிரண்டு படிகளையும் செய்யுங்கள். இது ஒரு சுற்று ஆகும். இதுபோன்று பன்னிரண்டு சுற்றுகள் செய்து முடித்தபின் சவாசனத்தில் (தரையில் கை, கால்களைத் தளர்வாக விரித்து நிமிர்ந்து படுத்தல்) 10 நிமிடம் தளர்வாக (relax) இருங்கள்.

## சக்தி தாரணை

பலன்கள்:

3: புத்துணர்ச்சி அதிகம் பெற்றவர்களாக உணர்வீர்கள்.
2: உடலின் சூட்சுமான சக்கரங்களைச் சக்தியூட்டும் சக்தி தாரணை தியானம்.

இந்தத் தியானத்தைப் பற்றி: சொல்லுக்கடங்காத அழகிய தியானம் இது.

இதைத் தியானம் என்பதை விட, ஒரு பிரார்த்தனை எனலாம்.

பிரபஞ்ச சக்திகள் அனைத்தினோடும், உங்களைத் தொடர்பு கொள்ளச் செய்வது இந்தத் தியானம்.

இதை இரவு வேளையில் உறங்கப் போகுமுன் பயிற்சி செய்வதுதான் சிறந்தது.

பகலில் செய்வதானால், செய்த பிறகு பதினைந்து நிமிட ஓய்வு வேண்டும். அந்த ஓய்வுப் பொழுதில்தான் தியானத்தில் பெற்ற சக்தி ஒன்று திரளும். இல்லாவிட்டால், பல மணி நேரம் பிரமை பிடித்த மாதிரி ஆகிவிடும்!

செயல்முறைக்கான குறிப்புகள்:

குளிர்ச்சியான, காற்றோட்டமுள்ள, இருண்ட அறை ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். நீங்கள் விரும்பினால் வெளியிலும் செய்யலாம்.

தரையில் மண்டியிடுங்கள். உறுத்தலாகத் தோன்றினால் பாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முழங்காலிட்டு நிமிர்ந்து கைகளை வானை நோக்கி உயர்த்தவும். முகத்தை வானை நோக்கிப் பார்த்தபடி வைத்துக் கொண்டு, சற்று காத்திருக்கவும்.

விரைவில் இயற்கையின் சக்தி உங்களுக்குள் பாய்வதை உணரலாம். அதைக் தடுக்காமல் அப்படியே இருக்க வேண்டும்.

இயற்கை சக்தி உங்களுக்குள் பாயட்டும்.

கைகளில் ஒரு நடுக்கம் தோன்றும். மெல்ல, மெல்ல உங்கள் உடல் முழுவதும் நடுங்கும். அப்போது உங்களுக்குள் பிரவேசிக்கும் சக்தியோடு இணைந்து உடல் முன்னும் பின்னும் அசையும். அவற்றையெல்லாம் அனுமதியுங்கள்.

நீங்கள் மிதப்பதாக உணர்வீர்கள். உடலே இல்லாததைப் போல் உணர் வீர்கள்.

நீங்கள் முற்றிலும், இனி நிரம்ப முடியாத அளவுக்குச் சக்தியால் நிறைந்து விட்டதாகத் தோன்றும்போது, குனிந்து தரையைமுத்தமிடுங்கள். உங்கள் உள்ளங்கைகளைப் பூமியின் மேல் பதியுங்கள். உங்கள் அன்பையெல்லாம் பூமிக்கு வழங்குங்கள்!

உங்கள் உதடுகள் வழியாகவும், கைகள் வழியாகவும், அன்பு, பூமி நோக்கிப் பாய்வதை உணருங்கள். தெய்வீக சக்தியைப் பூமிக்கு வழங்கும் ஒரு கருவியாக மாறி விடுங்கள். இதை ஏழு முறை தொடர்ந்து செய்யுங்கள். ஒவ்வொரு முறையும் ஏழு சக்தி சக்கரங்களில் ஒன்று, சக்தி ஏறப்பெறும்.

ஏழுமுறைக்கு மேல் அதிகம் செய்தால், சக்தி அதிகரித்து, நிம்மதியின்மை ஏற்பட்டு விடும். ஏழுமுறைக்குக் குறைவாகச் செய்ய வேண்டாம். சக்திச் சுற்று முழுமை பெறாமலே நின்று விடும். எனவே, ஏழு முறை தொடர்ந்து செய்யுங்கள்.

சக்தி தாரணை என்னும் வழிபாடு முடிந்தவுடன், அந்த வழிபாட்டு நிலையிலேயே உறங்கி விடுங்கள். அந்தச் சக்திக்குள் மூழ்கி, அதற்குள்ளேயே உறங்கி விடுங்கள். நீங்கள் கண் விழிக்கும்போது, புத்துணர்ச்சியோடு அதிகம் சக்தி பெற்றவர்களாக உணர்வீர்கள்.

(தொடரும்...)




## 05 உருவும் அசைவும்

இதயமே, நீ மாரடைப்புக்கு உள்ளான பின்னர் உன்னைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முயற்சித்தேன்.

உடம்பின் உள்ளும் புறமும் இருக்கும் எல்லா உறுப்புக்களும் முக்கியமானவைதாம். ஆனாலும் போட்டி என்று வந்தால் நிச்சயமாக உனக்கு முதலிடம் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.


நீ நாலு அறைகளைக் கொண்ட ஓர் அழகான உயிர்க்கூடு. நெஞ்சின் நடுவில் இடது பக்கம் சாய்ந்து இருக்கிறாய். நீயும் ஒருவகையில் இடதுசாரிதான். நீ பாகுபாடு காட்டுவதில்லை. ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் கடின உழைப்பாளி. உழைக்கும் வர்க்கம்தான்.

*இருதயம் என்றும்*
*இடதுசாரியே*

இது சில்லையூர் செல்வராசன் கவிதை.


இதயமே, உன்னை உயிர்க்கூடென்றும் சொல்லலாம். உயிர்வீடென்றும் சொல்லலாம்.

வலது பக்கம் இரண்டு அறைகள், இடது பக்கம் இரண்டறைகள். எல்லாமாக நான்கு கதவுகள். வருகிற கதவின் ஊடாக வெளியே போக முடியாது. மற்றக் கதவால் வெளியே போகலாம். ஆனால் போன உடனும் திரும்பி வர முடியாது. இராணுவச் சட்டம் மாதிரி அவ்வளவு கடுமையான சட்டம். இந்தச்சட்டம் இரண்டு பக்கத்துக்கும் பொதுவானதே.




வலது பக்க மேலறைக்கு RA (Right Artrium) என்று பெயர். கீழறைக்கு RV (Right Ventrcle) என்று பெயர். இடது பக்க மேலறைக்கு LA (Left Artrium) என்று பெயர். இடது பக்க கீழறைக்கு LV (Left Ventricle) என்று பெயர். உடல் முழுமைக்கும் குருதியை பாய்ச்சுவது உன்னுடைய வேலை. இதயமே, நீ உடம்பு முழுதுக்கும் குருதியை வழங்குவது போல உனக்கும் வழங்க வேண்டும். உன்னை நீ நல்லாக வைத்திருந்தால் மட்டுமே உடல் முழுதையும் பாதுகாக்கலாம்.

இடையில் உன்னை நீ கவனிக்க முடியாமல் தடைகள் ஏற்பட்டால், உன் இயக்கம் நின்று விட்டால் எல்லாம் முடிந்து விடுகிறது. "நான் அசைந்தால் அசையும் உலகம் எல்லாமே - என்னிசை நின்றால் அடங்கும் உலகே" என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. உன்னுள்ளே நிகழும் மின் தூண்டுதல் இயக்கமே அனைத்தையும் நடத்துகிறது.



நாடி (Artery) எனும் குழாயின் ஊடாக நல்ல இரத்தத்தை அனுப்புகிறாய். நாளம் (Vein) எனும் நரம்புகளினூடாக பயன் பட்ட இரத்தத்தை திரும்ப எடுத்து சுவாசத்துக்கு அனுப்பி பிராண வாயுவினால் சுத்தம் செய்து - பிராண வாயுவோடு சத்துக்களையும் சேர்த்துக் கொண்டு மீண்டும் உடல் முழுமைக்கும் அனுப்புகிறாய். "உயிரும் நீயே உடலும் நீயே" என்று பாடத் தோன்றுகிறது.

இதயமே, உனக்கு வரும் பிரச்சினைகளில் மாரடைப்பு (Heart Attack) ஒன்றையே பொதுவாக பலரும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் உனக்கு 15க்கும் கூடுதலான பிரச்சினைகள் (இதய நோய்கள்) வருவதாக அறிய முடிகின்றது. இதயக் குழாய்களிலான அடைப்பு மாரடைப்பைக் கொண்டு வருகிறது.

ஒரு நிலையான நெஞ்சு வலி (Angina Pain) போதிய பிராணவாயு (Oxygen) இல்லாததால் உண்டாகிறது. ஓய்வெடுக்கும்போது இந்த வலி இல்லாமல் போகக் கூடும். ஆனால் விட்டுவிட்டு தொடர்ச்சியாக வரும் நெஞ்சு வலி (Angina) மிகவும் பாரதூரமானது.

ஓய்வாக இருக்கும்போதும் இது வரும். ஒழுங்கான இதயத் துடிப்பை மாற்றி மேலும் பிரச்சினைகளை இது கூட்டும். ஒரு இதயக் குழாயின் அடைப்பு (Coronary Artery Blockage) திடீர் மாரடைப்பைக் கொண்டு வரும்.

ஒழுங்கற்ற இதயத் துடிப்பு ஒழுங்கற்ற மின்னியக்க உந்துவிசையால் உருவாகிறது. இதயம் விரிவடைந் திருப்பது, தடிப்பாகவோ விறைப்பாகவோ இருப்பது இதயமே உன் செயலைக் குறைக்கிறது. தொற்று வியாதிகளால் உருவாகும் இதயச் சுவர்களின், இதயத் தசைகளின் வீக்கம் (Inflamation). இதயத்தின் ஓரங்களில் இடையே தேங்கும் திரவம், குருதியைப் பாய்ச்ச (Pumbing) முடியாமல் தடுக்கிறது. இவற்றோடு இதயக் கதவுகளின் பிரச்சினைகள் என்று பல்வேறு பிரச்சினைகளும் இதுவரை தேடி அறியும் வரை எனக்குத் தெரியாமலே இருந்தன.

இவற்றை அறிந்து கொண்டு பயப்பிடுவதாலேயே இதயத்துடிப்பு வேகமாகி இதய நோய் புதிதாக வந்து விடுமோ என்றொரு பயமும் கூடவே வருகிறது.

---

## 06 யாகாவாராயினும்

மாரடைப்பு காரணமாக மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெற்ற போது என்னை சுகம் விசாரித்து வந்தவர்களில் நான் கடமை புரிந்த பனை அபிவிருத்துச் சபையின் தலைவரான க. நடராஜா அவர்களும், சபையின் சக ஊழியர்களும், வடக்கு கிழக்கு மாகாண சபையின் செயலாளரான சி. பற்குணம் அவர்களும், புதிய ஜனநாயக மாக்சியலெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் அவர்களும், மற்றும் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்த நண்பர் சட்டத்தரணி சோ. தேவராஜா, தொழில் நுட்பக் கல்லூரியில் படித்த காலத்திலிருந்து தொடரும் நட்பிலுள்ள க. தவராஜா ஆகியோரும் உள்ளடங்குவர்.



சிகிச்சையின் பின்னர் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போது இந்த நிலையில் மருதானை வாடகை வீட்டில் சென்று தனித்து இருக்க வேண்டாம் எனச் சொல்லிய பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் க. நடராஜா அவர்கள் கொஞ்சக் காலம் தமது இல்லத்தில் வந்து தங்குமாறு சபை வாகனத்தில் என்னை அழைத்துச் சென்றார்.

அங்கிருந்த காலங்களில் அவரது துணைவியார் யோகம்மாவும் பிள்ளைகளும் என்னை மிகுந்த பரிவோடு கவனித்துக் கொண்டார்கள். பத்தியமான சாப்பாடுகளைத் தந்து ஒரு தாய் போல கவனித்தார்.



மாரடைப்புக்கும் சாப்பாட்டுப் பழக்கங்களுக்கும் இடையே நெருக்க மான தொடர்பு இருக்கின்றது. இது பலருக்கும் தெரியும். தெரிந்தும் என்ன?
நா காப்பது பலருக்கும் இயலாத ஒன்றாகவே இருக்கின்றது.

*யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்*
*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.*

இந்தக் குறள் தேவையற்ற பேச்சுக்களை தவிர்ப்பதற்காக மட்டும் சொல்லப்பட்டதன்று. காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு என்பதை நெஞ்சிழுக்குப்பட்டு என்றும் பொருள் கொள்ள வேண்டும். உணவு பழக்க வழக்கங்களுக்கும் இதய ஆரோக்கியத்திற்கும் இறுக்க மான தொடர்புண்டு.

எனது மாரடைப்புக்கும் இந்த உணவுப் பழக்கத்தின் பங்கும் இருக்கும். ஏனென்றால் 1972 இலிருந்து 1980 ஆம் ஆண்டுவரை கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்த காலங்களிலும் கொழும்பில் வேலை செய்த காலங்களிலும் பின்னால், 1988 - 1990 களில் கடமையாற்றிய காலங்களிலும் வெளியில் கடைகளிலேயே சாப்பாடு. எனது சாப்பாட்டுப் பழக்கம் கையிலும் பையிலும் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதில் தங்கியிருக்கும்.

காசிருக்கும் போது சிங்களச் சாப்பாடு, தமிழ்ச் சாப்பாடு, முஸ்லீம் சாப்பாடு என்று எந்த விதமான பாகுபாடுகளும் இல்லாமல் என் வயிறு ஏற்றுக் கொள்ளும். என் இதயமே, உன்னைப் போலவே என் வயிற்றுக்கும் இனக் குரோதம் துண்டறக் கிடையாது. கொழு கொழு என்றிருக்கும் கறுப்பழகிகளைக் கண்டால் வாயூறும். பிறகென்ன... வேறொன்றுமில்லை கழுதொதலைத்தான் சொன்னேன். தேங்காய் எண்ணெய்க் கொழுப்பு அதிகம் உள்ள தின்பண்டம். கொழுப்பை பற்றி அதிகம் தெரிந்து கொள்ளாத காலம். இப்போது ஆரைக் கேட்டாலும் கொலெஸ்ட்ரோல் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவுக்கு இதய வருத்தங்களும் அதிகரித்து விட்டன.

இப்படி திடீரென ஒரு மாரடைப்பு வந்ததில் இந்தியாவில் சென்னையில் இருந்த எனது துணைவியாரும் பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் ஊரில் இருந்த அம்மா, பெரியம்மா, அண்ணா உறவினர்களும் கனடாவில் இருந்த சகோதரியும் அவர் கணவரும் மிகுந்த கவலைப்பட்டு அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு சுகம் விசாரித்து வந்தனர். மருத்துவச் செலவுகளை அவர்களே கனடாவிலிருந்து கவனித்தனர்.

இனிமேலும் எனது குடும்பத்தை விட்டு விட்டு கொழும்பில் இருப்பது சரியல்ல என முடிவுக்கு வந்துவிட்டோம். என் இதயமே, இன்னுமொரு மாரடைப்பு வருவதன் முன்னர் என் துணையையும் பிள்ளைகளையும் பார்க்க வேண்டும் - இனி அவர்களோடு ஒன் றாகவே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். **(தொடரும்...)**



(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 54)





## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இந்தச் சிறு பெண் என்ன குழப்பம் வருவிக்கப் போகிறாள் என்றபடி உத்தரவிட உடனே 'கொடும்பனார் இளவரசிக்கு கோட்டைக் கதவுகள் திறக்கப்படும் யானையின் மீதுள்ளவர்கள் மட்டும் கோட்டைக்குள் வரலாம்' என்று பெரும் குரல் எழுப்பப்பட்டதும் கதவுகள் திறக்கப்பட்டன. அகழியின் பாலம் இறக்கப்பட்டது யானை பாலத்தின் மேல் நடந்து சென்றது பின்னர் பாலம் தூக்கப்பட்டது. கதவுகள் அடைக்கப்பட்டது. சின்னப் பழுவேட்டரையரின் யானை அங்கு வந்து நின்றது 'வர வேண்டும் வரவேண்டும் தங்கள் பெரிய தந்தை தடுத்தும் கேளாது தாங்கள் என் விருந்தாளியாக வர இசைந்தது பற்றி மகிழ்ச்சி தங்களுக்கு எந்த தீங்கும் ஏற்படாது அஞ்சவேண்டாம்' என்று கம்பீரமான குரலில் சொன்னார். அதற்கு வானதி 'நான் சொல்ல வந்த செய்தி சொன்ன பிறகு பாதாள சிறையில் அடைத்தாலும் கவலை கொள்ளமாட்டேன்' என்றாள். 'நீ கொண்டு வந்த முக்கியமான செய்தி என்ன?' என்று கேட்டார். வானதி சொன்னாள் 'பாண்டிய நாட்டுச் சதிகாரர்கள் பற்றி தான் அலட்சியமாக இருந்து விட்டேன் வீர பாண்டிய ஆபத்துதவிகள் சிலர் உண்மையாகவே சதி செய்து வருகிறார்கள் சோழ குலத்தைப் பழி வாங்க இன்று கெடு வைத்திருக்கிறார்கள் சக்கரவர்த்தியை பத்திரமாக பாதுகாக்க வேண்டுமாம் என்று எச்சரிக்கும் படியும், பழுவூர் ராணியின் அரண்மனையில் யாரோ ஒரு மந்திரவாதி வந்து போனது பற்றி தாங்கள் எச்சரிக்கை செய்தீர்களாமே அந்த மந்திரவாதி ரவிதாசன் என்னும் சதிகாரனாம் தான் தஞ்சை வரும் வழியில் புயலில் சிக்கி கரையேறிய போது சதிகாரர் பேசியதைக் கேட்டாராம் சர்வ ஜாக்கிரதையாக சக்கரவர்த்தியை பாதுகாக்கும்படி சொல்லி இளையபிராட்டியிடம் சொன்னார். அவர் என்னை அனுப்பினார்' என்றாள். இதைக் கேட்டு திடுக்கிட்டு 'இப்பொழுது அவர் எங்கே நீங்கள் அவரைச் சந்தித்தீர்களா? என்று கேட்டார்.

அதற்கு அவர் குடந்தை சோதிடர் வீட்டிற்கு வந்தார் இப்பொழுது கடம்பூர் செல்கிறாராம் ஏனெனில் ஆதித்தகரிகாலனை ஆபத்தில் இருந்து காப்பாற்றியாக வேண்டுமாம்' என்றாள் வானதி. பினனர் 'ஐயா நான் சக்கரவர்த்தியைப் பார்த்து குந்தவை பிராட்டியின் செய்தியை சொல்லி விட்டு போகிறேன்' என்றாள். அதற்கு சின்னப் பழுவேட்டரையர் 'பெண்ணே சக்கரவர்த்தி கலக்கம் கொண்டுள்ளார் அதனால் என்னிடமே சொல்லிவிடு சமயம் பார்த்து நானே அவரிடம் சொல்கிறேன்' என்றார். வானதி 'அவர் கலக்கத்தை த ீர்க்கும் செய்தியை நான் கொண்டு வந்துள்ளேன் என்னை அரண்மனைக்குப் போக விடுங்கள் பொன்னியின் செல்வர் பற்றிய செய்தி' என்றாள். சின்னப் பழுவேட்டரையர் 'அவர் உயிருக்கு ஏதேனும் ஆபத்து வந்தால் என்ன செய்வது இளவரசர் எங்கே என்று உனக்குத் தெரியுமா?' என்றார். வானதி 'ஐயா அவர் சுகமாக இருக்கிறார் ஆபத்து நேர இருந்தும் கடவுள் அருள் புரிந்து அவரைக் காப்பாற்றினார்' என்றவுடன் மிக்க மகிழ்ச்சியுடன் வானதியை அரண்மனைக்கு போக விட்டார். வானதியின் செய்தி கேட்டு சக்கரவர்த்தியின் அரண்மனைக்குப் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் அத்துடன் கோட்டை முழுவதும் சுற்றிப் பார்த்து வரும் படி தன் வீரர்களையும் கட்டளையிட்டார். வானதி அரண்மனையை அடைந்ததும் யானை அசைந்து மண்டியிட்டுப் படுத்தது அப்பொழுது வானதி, பூங்குழலி இருவரும் இறங்கி சக்கரவர்த்தியை பார்க்க புறப்பட்டனர். அவர்களோடு யானைப் பாகனும் தொடர்ந்து சென்றான் இதைக் கண்ட காலாந்தக கண்டர் கோபம் கொண்டு 'அடே நில் இங்கே யானைப் பாகனுக்கு அரண்மனையில் என்ன வேலை' என்று அவனுடைய கையைப் பிடித்து இழுத்தார். 'நீ யானைப் பாகனா அல்லது சதிகாரனா இல்லை அன்று இங்கிருந்து தப்பிச் சென்ற ஒற்றனா? இம்முறை நீ தப்பிச் செல்ல முடியாது' என்று கத்தியபடி அவன் முகத்தை வெளிச்சத்தில் பார்த்தார். என்ன சொல்வதென்று அறியாது திகைத்து நின்றார். பொன்னியின் செல்வர் ஈழம் கொண்ட வீர சோழ நாட்டின் தவப் புதல்வர் என் குற்றத்தை மன்னித்தேன் என்று அருள்வாக்கு தர வேண்டும் என்று கை கூப்பி நின்றார். இதைக் கேட்ட இளவரசர் 'தாங்கள் பொறுப்பை நிறைவேற்று தங்கள் கடமையைச் செய்தீர்கள் அதில் குற்றம் இல்லை தவறு என்னுடையது யானைப் பாகன் வேடம் கொண்டது என் தவறு முதலில் சக்ரவர்த்தியை பார்த்து விட்டு வருகிறேன்' என்றார். வானதியும் இளவரசரும் சக்கரவர்த்தியைப் பார்க்கச் சென்றார்கள். பூங்குழலி அங்கு சென்று விட்டு திரும்பி வந்து அரண்மனை வாசலில் நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கு வந்த சின்னப் பழுவேட்டரையரிடம் 'தாங்கள் கோட்டையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு போட்டுள்ளீர்கள் ஆனால் அரண்மனைக்குள் சதிகாரர் இருக்கலாம் அல்லவா' என்றாள். இதைக் கேட்டு இது என்ன இடி என்றார் காலகண்டர். 'ஆமாம் ஐயா இந்த அரண்மனைக்கு வருவதற்குள் ஒரு சுரங்கப் பாதை உண்டு அல்லவா அதை இன்று அதிகாலை நான் தெரிந்து கொண்டேன் அங்கு சதிகாரரன் ஒருவன் ஒழிந்து இருப்பதை நான் பார்த்தேன்' என்றாள். அவரால் இதை நம்ப முடியவில்லை 'விளக்கமாகச் சொல் உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்' என்று கேட்க 'முதல் மந்திரியின் கட்டளையின் பேரில் தாங்கள் அனுப்பிய பல்லக்கில் கோடிக்கரையில் இருந்து கொண்டு வரப்பட்ட பெண் என் அத்தை அவள் எனக்குக் காட்டினாள்' என்றவுடன் சின்னப் பழுவேட்டரையர் நம்பலில்லை தன்னை இவள் ஏமாற்றப் பார்க்கிறாள் இவள் சொன்னது உண்மையானால் அந்த ஆபத்தை தடுத்து நிறுத்துவது கடினமல்ல என்று எண்ணிப் புறப்பட்டார்.

தஞ்சை அரண்மனையில் குந்தவை, வானதி, பூங்குழலியுடன் மந்தாகினியும் படுத்திருந்தாள். அப்பொழுது மந்தாகினி பூங்குழலியை தட்டி எழுப்பியது ஞாபகம் வந்தது. அத்தை இங்கு தான் கூட்டி வந்தார் அவள் என்னை இந்த அந்தரங்மான சுரங்கப் பாதை வழியே கூட்டி வந்தார். இருள் சூழ்ந்திருந்ததால் எதுவும் தெரியவில்லை அங்கு யாரோ ஒழிந்திருப்பது மட்டும் புரிந்தது இந்த சுரங்கப் பாதையில் பொக்கிஷ நிலவறை இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள் அந்த மனிதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை அப்பொழுது மந்தாகினி பூங்குழலியிடம் தன் பாஷையில் கூறினாள் 'என் காலம் முடிவடையப் போவதாக தோன்றுகிறது அதற்கு முதல் நான் பொன்னியின் செல்வரைப் பார்க்க விரும்புகிறேன் அவரை அழைத்து வா' என்று சொல்லி அனுப்பினார் அத்தையின் வற்புறுத்தலால் சுரங்கப் பாதையில் இருந்து வெளியே வந்த பூங்குழலி திருமலையை சந்தித்தாள் பின்னர் இருவரும் சோதிடர் வீட்டை அடைந்தனர். இதை ஞாபகப்படுத்திய பூங்குழலி சின்னப் பழுவேட்டரையரை அழைத்துக் கொண்டு அந்த சுரங்கப் பாதைக்கு சென்றாள். அங்கு தன் இறுதிக் காலம் நெருங்கிவிட்டது என்று சொன்ன தன் அத்தையைத் தேடினாள் அப்பொழுது கிறீச் என்ற குரல் அரண்மனைக்குள்ளே சக்கரவர்த்தியின் படுக்கை அறைக்குள் இருந்து வந்தது. பூங்குழலி உடனே அங்கு ஓடினாள். சக்கரவர்ததி தன் அருமைக் குமாரனின் கைகளைப் பிடித்தபடி பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் அருகில் வானதியும் மலையமான் மகளும் நின்றிருந்தனர். இவர்கள் முன்னால் நின்று மந்தாகினி அத்தை ஓலமிட்டுக் கொண்டிருந்தாள் யாவரும் மந்தாகினியை பார்த்துக் கொண்டு நின்றார்கள். மேல் மண்டபத்து முகப்பில் இருந்து வந்து கொண்டிருக்கும் வேலை யாரும் கவனிக்கவில்லை பூங்குழலி அத்தையை நோக்கிப் பாய்ந்து சென்றாள். ஆனால் வேல் மந்தாகினியை தாக்கி அவள் கீழே விழுந்தாள். பரிதாபக் குரல்கள் ஒலித்தன சக்கரவததியின் படுக்கை அறையில் இருந்த விளக்கு அணைந்து எங்கும் இருட்டாக இருந்தது. அனைவரும் அங்குமிங்கும் ஓடினர். இறுதியில் விளக்கு ஏற்றப்பட்டது அப்பொழுது மூன்று வருடங்களாக காலை ஊன்றி நடக்க முடியாது இருந்த சக்கரவர்த்தி எழுந்து சென்று காயப்பட்டுக் கிடந்த மந்தாகினியை தனது மடியில் வைத்திருந்தார். அவர் படுக்கையில் வேல் ஒன்று குற்றிக் கொண்டு நின்றது சின்னப் பழுவேட்டரையர் 'யாரடா அவன் ஓடாதே ஓடாதே' என்று கூச்சலிட்டார். இளவரசர் அருள்மொழிவர்மரின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. சக்கரவர்த்தியும் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தார். அப்பொழுது பூங்குழலி அங்கு நடந்த சம்பவத்தை ஊகித்துக் கொண்டாள். மேல் இருந்து வேலை எறிந்த போது என் அத்தை அதை தடுத்து விட்டாள் அதனால் அவர் அங்கிருந்து குதித்த சக்கரவர்த்தியின் கட்டிலுக்குச் சென்று கத்தியால் குத்தியிருக்கிறான் அப்பொழுது சக்கரவர்த்தி கட்டிலில் இல்லை எழுந்து அத்தையிடம் வந்து விட்டார் அதனால் அவர் காப்பாற்றப் பட்டு விட்டார் என் அத்தையை நான் இழந்து விட்டேன். எனக்கு அத்தைதான் கதி இப்போது யாரும் இல்லை என்று விம்மினாள். இளவரசரோ 'பூங்குழலி கண்களைத் துடைத்துக்கொள் இவர் என் பெற்ற தாயைக் காட்டிலும் பன் மடங்கு மேலான தாய் சதிகாரர்களுடைய கொலை வேல் என் தந்தை மேல் படாது காப்பாற்றி மகத்தான புண்ணியத்தை சேர்திருக்கிறார். சோழ நாட்டிற்கு எவ்வளவு பெரிய சேவை செய்துள்ளார். அதுமட்டுமன்றி பழுவேட்டரையர் குலத்திற்கு மாறாத பழிச் சொல் ஏற்படாது தந்தை உயிரைக் காப்பாற்றியுள்ளார். மொத்தத்தில் சோழ வம்சத்திற்கு குல தெய்வமாகி விட்டார்' என்றார். சுந்தர சோழர் 'என் உயிருக்கு உயிரானவளே இன்று எனக்காக உன் உயிரை விடுகிறாய் நான் கல் நெஞ்சம் கொண்ட பாவிதான் இராச்சியம் ஆளப் பிறந்தவர்கள் தம் நெஞ்சைக் கல்லாக்கி கொள்ள வேண்டியது தான் இல்லாவிட்டால் ராஜ நிர்வாகம் எப்படி நடக்கும் கடவுளும் சதி செய்து விட்டாரே' என்று விம்மி விம்மி அழுதார். இளவரசர் தன் தந்தைக்கு ஆறுதல் கூறினார். 'என் தாய் மரணமடையவில்லை அவர் தெய்வமாகியிருக்கிறார்' என்றார். கல்கியின் பொன்னியின் செல்வன் ஒரு வரலாற்று நாவல் என்பது திண்ணம் என்பதை இந்தக் குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. இன்று தஞ்சையில் ஒரு நகரில் சிங்காச்சியார் கோவில் ஒன்று உள்ளது. இது ராஜ ராஜ சோழனால் ஈழத்து ராணி என்று அழைத்த மந்தாகினி தேவிக்காக எழுப்பிய கோயில் என்று அறியப்படுகிறது. அது சில காலம் சிங்கள நாச்சியார் கோயில் என்று பெயர் கொண்டது பின்னர் அது திரிந்து சிங்காச்சியார் கோவில் எனப்பட்டது. வீர பாண்டிய ஆபத்துதவிகளின் சதியால் ஒரே நேரம் மூன்று அரச குல உயிர்களுக்கு ஆபத்து நேரிடும் படி சூழ்ச்சி செய்தார்கள் சுந்தர சோழர் மந்தாகினியால் காப்பாற்றப்பட்டார். இளவரசர் தன் விவேகத்தால் மதம் கொண்ட யானையிடம் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். அடுத்து ஆதித்தகரிகாலர் கடம்பூர் மாளிகையில் காப்பாற்றப் படுக்கிறாரா எனப் பார்ப்போம்.




பழுவூர் ராணி நந்தினி தன் அறையில் இருந்தபடி, 'வேளை வந்து விட்டது பழிக்குப் பழி வாங்குவேன் என்று சபதம் செய்து கொண்டேன் அதை நிறைவேற்றுவேன்' என்றபடி தன் வாளைக் கையில் எடுத்து முத்தமிட்டாள். அப்பொழுது மணிமேகலை கந்தமாறனின் தங்கை அங்கு வந்தாள் அக்கா எப்பொழுதும் வாளும் கையுமாக இருக்கிறீர்கள் என் சகோதரன் என் விருப்பத்திற்கு எதிராக தன்னுடைய சௌகரியத்திற்காக என்னை வற்புறுத்தி கட்டிக் கொடுக்கப் பார்க்கிறார். 'எனக்கு சகோதரன் இல்லை என்றாயிற்று' என்றாள். அதற்கு நந்தினி 'ஈழம் முதல் வட பெண்ணை வரை பரந்த சோழ ராஜ்ஜியத்தின் சிங்காசனததில் நீ பட்ட மகிஷியாக வீற்றிருக்க வேண்டும் என்று உன் தமையன் விரும்புவது உன் நன்மைக்கு அல்லவா' என்றாள் நந்தினி. 'அக்கா முக்கியமான செய்தி தனாதிகாரி பழுவேட்டரையர் இன்னும் தஞ்சை போய் சேரவில்லையாம் புயல் கொள்ளிடத்திலும் கடுமையாக அடித்ததால் அவர் படகில் சென்ற போது அக்கரை சேரும் தருவாயில் கவிழ்ந்து விட்டதாம் அங்கிருந்து தப்பி கரை ஏறியவர்கள் தங்கள் கணவனை எங்கு தேடிப் பார்த்தும் காணவில்லையாம் என்று அவருடன் போனவர்களில் ஒருவர் திரும்பி வந்து என் தமையனிடம் சொல்லும் போது கேட்டேன்' என்றாள் மணிமேகலை. இதைக் கேட்ட நந்தினி கலக்கம் அடையவில்லை 'தங்காய் என் கணவருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று என் உள் உணர்வு சொல்கிறது ஆனால் உன் தமையனும் பாத்திபேந்திரனும் என் கணவருக்கு ஏதேனும் கெடுதல் செய்ய திட்டமிட்டு இருக்கலாம் அவர்கள் என் மீது துர் எண்ணம் கொண்டிருக்கிறார்கள் இதற்காகவே இந்த வாளை என் கையில் வைத்திருக்கிறேன் உன் நிலைமையை நினைத்து தான் நான் கவலை கொண்டுள்ளேன். உன்னை மூவுலகை ஆளும் சக்கரவர்த்தியின் மூத்த குமாருக்கு மணம் செய்ய தீர்மானித்துள்ளார்கள். அவருக்கும் உன் பேரில் ஆசை ஆனால் அதற்கு தடையாக இருக்கிற காரணத்தை நீக்கிவிடப் போகிறார்கள் அதாவது யாரை உன் மனதில் எண்ணுகிறாயோ அவருக்கு ஆபத்து நெருங்குகிறது என்கிறேன்' என்றாள். அதற்கு மணிமேகலை 'ஐயோ இது என்ன சதி' என்றாள். நந்தினி 'எனக்கு ஒரு ஆலோசனை தோன்றுகிறது வந்தியத்தேவனை அழைத்து வா என் கணவரை பற்றிய உண்மையை அறிந்து வருமாறு இங்கிருந்து அவரை அனுப்பிவிடலாம் உனக்காக அவரிடம் மன்றாடிக் கேட்கிறேன்' என்றாள். அப்பொழுது மணிமேகலை புறப்பட்டாள். அவ்வேளை வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவை யாரோ தட்டினார்கள் நந்தினி கதவைத் திறந்தாள். அங்கு மந்திரவாதி நின்று கொண்டிருந்தான். நந்தினியும் விளக்குடன் வேட்டை மண்டபத்துக்குள் சென்றாள். 'ராணி சபதத்தை முடிப்பதற்கு தாங்கள் தைரியமாக இருக்கிறீர்களா?' என்று கேட்டான் மந்திரவாதி. 'ஆமாம் சபதத்தை நிறைவேற்றுவேன்' என்றாள் அப்பொழுது மந்திரவாதி 'தாங்கள் சபதத்தை முடித்த பின் தங்களைப் பத்திரமாக அழைத்துப் போக வந்தேன் எதிர்பாராத தடங்கல் ஏற்பட்டால் அதற்கு தயாராக இருக்கிறோம் எந்த நிமிடமும் தாங்கள் எங்களை உதவிக்கு அழைக்கலாம் இந்த சுரங்கப் பாதையின் முடிவில் ஐயனார் கோவிலில் பழுவூர் ராணியின் பல்லக்கை வைத்திருக்கிறோம் வீர பாண்டியனின் தலையைக் கொய்தவனை பழிவாங்கிய தேவியை நாங்களே பல்லக்கில் கொண்டு செல்வோம் நாங்கள் நான்கு பேர் இங்கு இருக்கிறோம்' என்றான். அப்போது நந்தினி 'மந்திரவாதி பெரிய பழுவேட்டரையர் பற்றி ஏதெனும் செய்தி தெரியுமா? அவர் தஞ்சை புறப்பட்டு போனார் அல்லவா கொள்ளிடத்தை கடக்கும் போது புயல் அடித்து படகு கவிழ்ந்து விட்டது அவர் கரையேறாது மூழ்கி விட்டாராம் என்று செய்தி வந்துள்ளது ஆனால் அதை நான் நம்பவில்லை ஆனால் இன்றிரவு இங்கு திரும்பி வந்துவிட்டால் என்பதுதான் என் கவலை' என்றாள் 'கவலை வேண்டாம் தேவி அவர் இங்கு வரமாட்டார் எங்களுக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்' என்று கேட்டான் மந்திரவாதி. 'மந்திரவாதி நீங்கள் இந்த வேட்டை மண்டபத்தில் இருங்கள் என் அறையில் என்ன நடந்தாலும் எத்தனை பேர் பேச்சுக் குரல் கேட்டாலும் அங்கு வரவேண்டாம் நான் குரல் கொடுத்த பிறகு வாருங்கள் காரியம் முடிந்து விட்டால் கலகல என்று சிரிப்பேன் எதிர்பாராத தடங்கல் வந்து விட்டால் நான் அமுழ் குரல் கொடுப்பேன்' என்றாள் நந்தினி. இவ்வாறாக வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் சதி செய்து கொண்டிருக்கும் வேளை ஆதித்தகரிகாலனிடம் சம்புவரையர் ஒரு செய்தி சொன்னார் திருக்கோவலூர் மலையமான் படை திரட்டிக் கொண்டு வருகின்ற செய்தியை தெரிவித்தார்.

தொடரும்...)

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன்

# பிரேரணைகள் முடிவு தருமா?

- திருமலை நவம்

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தைக்கொண்டுவந்து ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும் அரசாங்கத்தை கலைக்கவேண்டும் என்ற வேகத்துடன் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் ஏனை எதிர்க்கட்சிகளும் முனைப்புடன் செயற்பட்டுவருகிறது. இதனடிப்படையில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் ஐக்கிய மக்கள் சக்தியினால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ஜனாதி கோத்தபாய ராஜபக்ஷவை தொடர்ந்து பதவி-யில் தக்கவைக்கும் ராஜதந்திரங்களுடன் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் வேகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆதற்கு ஏற்ற காய் நகர்த்தல்களும் இடம் பெற்றுவருவதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதிவீட்டுக்க செல்லவேண்டும் அரசாங்கம் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து காலி முகத்திடலை தலைமைக் களமாகக்கொண்டு நாடு தழுவிய போராட்டங்கள் கடந்த பல வாரங்களாக தொடர்ந்து இடம் பெற்றுவரும் நிலையில் நம்பிக்கையில்லாப்பிரேரணை அல்லது குற்றப்பிரேரணைகொண்டுவந்து ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி இழக்க செய்யும் ஜனநாயக முயற்சிகளும், ஏற்பாடுகளும் மறுபுறம் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்த இரு முயற்சிகளும் ஒன்றுக்கொன்று முரண்தன்மை கொண்டது என்பதைவிட மிக நுணுக்கமான அரசியல் விடயங்கள் தொடர்பில் மக்கள் சக்தியை மோதவிடும் விடயமாக காணப்படுகிறது.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க எடுக்கப்படும் முயற்சி பற்றி முதலில் சுருக்கமாகப்பார்ப்பின் பாராளுமன்றில் அங்கம் பெறும் சகல கட்சிகளையும் ஒன்று இணைத்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும் யோசனையே இடைக்கால அரசாங்கம் என்று கூறப்படுகிறது. இந்த யோசனைக்கு பொதுஜனபெரமுன முன்னணி மற்றும் சுயாதீன அணி என்பன உடன்பட்டிருப்பதாகவும் அதன் அடிப்படையில் பாராளுமன்றில் அங்கம் பெறும் சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி உடன்பட்டிருப்பதாகம் அவர் தலைமையில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எந்தவொரு நிலை-யிலும் தாம் இதற்கு உடன்படப்போவதில்லையென பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் சஜித்பிரேமதாஸ பகிரங்கமாக மேடைகளில் கூறிவருகிறார்.

இது ஒருபுறமிருக்க ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிரா-கவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிரா-கவும் நம்பிக்கையில்லாப்பிரேரணைகளை ஒரே நேரத்தில் கொண்டுவந்து ஆட்சி மாற்றத்தை உருவாக்குவோமென எதிர்க்கட்சியனர் சூளுரைத்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் விடுதலை முன்னணியும் இந்நிலைப்பாடு கொண்டதாகவே காணப்படுகிறது.

நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பாக வேண்டிய ஏற்பாடுகளை கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரன் மேற்கொண்டதாகவும் இந்த முயற்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கியதேசியக்கட்சி, மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய பிர-தான கட்சிகள் ஆதரவு தர இருப்பதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவரவுள்ளதாகவும், ஜனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணையை தான் தயாரிப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். மேற்படி இரு பிரேரணைகளும் தனி நபர் பிரேரணைகளாக ஒரே நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்திருந்தபோதும். கடந்த செவ்வாய்க்கிழமை பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும்போது அவர் உடனிருக்கவில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேணைகளானது இரு விடயங்களை மையப்படுத்தி கொண்டுவரப்படவுள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பதவி இழக்கப்பண்ணுவது. இரண்டாவது விடயம் நிறைவேற்று அதிகாரங்களை தன்னகத்தே வைத்துக்கொண்டு பாராளுமன்றை பலவீனப்படுத்தி சர்வாதிகார ஆட்சி நடத்தும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பத்தில் தன் பதவி விலகப்போவதில்லை தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு தான் எவ்வகையிலும் பொறுப்பில்லை. மக்களின் போராட்டம் தன்னால் உருவாகியதல்ல, என்று கூறியதுடன் இடைக்கால அரசு அமைக்கப்பட்டால் அது தனது தலைமை-யிலையே அமைக்கப்படவேண்டுமென்று கடுந்தன்மையுடன் கூறி வருவதுடன் எந்தவொரு அழுத்தத்துக்கும் அடி பணிந்து நான் பிரதமர் பதவியிலிருந்து விலகப்போவதில்லை. யார் 113 என்ற பெரும்பான்மையை காட்டுகிறார்களோ அப்போது யான் பதவி விலகத்தயாரக இருக்கிறேன். அதற்கு முன் பதவி விலகினால் நாட்டில் பல்வேறு அரசியல் நெருக்கடிகள் வந்துவிடுமென்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மஹிந்தவுக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்பட்டபோதும் அவர் விடாக்கண்டனாகவே நடந்து கொண்டார். அவர் இவ்வாறு நடந்து கொள்வது புதிதான ஒருவிடயமல்ல. நல்லாட்சி அரசாங்கத்தில் 2018 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க இரவோடு இரவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டு மஹிந்த (26.10.2018) பிரதமர் ஆக்கப்பட்டார்.

இந்த நியமனம் அரசியல் அமைப்புக்கு முரணானது என எதிர்க்கட்சிகள் மஹிந்தமீது நவம்பர் 2018 நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை கொண்டுவந்தார்கள். 122 வாக்குக்களால் பிரேரணை வெற்றி கொள்ளப்பட்டது. இந்த பிரேரணையானது பிரதமரும் அவரது மந்திரி சபையும் பெரும்பான்மையை இழந்திருப்பதாக சபாநாயகர் சபையில் அறிவித்தார். அவ்வாறு வெற்றி கொள்ளப்பட்டபோதும் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவினால் பிரதமர் மஹிந்த பதவியிலிருந்து இறக்கப்படவில்லை. ஜனநாயகம் இங்கு நிறைவேற்றப்படவில்லை. ஜனாதிபதி இந்த வாக்கெடுப்பு பற்றி குறிப்பிடுகையில் "அரசியல் அமைப்பின்படி நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவில்லை என்பதனால் மேற்படி வாக்கெடுப்பை நிராகரிக்கிறேன்" என்று கூறியிருந்தார். மீண்டும் நவம்பர் மாதம் (2018) பிரதமர் மஹந்தவுக்கு எதிராக மற்றொரு நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது பிரேரணை 122 வாக்குக்களால் நிறைவேற்றப்பட்டது. இரண்டுதரம் நிறைவேற்றப்பட்டபோதும் பிரதமர் மஹிந்த பதவியிலிருந்து கொண்டிருந்தார். இவ்வாறனதொரு நிலை மீண்டும் வர முடியாது என்று எவராலும் உத்தரவாதம் அளிக்க முடியாது.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை வெற்றி பெறவேண்டுமாயின் ஏற்ற சந்தர்ப்பங்கள் உருவாகவேண்டும். அல்லது உருவாக்கப்படவேண்டும். ஒன்று நம்பிக்கையில்லாப்பிரேரணை பாராளுமன்றில் வெற்றிபெற அறுதிப்பெரும்பான்மை நிரூபிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லையாயின் அது நீர்த்துப்போய் எதிரிகளுக்கு சதகமான நிலையை உருவாக்கிவிடும்.எல்லாமே பாராளுமன்ற பலத்தில்தான் தங்கியுள்ளது.

நம்பிக்கையில்லாப்பிரேரணையை சமர்ப்பித்துள்ள எதிர்க்கட்சியினர் தங்களுக்கு 120 உறுப்பினர்கள் ஆதரவாகவுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். சில சமயங்களில் இன்னும் அதிகமாகலாமென்றும் நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது. ஆனால் பிரேரணை சமர்ப்பிக்கப்படும்போது 50 உறுப்பினர்களே கையெழுத்திட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பாராளுமன்றில் வாக்கெடுப்ப ஒன்று நடத்தப்படுமானால் பொதுஜனபெரமுன அரசாங்கம் வெற்றி கொள்ளுமா? அன்றி ஐக்கியமக்கள் சக்தியோடு சேர்ந்த எதிர் தரப்பினர் வெற்றிபெறுவார்களா? என்பது வெறும் கணக்கியல் தத்துவமாக பார்க்க முடியாது.

பொதுஜன பெரமுன 2020 ஆம் ஆண்டு ஆட்சி அமைக்கும்போது தனது 145 ஆசனங்களுடன் ஏனை கட்சிகளின் ஐந்து உறுப்பினர்கள் உட்பட 150 ஆசனங்களை பலமாகக்கொண்டு ஆட்சியை அமைத்தது. 20 ஆவது திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டபோது 150 உறுப்பினர்களுடன் முஸ்லீம் காங்கரஸ் உறுப்பினர் 4 அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 2 டயனகமஹே 1 புத்தளம் அலிசப்ரி 1 அரவிந்தகுமார் 1 என 10 ஆசனங்கள் ஆதரவளித்த நிலையில் 20 ஆவது திருத்தத்துக்கு 160 வாக்குக்களால் நிறைவேற்றப்பட்டது. இதனால் ஆட்சியாளர்கள் "மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துக்கு மேலாக ஆட்சி நாம் அமைத்துள்ளோம்" என இறுமாப்புக்கொண்டிருந்தார்கள்.

நம்பிக்கையில்லாப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுமாயின் ஆளும் கட்சியாகிய பொதுஜன பெரமுனவிடம் 120 உறுப்பினர்கள் எஞ்சி நிற்பதாக கூறப்படுகிறது. ஏலவே 40 உறுப்பினர்கள் சுயாதினமாக பாராளுமன்றில் இயங்கப்போவதாக ஒதுங்கிப்போயுள்ளனர். ஆளும் தரப்பு கூறியதுபோல் 120 உறுப்பினர்கள் உள்ளதாக எடுத்துக்கொண்டாலும் அதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஷை சேர்ந்த இருவர் இலங்கை முஸ்லீம் காங்கரஸ் 3. ஆகில இலங்கைமக்கள் காங்கிரஸ் 2 என 7 பேர் அரசுக்கு கொடுத்த ஆதரவை தாம் விலத்திக் கொண்டுவிட்டதாக கூறியிருக்கிறார்கள். இந்நிலையில் 113 ஆசனங்களே ஆளும் தரப்புக்கு எஞ்சியிருக்கும்பொதும் அத்தரப்பை சேர்ந்த டலஸ் அழகப்பெரும மற்றும் சரித் ஹேரத் ஆகிய இருவரும் இடைக்கால அரசாங்கம் அமைக்கும் பட்சத்திலையே அரசுக்கு ஆதரவு நல்குவோம் இல்லையாயின் எதிரணியை சார்ந்துவிடுவோம் என எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் ஆளும் தரப்பு பலம் 111 ஆகவே காணப்படுகிறது. நம்பிக்கையில்லப்பிரேரணைக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் போது மேற்படி 111 உறுப்பினர் மாத்திரம் வாக்களித்து எதிர்த்தரப்பில் 114 பேர் வாக்களிப்பார்களானால் அரசாங்கம் கவிண்டு போகும்.

ஆனால் நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு வாக்களிப்பதற்கு 114 பேரை உடன்பட வைக்க முடியமா? என்பது ஒருகேள்வி. துற்போது ஆதரவு தருவதாக சில தரப்பினர் கூறினாலும் இறுதி நேரத்தில் பலர் விலைபோகக்கூடிய சூழ்நிலையும் காணப்படலாம்.

தமிழ்த்தரப்பை பொறுத்தவரை தமிழ்த்தேசிய முன்னணி பிரேரணைக்கு ஆதரவாக கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்றில் நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்படும்போதுபார்த்துக்கொள்வோமென்றுபோக்கு சொல்லியுள்ளனர். மற்றத்தமிழ்த்தரப்பினர் நடுநிலையாக நின்று கொள்ளப்பார்க்கிறார்கள். இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த்தரப்பினரின் நிலைப்பாடு எப்படி இருக்கப்போகிறதென்பது பொறுத்திருந்து பார்க்கப்படவேண்டிய விடயம்.

அரசாங்க பக்கம் திரும்பி பார்ப்போமானால் தாம் தனித்து நின்று இயங்கப்போவதாக கூறிக்கொண்டிருக்கும் சுயாதீன அணியினர் 40 பேரும் உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வார்களா என்று அறுதியிட்டு கூறமு-டியாது. இவர்கள் ஜனாதிபதியுடன் இரகசிய தொடர்பை பேணிவருவதாக ஒரு குற்றச்சாட்டும் இருக்கிறது. அதாவது அவர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க விருப்பம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே மீண்டும் பழையபடி வேதாளம்போல் இவர்கள் அரசாங்கத் தரப்புக்கு மாறலாம். குத்துக்கரணம் அடிக்கலாம், என்ற அவநம்பிக்கையும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல்தான் ஏலவே அரசாங்கத்துடன் முரண்பட்டும் வெளியேற்றப்பட்டவர்களான முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச உதய கம்மன்பில உட்பட்ட 11 பேரும் மஹிந்தவை அரசைவிட்டு வெளியேற்றிவிட்டு ஜனாதிபதியோடு சேர்ந்து இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் நப்பாசையில் அடிக்கடி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருப்பதால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பலிக்கடாவாக்கிவிட்டு கோத்தா ஆட்சியை கொண்டு செல்வதற்காக புதியதொரு தொழில் நுட்பத்தை கையாளப்பார்க்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஏலவே இந்நாட்டு அரசியலில் இவர்கள் தமிழ் விரோத செயற்பாட்டாளர்களாக இயங்கி பல நெட்டூரங்களை செய்ய உடந்தையாக இருந்தவர்கள் என்பது ஜீரணிப்படமுடியாத உண்மைகள். இவர்களை நம்பி நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்ற முயற்சி செய்வது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது. ஊதய கம்மன்பில நம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டுவரும்படி பல தடவைகள் பிர-தான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தியை வலியுறுத்தி வந்தாலும் அவரின் நிலைப்பாட்டில் ஒரு திடமன உறுதியை நம்புவது முடியாத காரியம். எனவேதான்.

எதிர்கட்சியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்பு வெறும் எதிர்க்கட்சி தரப்பினரிடம் மட்டுமன்றி இன்றைய சூழலில் இருதரப்பிரிடமும் நம்பியிருக்கவேண்டிய தேவையும் அவசியமும் உள்ளது.

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

(33ம் பக்கம் தொடர்ச்சி)

# பிரேரணைகள் முடிவு தருமா?

**- திருமலை நவம்**

ஜனாதிபதிக்கெதிராக குற்றப்பிரேரணையொன்றை கொண்டுவரவேண்டுமென பல தரப்பினராலும் ஆவேசமான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் மேற்படி குற்றப்பிரேரணையை பாரளுமன்றில் நிறைவேற்றக்கூடிய பலம் எதிர்த்தரப்பினர்க்கு உண்டா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயம். இப்பிரேரணை வெல்லப்படவேண்டுமாயின் பிரேரணைக்கு ஆதரவாக பாராளுமன்றில் 150 உறுப்பினர்கள் வாக்களிக்கவேண்டும் ஒன்று குறைந்தாலும் அப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டதாகவே கருதப்படும். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெவர்த்தனா உருவாக்கிய 1978 ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் பலமே இதில்தான் தங்கியுள்ளது. இதை மாற்றியமைக்கவே 19 ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்தார்கள். அதை இரத்து செய்யும் முகமாகவே மீண்டும் 20 ஆவது திருத்தத்தை பொதுஜன பெரமுன கொண்டுவந்தது. இத்திருத்தத்தின் காரணமாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மீண்டும் மீள் நிரப்பு செய்யப்பட்டது. இத்திருத்தத்துக்கு 160 பேர் ஆதரவாக வாக்களித்திருந்தார்கள். இதையே தற்பொழுது 21 சீர்திருத்தத்தின் மூலம் இல்லாது ஆக்கவேண்டுமென பிரே-ரணை கொண்டுவரப்படவுள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டே ஜனாதிபதி மீதான குற்றப்பிரேரணையை வெற்றி பெற வைக்கமுடியும் என்பதனால் தற்போதைய சூழ்நிலையில் குற்றப்பிரேரணையை கொண்டுவருவது உசிதமற்றது என்ற யதார்த்தம் கருதியே மாற்றீடாக ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லப்பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கை இல்லாப்பிரேரணை சாதாரண பெரும்பான்மையினால் (113) நிறைவேற்ற முடியும் என்பதனால் இவ்வழி பின்பற்றப்பட்டிருக்கிறது. இலங்கை அரசியல் சாசனத்தினபடி ஜனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு அவரை பதவி இறக்க முடியமா? என்பதை சட்ட அறிஞர்களே வியாக்கியானப்படுத்த முடியும்.

ஏனெனில் ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த அதிருப்திக்குழுவொன்று ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு எதிராக குற்றப்பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு இரகசியமான முறையில் ஏற்பாடுகளை மேற்கொண்டபோது அந்த விடயம் முதல் நாள் இரவே கசிந்து குற்றப்பிரேரணையை கொண்டுவரமுடியாத சந்தர்ப்பங்களும் இலங்கையில் இடம் பெற்றுள்ளது.

ஆளும் தரப்புக்குள் இருந்து கொண்டு ஆளும் அரசாங்கத்தையே சதி மூலம் கவிழ்த்த சந்தர்ப்பங்களும் இலங்கை அரசியலில் கற்றுக்கொண்ட பாடங்களாக காணப்படுகிறது.ஆகையால் அரசாங்கத்தை கவிழ்க்கவோ அன்றி ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவோ அவர்களது சகாக்களே உடந்தையாக இருக்கமாட்டார்கள் என்று கூறமுடியாது. 1964 திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்க பிரமராக பதவி வகித்த காலத்தில் சிம்மாசனப்பிரசங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது பிரதமர் ஸ்ரீமாவின் நம்பிக்குரியவராக இருந்த சீ.பி.டி சில்வா தன்னுடைய சகாக்கள் 14 பேரையும் சேர்த்து சிம்மாசனப்பிரசங்க உரைக்கு (1964.12.3.) எதிர்த்து வாக்களித்ததன் காரணமாக அரசாங்கம் கவிழ நேர்ந்தது. அதுபோன்று மேற்படி 40 சுயாதீனக்குழுக்களும் மற்றும் 11 எதிரணியினரும் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்க முற்படலாம். எதையுமே திட்டவட்டமாக கூறமுடியாது.

தற்போதைய அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதிக்கெதரான நம்பிக்கையில்லாப்பிரேரணையும் வெற்றிபெற வாய்ப்புண்டு என்ற நம்பிக்கையின்பேரிலையே எதிாக்கட்சியினர் இரு பிரேரணைகளை-யும் பாரளுமன்றில் சமர்ப்பித்துள்ளனர். கொண்டுவரப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும் அரசாங்கத்துக்கெதிரான பிரேரணை தோற்கடிக்கப்பட்டால் ஜனாதிபதிக்கெதிரானபிரேரணையும் தோற்கடிக்கப்படும் என்பதற்கு மறுதலிப்பு கூறமுடியாது.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டு ஜனாதிபதிகெதிரான பிரேரணை தோற்கடிக்கப்படாத நிலையொன்று ஏற்படுமாயின் ஜனாதிபதி தனது அதிகாரத்தை முழுமையாக பயன்படுத்தும் அதிகாரம் கொண்டவராக மாறிவிடுவார்.

மறு தலையாக ஜனாதிபதிக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்துக்க எதிரானது பிரேரணை நிறைவேற்றப்படவில்லையாயின். ஏன்ன நிகழும் என்பது தர்க்க முறையாக ஆராயப்படவேண்டிய விடயம்.

ஒரு நிலையில் அரசாங்கத்துக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கெதிரான பிரேரணை தோல்வியுறுமாயின் ஜனாதிபதி தனக்கு உடந்தையான விசுவாசமான அரசாங்கத்தையும் மந்திரிசபையையமே அமைக்கவே முயற்சிப்பார். பாராளுமன்றுக்கும் ஜனாதிபதிக்கும் இடை-யில் எப்பொழுதும் பிணக்கு இருந்து கொண்டேயிருக்கும். இதற்கு சிறந்த உதாரணம் திருமதி சந்திரிக்கா அம்மையார் காலத்தில் 2001 ஆம் ஆண்டு ரணில் தலைமையிலான ஐக்கியதேசிய முன்னணி ஆட்சி அமைத்த நிலையில் 2006 ஆம் ஆண்டுவரை பதவிக்காலம் ரணிலுக்கு இருந்தபோதும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப்புலிக்கு மிடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையானது தேசியரீதியில் பாதகத்தை உண்டாக்கும் என்பதை காரணம் காட்டி 2004 ல் ரணில் தலைமையிலான பாராளுமன்றை அம்மையார் கலைத்தார்.

இதே போன்றே 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்ட பனிப்போர் காரணமாக ஒக்டோபர் 26 ல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு எதிர்க்கட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் ஆக்கிய விவ-காரமானது நாட்டில் பல குழப்ப நிலைகளை உருவாக்கியிருந்தது. இத்தகைய சவால் நிறைந்த சூழ் நிலையில் எந்த அழுத்தம் காரணமாகவும் யான் பதவி விலகப்போவதில்லை என பிரதமரும் இன்றைய நெருக்கடி நிலைக்கு புலம் பெயர் அமைப்புக்கள் மூல காரணமென்றும், அரசியல் சாசனத்தின் பிரக-ாரம் பதவியை விட்டுப்போகமாட்டேன் என ஜனாதிபதியும் கூறிக்கொள்ளும் அழுங்கு நிலைக்கு போராட்டங்களும் பிரேரணைகளும் பதில் கூறுமா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

## நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# அன்பின் தொனி - 650

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

### அருவருப்புகளை தேவன் வெறுக்கிறார்

தேவனுக்குப் பிரியமில்லாத அருவருப்பான வணக்கங்களையும், வழ்பாடுகளையும் நாம் செய்வது தவறு என்பதைச் சரிவர புரிந்து நடக்கவேண்டும்.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேரும்போது. அந்த ஜாதிகள் செய்யும் அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக்கொள்ளவேண்டாம். தன் மகனையாவது தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணு கிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன், இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனா-கிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார். உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ உத்தமனாயிருக்கக்கடவாய். நீ துரத்திவிடப்போகிற இந்த ஜாதிகள் நாள்பார்க்கிறவர்களுக்கும் குறிசொல்லுகிறவர்களுக்கும் செவிகொடுக்கிறார்கள், நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார். **- உபாகமம் 18: 9-14**

கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக, அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக ஆமென் என்று சொல்லக்கடவர்கள். **- உபாகமம் 27: 15**

சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டுகிறயாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக,
**- சங்கீதம் 97: 7**

எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள், என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள். வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள், ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள், தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். **- எரேமியா 2: 11**

### விக்கிரகங்களுக்கு விலகி வாழவேண்டும்

நாம் தேவனால் உண்டாயிருக்கிறோமென்றும், உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம். அன்றியும், நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து என்னப்பட்ட சத்தியமுள்ளவருக்குள்ளும் இருக்கிறோம், இவரே மெய்யான தேவனும் நித்தியஜீவனுமாயிருக்கிறார். பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங் களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென். **- 1 யோவான் 5: 19-21**

ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான், நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக் காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.
**- வெளிப்படுத்தல் 21: 7-8**

நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார், தமக்குச் சித்தமானயாவையும் செய்கிறார். அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும்கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது. அவைகளுக்குக் கைகளிருந்தும்தொடாது, அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது, தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப்போலவே இருக்கிறார்கள். **- சங்கீதம் 115: 3-8**

அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது. அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது. அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை. அவை-களைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள்யாவரும், அவைக ளைப்போல் இருக்கிறார்கள். **- சங்கீதம் 15: 15-18**

இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? கன்னான் ஒரு சுரூபத்தை வார்க்கிறான், தட்டான் பொன்தகட்டால் அதை மூடி, அதற்கு வெள்ளிச்சங்கிலிகளைப் பொருந்தவைக்கிறான். அதற்குக்கொடுக்க வகையில்லாதவன் உளுத்துப்போகாத மரத்தைத் தெரிந்துகொண்டு, அசையாத ஒரு சுரூபத்தைச் செய்யும்படி நிபுணனான ஒரு தச்சனைத் தேடுகிறான். நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையா? ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையா? பூமி அஸ்திபாரப்பட்டது முதல் உணராதிருக்கிறீர்களா? அவர் பூமி உருண் டையின்மேல் வீற்றிருக்கிறவர், அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போல இருக்கிறார்கள், அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி, அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்.
**- எசாயா 40: 18-22**

*தொடரும்...*

# கடந்தவையும் கடப்பவையும் (30)

**- உமா மோகன் -**

நாட்டமில்லா வீட்டுவேலை செய்யும் அவள்
நாட்டமது காட்டுவது அவள்

வீட்டாரைச் சுமந்து வரும் ரயிலில்த்தானாம்
நேற்றுவரை ஒழுங்காக வந்த ரயில்

இன்று ஏன் வரவில்லை என்று அவள்
அன்று முழுநாளும் தேடுகின்றாள் - காலம்

தவறி வந்தபோதும் கையசைத்து
மகிழ்ந்த பின்பே வேலைகளைத் தொடருகின்றாள்

பார்த்த அந்த மகிழ்வோடு பழசுகளை
மீட்டெடுத்து அந்த நினைவோடு வாழ்வாள் போலும்

புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் எங்களைப்போல் -
தாய்
நிலத்தில் இருந்தபோதும் வந்ததுதான் - அன்று

அவளைப் பார்த்தபோது - அன்றைக்கு,

ஆண்டுகள் எத்தனை தாண்டியாச்சு - அவளை
வேண்டாம் என்றே தள்ளி வைச்சு

பிறந்து முப்பத்தோராம் நாள் எப்பவரும்
பறக்கவென காத்திருந்த தம்பதியர்

எடுத்துச் சென்றாராம் அடுத்தநாளே - அவளில்
படுத்துக் கொண்டே சென்றிருப்பேன் - தொடர்ந்து

ஆறு ஆண்டுகள் அடிக்கடி அங்குமிங்கும் - நல்ல
பேறு என்றே அதைச் சொல்லவேண்டும்

'யாழ்தேவி' அவள் பெயர் கேட்டால்
பல்லில்லாத் தாத்தாவும் துள்ளி நிற்பார் - அவர்

அந்தநாள் நடந்ததைச் சொல்வதற்காய் - அன்று
எந்தநாளும் அவள் அழகு - அவள்

சென்று வந்த இடம் எல்லாம்
கொண்டிருந்த அழகினாலோ ஒட்டியது!

பிரித்தானியர் தந்த பொக்கிசம் அவள்
கனடாவின் அதி சக்திவாய்ந்த இஞ்சினோடு
சுற்றியவள்

'யாழ்தேவி' என்ற பெயர் கொண்டு - அன்று
வீச்சாக வலம் வந்தாள் பலவூர்கள்

அதிகாலைக் குளிர்காற்று உடல் வருட
மெதுவாகப் போயிருந்து யன்னல் ஓரம்

விடிகாலைச் சூரியக் கதிர்கள் அவை
விரிந்து எழும் காட்சியை - பரந்த

புல்வெளியோடும் தூரத்து மரங்களுக்கூடும்
பார்க்க வரும்
எல்லையில்லா ஆனந்தமே - மாலையில்

சிவப்புக் கம்பளத்துள் ஒளித்துக்கொள்ளும் -
அந்த
அழகுச் சூரியனும் அதிசயம் தான் - மேலும்

அரிக்கன் விளக்குகளோடு அசைந்து செல்லும்
வரிசையான மாட்டு வண்டிகளும் - ஆங்காங்கே

குறுக்குக்கட்டோடு குளிக்கும் சிங்களத்து
சிறு குயில்களும் கூட மிக அழகே - இவை

அன்றைய யாழ்தேவி காதலர்கள்- எம்
இன்றைய தாத்தாக்களின் நினைவிலும்
நிற்பவைதான்

கொழும்பு யாழ்ப்பாணம் இரண்டையும் இணைத்த
பெரும் சக்திவாய்ந்த உறவுப்பாலம் - அன்றைய

இளைஞர்களும் யுவதிகளும் கனதூரம்
களைப்பு இன்றி பயணம் செய்து

தத்தமது வேலைகளை உத்தமமாய்
செய்வதற்கும் - சிலர்
மெத்தப் பெரும் விருப்போடு மனமறிந்து

நல்வாழ்வில் இணைவதற்கும் உதவியாய்
இருந்ததோடு
பல்வகைக் கலப்புத் திருமணங்கட்கும்
கைகொடுத்தாள்

என்பதிலும் பெரும்பங்கு அவளுக்குண்டாம்
என்கிறார்கள் அவளின் அன்றைய காதலர்கள்

'கலாச்சாரம் அறியவைப்பாள் யாழ்தேவி' - இதை
வெளிநாட்டவர் சொல்வதுண்டாம்

பயணிகட்கு யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவு-
களை
பரிமாறுவாள் யாழ்தேவி பக்குவமாய் -
உண்மையிது

கமகமக்கும் கட்டுச்சோறு இன்றும் ஞாபகத்தில்
பருப்புக்கறியும் பச்சைநிறக் கத்தரிக்கறியும் -
ஆகா

திறக்கும் போதே வாழையிலை சேர்ந்துவெந்த
வாசனையும் - இன்றும்
நினைக்கும் போது நாவூறும் - தந்தை

ஒருபக்கம் நானும் மறுபக்கம் சிறுகையால்
இடையிடையே ஊட்டியும்தான்விடுவார் - அங்கு

அம்மாவோ சின்னனோடு சிரமப்பட
நல்லாத்தான் நாங்கள் சாப்பிடுவோம்

பல்வகைச் சிற்றுண்டிகளோடு - நன்கு
வெந்த கடலையும் தனிருசியே அங்கு

எத்தனை நாட்கள் அவளோடு நாம்
அத்தனையும் நினைவில் இல்லை - ஆனாலும்

எழுபத்துஏழில் ஆறுவயது எனக்கு
வெட்டியவர் வீழ்ந்து போக எட்டப்போய்
ஏற்றினார்கள்

யாழ்தேவியில் மெத்தப் பசி அன்று
ஏழ்மையின் பசி இப்படித்தான் என்று

உணர்ந்த நாள் அன்றாகத்தான் இருக்கும்
உணவிற்காய் அழுதபோது - காசிருந்தும்

கடைகள் இல்லை தண்ணீரும் தீர்ந்துபோக
ஓடோடி வந்தாள் யாழ்தேவி

பச்சைநிற ஆனை வாழைப்பழமும் பாணும்
தண்ணீருமென
அத்தனையும் தந்து அரவணைத்து உயர்
பாதுகாப்போடு

கொண்டுவந்து சேர்த்தாள் எம்மை - எமைக்
கண்டவுடன் கொண்டாடினார் உயிரோடு
வைத்தே

ஒப்பாரி ஒன்று உற்றவர் அன்று - வாழ்நாளில்
எப்போதும் இது மாறாத வடு

மறக்க முடியா இந்நிகழ்வை என்றும்
நினைக்க அன்று உதவியள் யாழ்தேவி...

(தொடரும்)

# இவ்வார ராசிபலன்

## 06-05-2022 வெள்ளி தொடக்கம் 12-05-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** மாற்றுச் சிந்தனைக் உதயமாகும் வாரம். விலகி சென்றவர் விரும்பி வருவர். வரன் வாயில் தேடி வரும். அந்நிய தேச பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். செயல்பாட்டில் கவனம் தேவை. ஆபரணச்சேர்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். வீண் வம்புகள் அகலும். எதிர்கால சிந்தனைகள் ஏற்றம் பெறும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பணியாளர் ஒத்துமைப்பு கிட்டும். கோரிக்கைகள் நிறைவேறும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தொலைதூரப் பயணம் லாபம் தரும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. உதவிகள் கிடைக்கும். கல்வியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். புதிய முதலீடு உருவாகும். பகையாளிகளின் நிலை மாறும். முன்னேற்றம் அதிகரிக்கும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கற்பனை வளம் அதிகரிக்கும். சட்டம் சாதகமாகும். திருப்தி ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நட்சத்திர தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,8
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**ரிஷபம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய வாரம். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். சேமிப்பு வளரும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். தொழில் லாபம் உண்டு. தொட்ட காரியம் ஜெயமாகும். சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராகும். பேச்சில் நிதானம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. நினைத்த விஷயம் நிறைவேறும். ஆபத்துக்கள் விலகும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பங்குச்சந்தையில் பலன் கிடைக்கும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். புதிய முயற்சி பலிதமாகும். ஊதிய உயர்வு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வளமான சிந்தனை உருவாகும். கருத்து வேறுபாடுகள் விலகும். இடையூறு அகலும். வேதனைகள் சாதனைகள் ஆகும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். கடன் விஷயத்தில் கவனம் தேவை. திருமண பேச்சு முடிவிற்கு வரும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். கலகலப்புக்கூடும். ஆசைகள் நிறைவேறும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q




**மிதுனம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். இனியத் தகவல் வந்து சேரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். சந்தோஷம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வழக்கமான பணியில் மாற்றம் வரும். சுபச்செய்தி வரும். பிரபல்ய ஆசை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதிய நட்பு உருவாகும். வசந்தம் தேடி வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். உற்சாகம் மேலோங்கும். எதிரிகள் தொல்லைகள் ஒழியும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். முன்னேற்றமான காலம். நட்பு வட்டம் விரிவடையும். சுபச்செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். மாற்று மருத்துவம் பலன் தரும். வரவுகள் மிகுதியாகும். பெற்றோர் நலனில் அக்கறைத் தேவை. உடல் சோர்வு நீங்கும். திருஷ்டிகள் விலகும். செல்வச் செழிப்பு உயரும். விவேகம் கைக்கொடுக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உதயமாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். மனமகிழ்ச்சி கிட்டும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பெண்களுக்கு அணிகலன் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இளம்ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,G




**கடகம்:** ஆளுமைத்திறன் அதிகரிக்கும் வாரம். திருப்தி தரும் காலம். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிநதனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களால் நன்மை உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். உதவும் குணம் அதிகரிக்கும். பிரச்சனைகள் விடுபடும். பதவி உயர்வு ஏற்படும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். இடையூறுகள் அகலும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத்தேவை அதிகரிக்கும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உள்ளம் மகிழும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசையார்வம் கூடும். பிள்ளைகளின் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். புதிய தொழில் அமையும். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். வெளியூர் பயணம் நன்மை தரும். வெளிநாட்டு நபரால் வெகுமதி உண்டு. போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். வாகன மாற்றம் நன்மை தரும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியைக் கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். சகோதர ஒற்றுமை அதிகரிக்கும். ஆசைகள் நிறைவேறும். பங்குச்சந்தை லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ராகு பகவான், அதிர்ஷ்ட எண்: 3,8,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,C




**சிம்மம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் சிறக்கும். விரயம் குறையும். சகோதாரி வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். பதவி உயர்வு தாமதமாகும். வார்த்தைகளில் கவனம் தேவை. களவு போன பொருள் திரும்ப கிடைக்கும். வயிறு உபாதைகள் வந்து போகும். திடீர் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும். முயற்சிகள் பலிதமாகும். பெற்றோர்களால் பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். சாதனையை சந்திப்பீர்கள். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். அரசியல் ஆர்வம் ஏற்படும். விரயங்கள்


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

அதிகரிக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உற்சாகம் களை கட்டும். உயர் பதவி யோகமுண்டு. தடைகள் அகலும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். நல்ல செய்திகள் நாடி வரும். விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆழமான மேன்மைகள் அமையும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். பாக்கிகள் வசூலாகும். உறவினர்களால் சஞ்சலம் ஏற்படும். முயற்சிகளில் தாமதமாகும். பங்குச்சந்தை லாபம் தரும். ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். பயணத்தில் கலனம் தேவை. முயற்சிகள் வளர்ச்சி அடையும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. நல்லச் செய்தி நாடி வரும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,6,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**கன்னி:** மேன்மைகள் சந்திக்கும் வாரம். தடைகள் விலகும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலை பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். தனலாபம் பெருகும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். உடல்பொலிவு கூடும். முதலீடு தவிர்க்கவும். வரவு திருப்தி தரும். வழக்குகள் தாமதமாகும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் கிடைக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். தொழில் வளர்ச்சி கூடும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். மதிநுட்பம் தேவை. உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் வாங்கலில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. பிள்ளைகள் கல்வி மேம்படும். பதவி உயர்வு தாமதமாகும். செய்த்தொழிலில் கவனம் தேவை. மற்றவர்களால் தொல்லை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரியம் வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். ஏற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவன், அதிர்ஷ்ட எண்: 6,7,12
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B




**துலாம்:** சந்தோஷமான நிகழ்வுகள் அமையும் வாரம். பொன்னான காலம். அன்னிய தேச பயணம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். நினைத்த விஷயம் நிறைவேறும். பணமுயற்சி பலன் தரும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். ஊக்கம் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. கல்வியில் மேன்மை உண்டு. கடன் வசூலாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சேமிப்பு உயரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சீறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்ப ஒற்றுமை மேம்படும். பொருளாதாரம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். தந்தை உடல்நலனில் அக்கறை தேவை. வியாபாரம் விருத்தியாகும். வெளியூர் பயணம் உண்டு. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உடல்நலம் சிறக்கும். தேகப்பலன் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. வாழ்த்துக்கள் வந்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காமதேனு, அதிர்ஷ்ட எண்: 4,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q




**விருச்சிகம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்தி வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நாட்டம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வாகன மாற்றம் உண்டு. பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பொது வாழ்வில் புகழ் கூடும். பித்ருக்கள் சாபம் நீங்கும். வீண்செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தான தர்மங்கள் பலன் தரும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகளின் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குதூகலம் தாண்டவமாடும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,2,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**தனுசு:** முன்னேற்றம் கிடைக்கும் வாரம். லாபமான காலம். தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புதுமுயற்சிகளை தள்ளிப்போடவும். எதிரிகளால் ஏற்றம் உண்டு. பங்குச்சந்தையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். தேவைகள் அதிகரிக்கும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல் நலம் சீராகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நவதேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G

(தொடர்ச்சி 38ம் பக்கம்)

## Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**



## Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
**300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2**
**Tel: (416) 502-2029, www.carefirstfht.com**



# 37ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். சத்தியமூர்த்தி சத்தியசீலன்

(ஐயனார் கோவிலடி – சுருவில்)

(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்சி)



இன்றிலிருந்து முப்பத்தேழு வருடங்களுக்கு முன்னால் ஒரு சித்திரா பௌர்ணமி நாளில்
உன் இதயத்தை துளைத்துச் சென்ற அந்த சிங்களச் சிப்பாயின் சன்னங்கள்
இன்னும் இன்னும் எத்தனையோ ஆயிரம் உயிர்களை குடித்துக் கொண்டே இருக்கின்றன
ஆமாம் சகோதரனே, வற்றாத நிலாவரை ஊற்றைப் போல நம் அயல் நாட்டு அரசுகள்
ஆயுதங்களை அள்ளி அள்ளி இறைப்பதால் சிங்களச் சிப்பாயிகளின் துப்பாக்கிகள்
இன்னும் சீறிக்கொண்டு இருக்கின்றன
இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உன் சிதைத்த நெஞ்சிலிருந்து
சிந்திய குருதியின் கோரமும் முனகியபடி அடங்கிய உன் குரலும்
இன்னும் எங்களுக்கு கேட்டும் ஒலியாக சேர்ந்தே வருகின்றன...

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

மலர்வு: 25-12-1957

உதிர்வு: 05-05-1985

## இவ்வார ராசிபலன்


(36ம் பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** வருமானமும் வெகுமானமும் சேரும் வாரம். தேவைகள் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெறும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். விரோதங்கள் விலகும். வீண் வம்புகள் அகலும். கூட்டுத்தொழில் லாபம் தரும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித்தரும். மருத்துவச் செலவு குறையும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் செலவுகள் அதிகமாகும். தாய்வழி தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் நிறைவேறும். வரன் வாயில் தேடி வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். வாழ்வில் வசந்தம் கூடும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. பிள்ளைகளால் தனவரவு உண்டு. இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. வழக்குகள் சாதகமாகும். வெகுமானம் கிடைக்கக்கூடிய காலம். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெருமைமிக்க காலம். வறுமையின் வாட்டம் குறையும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். பெண்களால் பெருமை சேரும். அவமானங்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் திருப்தி தரும். பணப்பற்றாக்குறை நீங்கும். கொண்டாட்டங்கள் கூடும். திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். பிள்ளைகள் வழியல் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,E




**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். சாதகமான வாய்ப்பு அமையும். ஆண்களின் அதிகாரம் உயரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பணிசெய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். வாகன மாற்றம் ஏற்படும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். வரவுகள் மிகுதியாகும். உடல்நலம் சீராகும். மாற்று மருத்துவம் பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவு போகும். சுபச்செய்தி தேடி வரும். நட்பு வட்டம் விரிவடையும். வாயில் தேடி வரன் வரும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பங்குத்தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். குடும்பச் சுமை குறையும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பிரச்சினைகள் முடிவுக்கு வரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**மீனம்:** சிறப்போடும் பொறுப்போடும் செயல்படும் வாரம். எண்ணங்கள் நிறைவேறும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புகள்
அதிகமாகும். வியாபாரம் மந்தமாக இருக்கும். விவசாயம் பலன் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கிருபைகள் சேரும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்பார்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். விரயம் குறையும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. சுபிட்ஷம் பெருகும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில்
நிதானம் தேவை. பதவி உயர்வு தாமதமாகும். சாதனையை சந்திப்பீர்கள். பொருள் வரவு ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். புதிய தொழில்
வாய்ப்பு ஏற்படும். பெற்றோர்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலி-தமாகும். நெருக்கடிகள் குறையும். நல்ல செய்திகள் நாடி வரும். நீண்ட நாள் கனவு
நிறைவேறும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# 23ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
**06-08-1942**

மறைவு:
**21-04-1999**

திதி: 07-05-2022

# அமரர். சதாசிவம் சிவலிங்கம்

**(வேலணை வடக்கு சோழாவத்தை)**

23 ஆண்டுகள் சென்றாலும் ஒரு வினாடி கூட
விட்டு விடாமல் எங்களைப் பாதுகாக்கும் தந்தையே
உங்களை நினைக்காத நாள் தான் எது?
அன்பும் பண்பும் பாசமும் அறிவும் கொண்டு எம்மை
ஆளாக்கிய தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய
என் நாளும் இறைவனை வேண்டுகிறோம்.
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீங்கள் எங்களை
என் நாளும் நேசிக்கும் பண்போடு வாழ்ந்தீர்கள்.
ஆண்டுகள் பல கடந்தாலும் ஆறாத துயரம் எம்மை
விட்டு நீங்காது...

தகவல்: மனைவி - இராசலட்சுமி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

LOOKING FOR YOUR Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1361 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 6, 2022

## Ontario's NDP pledges free or low-cost dental care for all low- income families if elected in June 2nd Provincial Election

## மாகாணத் தேர்தலில் என்டிபி கட்சி ஆட்சிக்கு தெரிவானால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு இலவச அல்லது குறைந்த கட்டண பற் சிகிச்சைத் திட்டம் - *ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் தெரிவிப்பு*



"எதிர்வரும் யூன் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள ஒன்றாரியொ மாகாணத் தேர்தலில் என்டிபி கட்சி ஆட்சிக்கு தெரிவானால் குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு இலவச அல்லது குறைந்த கட்டண பற் சிகிச்சைத் திட்டம் அறிமுகமாகும். மாகாண பாராளுமன்றத்தில் சட்டமூலமாகக் கொண்டுவரப்பட வுள்ள இந்த திட்டத்தினால் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள இலட்சக் கணக்கான குறைந்த வருமானம் பெரும் குடும்பங்கள் பயனடையவுள்ளன"
இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ என்டிபி கட்சித் தலைவர் அன்றியா ஹாவார்த் .
இன்று பிற்பகல் ரொறன்ரோ மாநகரில் இயங்கிவரும் தமிழ் ஊடகங்களின் பிரதம ஆசிரியர்களோடு அவர் நடத்திய நடத்திய ஊடகச் சந்திப்பின்போதே அன்றியா இவ்வாறு தெரிவித்தார்.
*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*




## New highway 413 in Greater Toronto Area will reduce roundtrip drive times by an hour each day

## ரொறன்ரோப் பெரும்பாகப் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய 413 நெடுஞ்சாலை தினமும் ஒரு மணிநேரம் சுற்றுப்பயண நேரத்தைக் குறைக்கும்

ரொறன்ரோப் பகுதியில் அமைக்கப்படவுள்ள புதிய 413 நெடுஞ்சாலை வாகன நெரிசலைக் குறைத்து ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரம் சுற்றுப்பயணத்திற்கான எமது நேரத்தையும் குறைக்கும் என்று ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் கடந்த 4ம் திகதி புதன்கிழமை புதிய 413 நெடுஞ்சாலைக்கான நிர்மாண வேலைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.
*(உள்ளே விபரமான செய்தி 25ம் பக்கத்தில்)*

## Former YRDSB Chair Juanita Nathan seeks representation for residents of Ward 7 in the City of Markham

## முன்னாள் யோர்க் பிராந்திய கல்விச்சபைத் தலைவர் யூவனீட்டா நாதன் மார்க்கம் நகரத்தின் ஏழாம் வட்டாரத்தில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுவர முயற்சி



தற்போதைய யோர்க் பிராந்திய கல்விச்சபையின் முன்னாள் தலைவரும் மற்றும் தற்போதைய அறங்காவலரும் தமிழ் பேசும் சமூகசேவையாளருமான யூவனீட்டா நாதன் அவர்கள், மார்க்கம் நகரின் ஏழாம் வட்டாரத்துக்கான அடுத்த நகரசபை உறுப்பினராக ஆவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்.
*(உள்ளே விபரமான செய்தி 14ம் பக்கத்தில்)*

## ஒன்றாரியோ மாகாண தேர்தலில் மீண்டும் களம் இறங்கியுள்ள அரிஸ் பாபிகியன் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார்



ஒன்றாரியோ மாகாண தேர்தலில் மீண்டும் களம் இறங்கியுள்ள மக்கள் சேவகர் அரிஸ் பாபிகியன் தனது பிரச்சாரத்தை ஆரம்பித்தார்
300க்கும் மேற்பட்ட **Scarborough - Agincourt** வாக்காளர்கள், சமூகத் தலைவர்கள், வணிகத் தலைவர்கள் மற்றும் ஊடகப் பிரதிநிதிகள், ஆகியோர் மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளரும் **MPP** யுமான **Aris Babikian** அவர்களது மறுதேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கும் ஒரு திறந்தவெளி கூட்டத்தில் கடந்த சனிக்கிழமையன்று கலந்து கொண்டனர்.
**MPP**க்கள் **Raymond Cho (Scarborough North), Vincent Ke (Don Valley North), Billy Pang (Markham-Unionville), Vijay Thanigasalam (Scarborough-Rouge Park)** மற்றும் **Christina Mitas (Scarborough-Centre)** ஆகியோர் கலந்து சிறப்பித்த இந்த அவர் கூட்டத்தில் உரையாற்றினர். *(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker

## கனடாவின் கிங்ஸ்டன் நகரில் றோயல் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயின்ற கெடற் அதிகாரிகள் நால்வர் நள்ளிரவில் நீரில் மூழ்கி மரணம்



கடந்த 29ம் திகதி வெள்ளிக்கிழமை அன்று கனடாவின் கிங்ஸ்டன் நகரில் றோயல் இராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயின்ற கெடற் அதிகாரிகள் நால்வர் நள்ளிரவில் நீரில் மூழ்கி மரணத்தை தழுவியுள்ள சம்பவம் கனடா முழுவதிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஜாக் ஹோகார்த், ஆண்ட்ரே ஹோன்சியூ, ப்ரோடன் மர்பி மற்றும் ஆண்ட்ரேஸ் சலேக் **(Jack Hogarth, Andrei Honciu, Broden Murphy, & Andrés Salek )** அகிய நால்வருமே இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்கள் ஆவார்கள். நள்ளிரவு நேரத்தில் பயிற்சிக் கல்லூரியில் இருந்த இராணுவ வாகனமொன்றில் இந்த நால்வரும் ஏரிப் பக்கம் ஏன் சென்றார்கள்? எவ்வாறு இவர்கள் பயணித்த இராணுவ வாகனம் நீரில் மூழ்கியது என்பது குறித்து விசாணைகள் நடந்து வருவதாகவும் அறியப்படுகின்றது.
இந்த விபத்து தொடர்பாக தங்கள் அதிர்ச்சியையும் அனுதாபவத்தையும் தெரிவிததுள்ள அரசியல் தலைவர்களில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ. கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆன்ந்த் ((( -இவர் தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழ்ப் பெண்மணி))) மற்றும் ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.
இந்த நீர் விபத்து ஒன்றாரியோ ஏரி மற்றும் சென் லோறன்ஸ் ஆறு ஆகிய இரண்டும் சந்திக்கும் புள்ளியில் இடம்பெற்றுள்ளதாகவும் இராணுவ அதிகாரிகள் நடத்திய விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.
மேற்படி விபத்தில் கொல்லப்பெற்ற இந்த நான்கு பயிற்சியில் இருந்த "கடற் அதிகாரிகளும் தங்கள் இறுதிக் கட்ட பயிற்சியில் இருந்தார்கள் என்றும் அவர்கள் இன்னும் - ஒரு சில வாரங்களில ராயல் மிலிட்டரி கல்லூரியில் பட்டம் பெற்றதைக் கொண்டாடியிருப்பார்கள், அடுத்த நாள், அதிகாரிகளாக நியமிக்கப்ட்டிருப்பார்கள் என்றும் இறந்தவர்களோடு ஒன்றாக இராணுவ கற்கை நெறியில் ஈடுபட்டுள்ளள ஏனைய பயிற்சி நிலை கடற் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று அறியப்பட்டுள்ளது.

*(தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)*